# சுவடுகள்

உள்ளே
கமிலோ ஜோஸ் செலா
பாலு மகேந்திரா
வ.ஐ.ச.ஜெயபாலன்
பானுபாரதி
கி.பி.அரவிந்தன்
மணிமாறன்
புர்ஹான் கர்குற்லி
வேதாந்தி
கோகுலன்
மற்றும் சிலர்

RAYA
87 RUE DE COLOMBE[illegible]
92600 ASNIERES [illegible]
- SEINE ; FRAN[illegible]



## வெலிக்கடைக் கம்பிகளின் பின்னால்.......,

பூலை'83 படுகொலையில் தப்பிய ஒருவரின்
நேரடி அனுபவம்

Raya

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுகள் வாசகர்கள் பலரது சந்தா அண்மையில் முடிந்திருக்கிறது. அண்மையில் புதிதாகச் சேர்ந்த சந்தாதாரர்கள் சிலரது சந்தாவும் இதுவரை கிடைக்கவில்லை. சுவடுகளின் ஐரோப்பிய வாசகர்கள் சிலரும் இவ்வாறு சந்தா செலுத்தாமல் இருப்பது மிகுந்த நெருக்கடியை உண்டாக்குகிறது. சிலர் சுவடுகள் பற்றிக் கொண்டுள்ள ஆர்வத்தின் வெளிப்பாட்டால் புதிய சந்தாக்களைச் சேர்த்து உதவுகின்றனர். இவர்களை நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

சுவடுகளுக்குச் சந்தா செலுத்துவோர் அனைவரும் வங்கியூடாக மாத்திரமே பணத்தைச் செலுத்தவும். சுவடுகளின் வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062. சுவடுகளின் பன்னிரு இதழ்களுக்கான சந்தா 300 குறோணர்கள்.

சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகளை வரவேற்கிறோம். படைப்பாளிகள் தமது கருத்தை நயமான முறையில் வெளிப்படுத்த சுவடுகள் எப்போதும் களம் அமைக்கும். படைப்புகள் சமூகத்துக்குப் பயன்விளைவிக்கும் எத்துறை சார்ந்தவையாகவும் இருக்கலாம். எமது நடைமுறைச் சிக்கல்களால் பிரசுரிக்கப்படாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை. படைப்பாளிகள் தம்முடன் படைப்பின் ஒரு பிரதியை வைத்திருக்க வேண்டுகிறோம்.

சுவடுகளில் வெளியாகும் படைப்புகள் பற்றிய உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நாகரிகமாக எழுதப்படும் கடிதங்கள் மட்டுமே பிரசுரமாகும். சுவடுகளுடனான சகல தொடர்புகளுக்கும்:

**SUVADUGAL**

Herslebs GT 43, 0578, Oslo 5,
NORWAY

தமிழ் மக்களைப் பொறுத்தவரை மாதங்களில் கொடிய மாதமாக யூலை மாதம் இருக்கிறது போலும். இந்த யூலை மாதம்தான் எத்தனை துயரங்களைச் சுமத்திவிட்டுப் போகிறது?

ஒன்பது வருடங்கள் முன்னர், 1983 யூலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு திட்டமிட்டு நடத்திய இனப் படுகொலையும், அந்த நாட்களில் தமிழ் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட 53 தமிழ்ப் போராளிகள் வெலிக்கடைச் சிறைக்குள் ஆதரவற்ற நிலையில் கொல்லப்பட்டதும் எமது நினைவில் இருந்து மறக்கக் கூடியவையல்ல.

அதே இலங்கை அரசு, இந்தியாவுடன் சேர்ந்து தமிழ் மக்கள்மீது ஒப்பந்தம் ஒன்றைத் திணித்த யூலை 87ஐயும் அதைத் தொடர்ந்து, வடக்கு கிழக்கில் நிகழ்ந்த அழிவுகளையும் மறத்தலும் இலகுவான ஒன்றல்ல.

இந்தக் காலங்களில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூர்வதுடன், அவர்களது கனவுகளை நனவாக்க எமக்கு இயலுமான வழிகளில் உழைப்பது நம் அனைவரதும் கடமையாகும்.

● சுவடுகள்

## அடுத்த இதழ் அதிக பக்கங்களுடன்

- ஜெயபாலனின் பார்வையில் சோலைக்கிளியின் காகம் கலைத்த கனவு
- புங்கு புளி பூவரசு — ஒரு மாறுபட்ட கதை
- மாவை நித்தி எழுதும் நாடகம் பற்றிய குறிப்பு
- 'தேசிய சோசலிசப்' போர்வையில் நாஜிசம்
- உரிமைக்காகப் போராடும் இலங்கையர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெலிக்கடைக் கம்பிகளின் பின்னால்......,

## யூலை'83 படுகொலையில் தப்பிய ஒருவரின் நேரடி அனுபவம்

*1983 யூலை மாதம் இலங்கையின் பல பகுதிகளிலும், தமிழர்கள்மீது திட்டமிடப்பட்ட முறையில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வன்முறைகளின் உச்சக் கட்டமாக வெலிக்கடையில், தம்மைப் பாதுகாக்க முடியாத நிலையில் சிறை வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல்க் கைதிகள் 53பேர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது சில கைதிகள் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர். இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பிய 'அந்தோனி' என்பவரது அனுபவங்கள் இவை.*

- சுவடுகளுக்காகப் பிரத்தியேகமாகப் பெறப்பட்டது -

வெலிக்கடைச் சிறை கடந்த நூற்றாண்டில் கட்டப்பட்டது. காலத்துக்குக் காலம் இதில் பல பகுதிகள் படிப்படியாகச் சேர்க்கப் பட்டன. இந்தச் சிறையின் எல்லாப் பகுதிகளுக்கும் நான் சென்றதில்லை. எனினும், எனது நினைவுக்கு உட்பட்ட வகையில் இடங்களையும், அவை அமைந்துள்ள முறைகளையும் கூறுகிறேன். இதில் சில தவறுகள் இருக்கலாம். பெண்கள் பகுதி, வைத்தியப் பகுதி என்பன வெலிக்கடைச் சிறையின் பிரதான கட்டிடத்தின் வெளியே இருந்தன. பிரதான கட்டிடத்தின் வாசலில் எல்லாச் சிறைகளும் போல இரு பெரிய கதவுகள் உள்ளன.

வாசலின் அருகே சிறைச்சாலையின் குசினியை ஒட்டிய விதத்தில் அமைந்துள்ள கட்டிடம் Chapel section என்று அழைக்கப்படும். மூன்று மாடிக் கட்டிடமான இதன் ஒரு மூலையில்தான் தூக்குத் தண்டனை விதிக்கும் பகுதி மூன்று மாடிகளிலும் உள்ளது. அதன் முடிவை ஒட்டியவாறு தொழிற்கூடம் உள்ளது. Chapel section வானத்திலிருந்து பார்த்தால் ஒரு சிலுவை போன்ற தோற்றத்தில் இருப்பதாலேயே அதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. இதன் மறுபுறத்தில் அதிக பாதுகாப்புடன் கூடிய பகுதி ஒன்று உள்ளது (Maximum security section). இது உயர்ந்த ஒரு சுற்றுமதிலைக் கொண்டது. இதற்குள் மிகத் தீவிரமான அல்லது கட்டுப்படுத்தக் கடினமான கைதிகளை வைத்திருக்கும் பிரிவு (Youth Offenders section) இருந்தது. இவை தவிர L section, H section என்ற கட்டிடங்களும், சிறைச்சாலை நிர்வாகக் கட்டிடமும் உள்ளன. (வசதிக்காக இந்தக் கட்டிடங்களை அவற்றின் பெயர்களின் முதல் எழுத்துகளைக் கொண்டு குறிப்பிட்டர்).

இருமாடிக் கட்டிடமான YO sectionஇல் கீழ்த்தளத்தில் ஒன்பது அறைகள் இருந்தன. முதலில் நான் அங்குதான் இருந்தேன். ஆரம்பத்தில் மூவர் மட்டும் இருந்தாலும் பின்பு வேறு சிலரும் வந்து ஆடி மாதமளவில் ஒன்பது பேரானோம். முதல் ஒரு மாதமும் நாம் ஒருவரை ஒருவர் பார்க்காமற்தான் இருக்க வேண்டியிருந்தது. (வாசற்கதவுகள் ஒன்றை ஒன்று பார்க்காமல்தான் அமைக்கப் பட்டிருந்தன) ஆனால் பின்னர் ஏழு மணிக்குத் திறந்து விடுவார்கள், மாலை ஐந்துமணிவரை அங்கு இருக்கலாம். Y Oவின் கட்டிடத்துக்கு வெளியே செல்லாமல் நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கதைக்கக் கூடியதாக அனுமதி வழங்கப் பட்டது. ஒவ்வொரு நாளும் 15 நிமிடம்வரை தனித்தனியே இந்தக் கட்டிடத்துக்கு வெளியே உலாவ, உடற்பயிற்சி செய்ய (நால்வரின் காவலுடன்) அனுமதியுண்டு.


யூலை 25 காலை சிறைக்கு வெளியே பெரும் புகையைக் காணமுடிந்தது. அன்று பின்னேரம் 3 - 4 மணியளவில் எமது சிறைக்கு வெளியே பெரும் சத்தங்களை எங்களால் கேட்க முடிந்தது. அன்று நாங்கள் வெளியே செல்ல அனுமதிக்கப் படவில்லை.

ஆனால், பின்பு எங்களால் சிலர் (சிறைக்குள்) காயங்களுடன் கொண்டு செல்லப் பட்டதைக் காண முடிந்தது. பின்னர் ஏதோ விதத்தில் 35 பேர்வரை சிறைக்குள் கொல்லப் பட்டதாகச் செய்தி எங்களைக் கிட்டியது. இந்தச் சம்பவம் Chapel section இல் நிகழ்ந்தது. அந்த நேரம் வெலிக்கடைச் சிறையின் சகல பகுதிகளிலுமாக மொத்தம் எழுபத்தி மூன்று பேர் வரையில் அரசியற் கைதிகள் இருந்தனர். மூன்று மாடிகள் கொண்ட Chapel sectionஇல், தூக்குத் தண்டனை விதிக்கப்படும் பகுதியுடன் இணைந்திருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வெலிக்கடைச் சிறையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள 15 அடி உயரமான வெளிச் சுவர்

C பிரிவில்தான் (என நினைக்கிறேன்) குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் மற்றும் நீர்வேலி வழக்கில் தொடர்பு கொண்டோர் (ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டு) இருந்தனர். இவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது எவரும் உயிர்தப்ப முடியவில்லை. இத்துடன் **Chapel section**இன் வேறு ஒரு பிரிவில் இருந்தவர்களும் படுகொலை செய்யப் பட்டனர். பொதுவாக இந்தப் பகுதிகளில் அப்போது பனாகொடயில் இருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அதிகம் இருந்தனர். அப்போது குட்டிமணி தங்கத்துரை மட்டுமே அங்கிருந்தனர்.

இவர்களை, நிர்வாகக் கட்டிடத்தின் முன் விறாந்தை போலுள்ள பகுதிகளில் விருந்தினர்கள் பார்வையிட வரும்போது நான் சந்தித்திருக்கிறேன். மற்றும்படி பார்ப்பது சிரமம் அல்லது சாத்தியமில்லை. அறிமுகமாக ஓரிரு வார்த்தைகள் மட்டுமே அங்கு பேசமுடியும். குட்டிமணி போன்றோர் வெளியே உடற்பயிற்சி செய்யும் இடங்களைச் சுற்றி மேலே வலையால் மூடப்பட்டிருக்கும் (ஆகாய வழியால் ஹெலி மூலம் தப்பிவிடலாம் என அஞ்சி?).

இந்தப் படுகொலைகள் நிகழ்ந்த விதங்கள் பற்றிப் பலவிதமான செய்திகள் வெளிவந்தன. ஆனால் எவருமே தப்பாததால் இந்தத் தகவல்களில் எத்தனை தூரம் உண்மை இருக்கும் என்பதை என்னால் கூறமுடியவில்லை. ஆனால் மோசமான முறையில் அவர்கள் அனைவரும் கொல்லப் பட்டிருப்பர் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் இந்தச் சம்பவத்தில் பல அதிகாரிகள் நேரடியாக ஒத்துழைப்பு வழங்கியதைக் கண்ட சாட்சிகள் உள்ளன.

இந்த நிலையில் சிறைக்குள் பதட்டமான நிலை நிலவுவதையும், சம்பவம் நிகழ்ந்ததையும் உணர முடிந்தது. அதுபற்றி விசாரணைகள் விளக்கங்கள் ஏதோ நடப்பதாகவும் சில செய்திகள் எமது காதிலும் விழுந்தன.

26ஆம் திகதி காலை YOஇல் இருந்த எங்கள் ஒன்பது பேரையும், நாங்கள் இருந்த கட்டிடத்தின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு நாங்கள் வழமையாகச் செல்வதில்லை. மேல்மாடி மிகவும் புழுக்கம் நிறைந்ததாக இருந்தது. அத்துடன் மிக மோசமாகத் துப்பரவற்று இருந்தது. அன்றுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீருற்றித் துப்பரவு செய்ததால் ஈரமாக இருந்தது. Chapel sectionஇன் மூன்றாவது பிரிவில் இருந்ததால் தப்பியவர்களையும், நாங்கள் இருந்த கட்டித்துக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களை நாங்கள் இருந்த ஒன்பது அறைகளில் மும்மூன்று பேராக அடைத்தார்கள். ஆனால் இவர்களை அன்று நாம் நேரடியாகச் சந்தித்திருக்கவில்லை.

நாங்கள் 'ஒழுங்காக' இருந்ததால் கீழே நாங்கள் இருந்தபோது எங்களுக்கு ஒரு மேசை தந்திருந்தார்கள். இரண்டு மூன்று கதிரைகளும் இருந்தன. பிறகு நாங்கள் ஒன்பது பேராகிய பிறகு நான்காவது கதிரையும் கிடைத்தது. இந்த மேசைதான் எங்களது சந்திப்பு இடமாகவும் நாங்கள் சாப்பிடும் இடமாகவும் இருந்தது. இவற்றை நாங்கள் மேலே போனபோது கொண்டு சென்றுவிட்டோம். அன்று மத்தியானம் நாங்கள் சாப்பிட்டோமா இல்லையா என்பது (சாப்பாட்டு நேரம் 12மணி) நினைவில்லை. அப்போது எம் மத்தியில் பயமும் பதட்டமும் நிலவியது. இரண்டு மணியளவில் வெளியே பெரும் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. நாங்கள் மேலே இருந்த ஜன்னலின் அருகாக மேசையை நகர்த்திச் சென்று வெளியே பார்த்தோம். நாங்கள் இருந்த Maximum security section இன் சுவர்களைத் தாண்டிப் பல கைதிகள் குதித்து வருவதைக் காண முடிந்தது. உள்ளே வந்தவர்கள் காவலாளியிடம் திறப்பைப் பறித்தார்களோ என்னவோ, எமது கட்டிடத்தின் உள்ப்பகுதி வரை வந்துவிட்டார்கள். அவர்கள் பெரும் தொகையினராக இருந்தனர். அவர்களிடம் அலவாங்கு, கோடாலி போன்ற ஆயுதங்கள் இருந்தன. இதனால் அவர்களால் எந்தப் பூட்டையும் இலகுவாக உடைக்க முடிந்தது. ஏற்கனவே Chapel sectionஇல் இருந்து வந்தவர்கள், தமது சகாக்களுக்கு நிகழ்ந்த அனுபவங்களால் அறிந்ததாலும், நாம் இவற்றைக் கேள்விப் பட்டதாலும் இதை எதிர்ப்பது என்ற உறுதியும் ஆயத்தமும் எங்கள் அனைவரிடமும் இருந்தது.

நான் எங்களிடம் இருந்த மேசையை உடைத்துக் காலை எடுத்தேன். எம்மில் ஐந்துபேர் வரையில்தான் உறுதியோடு போராடக் கூடிய நிலையில் இருந்தோம். நான்கு கால்களும் நால்வரிடம் இருந்தன. ஏனையோர், வயதானவர்கள் அல்லது உடல் ரீதியாக உறுதியற்றவர்கள். ஒவ்வொருவரும் ஏதோ எமக்கு இயன்ற வகையில் அவர்களை எதிர்த்தோம். எங்களிடம் ஒரு பெட்சீட்டும் இருந்தது. வந்தவர்கள் கதவின் பூட்டை உடைத்து விட்டிருந்தனர். ஆனால் அவர்கள் கதவைத் திறப்பதற்கு உள்ப்புறம் கையைவிட்டுக் கொழுக்கியை விலத்த வேண்டி இருந்தது. அவர்கள் அவ்வாறு திறக்க முயற்சி செய்யும் ஒவ்வொரு தரமும் நாம், மேசைக் கால்களால் அவர்களது கைகளை நோக்கித் தாக்கினோம். இதனால் அவர்கள் உள்ளே வர முடியாமல் இருந்தது.

நாம் சற்றும் எதிர்பாராத விதமாகக் கதவு தானாகத் திறந்தது. இந்த நிலையில் டொக்டர் ராஜசுந்தரம் வெளியே இழுபட்டு விட்டார். இந்த நிலையில் கதவு திறப்பதும் மூடுவதுமாக இழுபட்டது. நாம் உயிருடன் போராடும் நிலையில் அவர்களை எதிர்த்துப் போராடினோம். அவர்களும் மிக மோசமாக எம்மைத் தாக்கினர்.

இந்த நிலையில் சிறைச்சாலையின் மேலே ஹெலி வட்டமிட்டபடி இருந்தது. (25ஆம் திகதியும் படுகொலைகள் நிகழ்ந்தபோது இவ்வாறு ஹெலி வட்டமிட்டதை நாங்கள் அவதானித் திருந்தோம்) ஏறத்தாழ அரை மணி நேரத்தின் பின் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. இந்த நிலையில் எங்கள் பகுதிக்குள் சில கொலைஞர்கள் அகப்பட்டு விட்டார்கள்.

## கோடை நிகழ்வுகள்

* தமிழர்களிடையே பல போட்டிகளை நடத்துவதில் முன்னோடிகளாக விளங்கும் தமிழ்ச் சங்கத்தினால் ஒஸ்லோவில் முதன்முறையாகத் தமிழர்களிடையே மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. வழமை போல உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற சுற்றுப் போட்டிகளும் தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்டன.

* அன்னை பூபதி சிறுவர் பாடசாலையின் சார்பில் ஒஸ்லோ சிறுவர் சிறுமியர் பங்கேற்ற விளையாட்டு விழா சிறப்பாக நிகழ்ந்தது.

* விடுதலைப் புலிகளால் வருடாந்தம் நிகழ்த்தப்படும் சுதந்திர தாகம் கலைநிகழ்ச்சி ஒஸ்லோவில் அண்மையில் நிகழ்ந்தது. சிறுவர் நாடகம், கவிதா நாடக நிகழ்வு, நடனம் என்பன இடம்பெற்றன.

– செய்தியாளன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமக்குக் கீழே நாங்கள் இருந்த 'செல்'களில், மொத்தம் 27பேர் இருந்தனர். இவர்களில் இரண்டாவது தாக்குதலில் 18பேர் உயிரிழந்தனர். ஏனைய ஒன்பது பேரும் தமது தீரத்தாலும் மதிநுட்பத்தாலும் மட்டுமே உயிர் தப்பினர். மூன்று 'செல்'களில்தான் கைதிகள் தப்பினர் என நினைக்கிறேன். (அந்த மூன்று செல்களிலும் இருந்தவர்களில் ஒருவர் உயிரிழந்திருக்க வேண்டும்) அவர்கள் முனபே இவ்வாறான நிலைக்குத் தமக்குள் சில திட்டங்களைத் தீட்டித் தயாராக இருந்தனர். இவர்களில் சிலர் தமது கறிகளைச் சாப்பிடாமல் வைத்திருந்தனர். ஒருவர் தடியொன்றை வைத்திருந்தார். சிறுநீரையும் சேமித்து வைத்திருந்தனர். எறியக்கூடிய சில பொருட்களையும் வைத்திருந்தனர்.

ராணுவம் உள்ளே வந்தபிறகு, பதினெட்டுப் பேரதும் சடலங்களை 'செல்'களில் இருந்து வெளியே இழுத்துப் போட்டுவிட்டுத் தான் மேலே வந்தனர். அதற்கிடையில் எம்மிடம் சிக்கியவர்கள் தமது உயிரைக் காப்பாற்றுமாறு எமது கால்களில் விழுந்து விட்டனர். இல்லாவிடின் அன்று அவர்களில் ஒருவராவது உயிரிழந்திருக்கக் கூடும். அன்று மேலே வந்தவர்களில் சேபால ஏக்கநாயக்கவும் ஒருவன். அவன் வந்ததைப் பற்றி ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

மேலே ராணுவத்தினர் நால்வர் (கண்ணீர்ப் புகைப் பாதுகாப்பு முகமூடிகளுடன்) வந்து எங்கள் அனைவரையும் முழந்தாளில் இருக்குமாறு பணித்தனர். எம்மைத் தாக்க வந்து எஞ்சியிருந்தவர்களிடம் ராணுவத்தினர் ஏதோ கூற, அவர்கள் ஓடிவிட்டனர். அப்போது, நாம் சுடப்படப் போகிறோம் என்ற உணர்வுதான் ஏற்பட்டது. அவ்வாறு நிகழ்ந்திருந்தாலும் யாருக்கும் தெரிய வந்திருக்காது. இப்போதும் வெலிக்கடையில் என்ன நிகழ்ந்தது என்பது உண்மையில் யாருக்கும் தெரியாதல்லவா? பின்பு எங்களை எழச் சொன்னார்கள், சோதனையும் நடந்தது. எதற்காக என்பது தெரியாது.

பின்பு நாங்கள் கீழே கொண்டுவரப் பட்டோம். எங்கள் எல்லோருக்கும் நிகழ்ந்த போராட்டத்தில் காயங்கள் ஏற்பட்டன. எனக்குத் தலையில் காயம் இருந்தது. நாங்கள் அனைவரும் கையை உயர்த்தியபடி வெளியே வந்தபோது, ஏராளமானோர் எமது கட்டிடத்தைத் தள்ளி நின்றனர். சிறை அதிகாரிகள் சிலர் எங்களை நோக்கி வந்தனர். சிலர் அனுதாபமான முறையிலும் சிலர் அலட்சியமான முறையிலும் இருந்தனர். ஏறத்தாழ ஒரு மணி நேரத்தின் பின்னர் எங்களில் ஒரு தொகுதியினர் கைவிலங்கிடப்பட்டு, அங்குவந்த ட்றக் ஒன்றில் ஏற்றப் பட்டோம்.

ட்றக் புறப்பட்டபோது, எங்களை டறக்கினுள் நிலத்தில் படுக்குமாறு பணித்தனர். அன்று நீண்ட நேரமாக ட்றக் பயணம் செய்தது. எங்கு போகிறோம் என்று புரியவில்லை. நாங்கள் எழுந்திருக்கக் கூட அனுமதிக்கப் படவில்லை. டறக்கினுள்ளேயே சிறுநீர்கூடக் கழிக்க வேண்டிய நிலைதான் இருந்தது. மறுநாள் காலை ஏழு மணியளவில்தான் மீண்டும் ட்றக் புறப்பட்டு ஓரிடத்தில் வந்து நின்றது. அது ஒரு விமான நிலையம் என்பதை எம்மால் ஊகிக்க முடிந்தது.

அங்கு எம்மை விமானத்தில் ஏற்றினர். அங்கிருந்து நாம் மட்டக்களப்பு கொண்டு செல்லப்பட்டோம். மட்டக்களப்பில் வேறு பலருடன் நாம் சிறையில் இருந்தோம். அங்கு ஏறத்தாழ இரு மாதங்கள் இருந்தோம். அங்கிருந்த 80 பேரில் அதிகமானோர் மேல் மாடியில் இருந்தனர். எங்களால் ஒரு வானொலியும் வைத்திருக்க முடிந்தது. அப்போது, எம்மில் எல்லோரும் தமிழர்கள் என்பதால், எங்களால் கொஞ்சம் உறுதியோடு இருக்க முடிந்தது. இதன்பின்னர் மட்டக்களப்புச் சிறை உடைக்கப்பட்டது பற்றியும், அங்கிருந்து (நான் உட்பட) கைதிகள் தப்பியது பற்றியும் அனேகமாக எல்லோரும் அறிந்திருப்பர்.

(இந்த நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட பலரது பெயர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளியிடப்படவில்லை) ●

## வெளிநாட்டாரை வெளியேற்று!

ஒஸ்லோ மாநகர முதல்வர் ரூண கொரா(ட்)சன், ஒஸ்லோவில் உள்ள வெளிநாட்டவரிடையே சட்டவிரோத நடவடிக்கைகள் மிக அதிகமாக இருப்பதால், சட்டவிரோதமாக நோர்வே நாட்டில் தங்கியுள்ளோரை வெளியேற்றுமாறு நீதியமைச்சரைக் கேட்டுள்ளார். வதிவு அனுமதி மறுக்கப்பட்டவர்கள், சட்டவிரோதமாகத் தங்கியிருப்பவர்கள் உடன் வெளியேற்றப்படுது அவசியம் என இவர் கூறியுள்ளார்.

● சங்கரன்

www.tamilarangam.net

# தமிழின் முதல் அச்சு!

சுவடுகள் மே'92 இதழில் தமிழில் முதன்முதல் அச்சுவடிவத்தில் வெளியான நூல் எது என்பது பற்றி ஒரு சிறு கட்டுரையை, டென்மார்க்கில் இருந்து க.ஆதவன் எழுதியிருந்தார். அவரது கருத்து, தகவற்படி முதலில் அச்சில் ஏறிய தமிழின் ஒரு சிறு பகுதியையும் அந்த இதழில் பிரசுரித்திருந்தோம்.

இந்தக் கட்டுரை பற்றி மேலும் விபரங்களை இனிவரும் இதழ்களில் எழுதுவதாகவும், இதுபற்றிய மேலதிக தகவல்கள் தனக்குத் தேவை எனவும் ஆதவன் எழுதியிருந்தார். இதனை வாசித்த சுவடுகள் வாசகர்கள் கே.கணேஷ் (இலங்கை), சோ.சிவபாதசுந்தரம் (லண்டன்) ஆகியோர் தாம் சேகரித்து வைத்திருந்த சில அரிய தகவல்களைச் சுவடுகளுக்கு அனுப்பியுள்ளனர். இவர்களுக்கு எமது நன்றி என்றும் உரியது. இவற்றின்படி தமிழில் முதல் புத்தகம் 1554இல் லிஸ்பனில் (போர்த்துக்கல்) பதிப்பானது. இந்தியாவில் 1578இல் Doktrines of Christianty என்ற புத்தகம் அச்சாகியது. இதுவே இந்தியாவில் முதன்முதல் பிரசுரமான புத்தகமாகும். இது ஒரு தமிழ் நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தமிழ்ப் பெயர் 'தம்பிரான் வணக்கம்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆதவன் குறிப்பிட்ட சீகன்பாக், தமிழில் பைபிளை மொழிபெயர்த்தவர். இதுவே, ஆசிய மொழி ஒன்றில் முதன்முதல் பைபிளின் மொழிபெயர்ப்பு ஆகும்.

அருகில் உள்ள படம் தமிழில் முதல் அச்சேறிய 'தம்பிரான் வணக்கம்' நூலின் முன்பக்கம்.

– மேலதிக விபரங்கள் இனிவரும் இதழ்களில் வரும் – சுவடுகள்

## தமிழின் முதல் அச்சு!


DOCTRINA CHRISTAM
en Lingua Malauar Tamul.

**சலனம்**

தமிழிலும் பிறமொழிகளிலும் நல்ல திரைப்படங்களையும், திரைக் கலைஞர்களையும் பற்றிய தகவல்கள், திரைப்படங்கள் பற்றிய அறிமுகங்கள் எனப் பல அம்சங்களுடன் வெளிவரும் சஞ்சிகை. தொடர்புகள்:

தி. கல்யாணராமன்
சென்னை ஃபிலிம் சொஸைட்டி,
22, தாயார் சாகிப்,
2வது சந்து,
சென்னை – 600 002



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கி.பி.அரவிந்தன் ●

# ஒரு மரணம் தந்த சலனம்

'தமிழரசுக் கட்சிப் பத்திரிகை' சுதந்திரனின் பிற்கால ஆசிரியரான கோவை மகேசன் இறந்துபோனார். எழுத்தும் வாழ்க்கையுமெனத் தன்னை அடையாளப் படுத்திக்கொண்ட அவரது இறப்பு விடுதலைப் புலிகளைத் தவிர்த்து ஏனையோரின் கவனத்தை ஈர்க்காது போனது கவலை தருகிறது. சென்னையில் 'வீரவேங்கை' எனும் இதழை வெளியிட்டுக் கொண்டிருந்தபோது அவர் மரணித்தது இக் கவனியாமைக்குக் காரணமாகலாம். மதிப்பீடுகள் 'அவரவர் எச்சத்தால் கொள்ளப்படும்' எனின் 'வீரவேங்கை'மட்டும் அவரது எச்சமெனக் கொள்ளலாகாது. சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியப் பணியும், அவரது சிறு நூல்களும், எண்ண வேட்கையும் கவனத்திற்கு உரியதாகும்.

சுதந்திரன் ஆசிரியராய் அவர் பணியாற்றிய காலம் முக்கியத்துவம் வாய்ந்ததும், பொறுப்பு மிக்கதுமாகும். பொடியன்களின் போராட்ட முனைப்பிலும், தமிழ் பேசும் மக்களின் அரசியல் தளத்தில் மாற்றம் கோரிய தலைமுறைகளுக்கு இடையேயான துவந்த யுத்தத்திலும் கோவை மகேசன் போன்றோரின் கருத்தும் எழுத்துப் பணியும் வரலாற்றுப் பதிவுகளாகும்.

கோவை மகேசன் போன்றோர் தாம் பிடித்திருந்த கொம்பு மக்கியது தெரிந்தும் கைவிட முடியாமலும், புதிய கிளைகள் துளிர்த்தெழுவதை அரவணைக் மாட்டாமலும், இருதலைக் கொள்ளி எறும்பாய் அல்லாடினர். தலைமுறை இடைவெளியை ஒட்டுப்போட இலக்கியத்தில் 'அறிஞன்' எனச் சிறப்பிக்கப்படும் அ.ந.கந்தசாமி அவர்களும் முற்போக்கு எழுத்தாளர் சங்க இயக்குனரான கம்யூனிஸ்ட் கட்சியின் 'தேசாபிமானி பத்திரிகை ஆசிரியர் பிரேம்ஜி அவர்களும் எனப் பலரும் சுதந்திரன் ஆசிரியர் குழுவில் இருந்தவர்கள் எனக் குறிப்புகளுண்டு. இன்று பேசப்படும் ஈழத்து எழுத்து வல்லவர்கள் பலரும் சுதந்திரனில் பயிரானவர்கள் என்றே கூறலாம்.

இலங்கைத் தமிழரின் தேசியப் பண்பு பற்றிய கருத்தாக்கத்திலும், ஈழத்து இலக்கியம் என்ற உருவாக்கத்திலும் காத்திரமான பங்களிப்பை சுதந்திரன் வழங்கியுள்ளது. ஈழத்தமிழரின் இன்றைய இன்னல்கள் சூழ்ந்த போராட்டத்திற்கும், வன்முறை ஓர்மத்திற்கும், இரத்தம் தோய்தலுக்கும், இச் சுதந்திரனும் அதன் ஆசிரியர்களும், எழுத்து வல்லவர்களும் விதைகளை ஊன்றினார்கள் என்பதனை வரலாற்றுத் தளத்தில் இருந்து மறைத்துவிடுதல் அத்தனை சுலபமல்ல.

சுதந்திரன் ஆதரித்த தமிழரசுக் கட்சியின் சரிவின்போதுதான் கோவை மகேசன் ஆசிரியராய்ப் பொறுப்பேற்றார். 'சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டட்' என்னும் சுதந்திரன் வெளியிடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயன்றனர். மரபுவழித் தலைமையையும், பவுத்திரங்களையும் பாதுகாக்க முனைப்புடன் செயல்பட்டனர். இவரது இம்முயற்சிகளும், பணிகளும் எச்சங்களாய்த் தொக்கி நிற்பதனால்தான் இவரது இறப்பில் கவலையும், கரசனமும் மேலெழுகிறது.

சுதந்திரன் பத்திரிகை தமிழரசுக் கட்சியின் உத்தியோக பூர்வ வெளியீடல்ல. ஆனால் தமிழரசுப் பத்திரிகை என்றே அனைவரும் அறிந்திருந்தனர். இப்பத்திரிகை 'தந்தை' சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களால் நிறுவப் பட்டதாகும். ஈழத்துக் காந்தி எனச் சிறப்பிக்கப்படும் தந்தை செல்வாவின் தியாக உணர்வு பற்றி விதந்துரைக்கும் அவரது தலைமைத்துவ காலக் கட்சி ஆர்வலர்கள் தனது பலாங்கொட எஸ்டேட்டை விற்று இப்பத்திரிகைக்கு முதலிட்டார் என்று கூறுவதுண்டு. தந்தை செல்வாவும் அவரது குடும்பத்தினரும் அதிக பங்குகளைக் (Shares) கொண்டிருந்த 'சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்' எனும் நிறுவனத்தால் இவ்விதழ் கொழும்பில் இருந்து வெளியிடப்பட்டது. தொடக்கத்தில் இக்கம்பனியில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துக்கும் ஒரு பங்கு இருந்தது எனக் கூறுவர். (சென்னையில் இருந்து வெளிவரும் 'முரசொலி' பத்திரிகை தி.மு.க.வினுடையது என அனைவரும் அறிவர். ஆனால் அப்பத்திரிகையில் தி.மு.க.விற்கு ஒருவீத பங்கும் கிடையாது என்பதே உண்மை. 'தமிழினத் தலைவர்' முத்துவேலர் கருணாநிதியினதும், குடும்பத்தினரதும் சொந்தப் பத்திரிகைதான் முரசொலி)

1948ஆம் ஆண்டில் இருந்து வெளிவரும் சுதந்திரன் பத்திரிகையின் முதல் ஆசிரியராய், மலையக தோட்டத் தொழிலாளரிடையே தொழிற்சங்கத்தைக் கட்டிய முன்னோடியும் தஞ்சாவூரைச் சேர்ந்தவருமான கோ.நடேசையர் விளங்கினார். இவர் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகின் முன்னோடிகளில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐம்பதுகளின் இறுதியிலும் அறுபதுகளின் போதும் சுதந்திரன் பத்திரிகையின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமும், சத்தியாக்கிரகப் போராட்டமும் ஒழுங்கமைய தமிழரசுக் கட்சிக்கு சுதந்திரன் பெருந்துணையாய் இருந்தது என அன்றைய தொண்டர்கள் கூறுவர். 'எஸ்.டி.எஸ்' என அழைக்கப்படும் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் சுதந்திரனில் ஆசிரியராய்ப் பணிபுரிந்த காலம் பலராலும் இன்றும் நினைவுகூரப் படுவதுண்டு. ஈழத்து நிறுவனத்தில் பணியாற்றிய கோவை மகேசன் பின்னர் அதன் ஆசிரியரானார்.

1965இல் ஐ.தே.க.வின் தேசிய அரசில் தமிழரசுக் கட்சி பங்கேற்று, செனட்டர் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராய் அங்கம் வகித்ததன் பின்னால், கட்சியின் அமைப்பிறுக்கம் தளர்ந்து, கிளைகள் கலைந்து, செயல் வேகம் மிக்கோர் ஓரங்கட்டப்பட்டு, தீவிரவாதிகள் ஒதுங்கி, கட்சி தேக்க நிலையை அடைந்தது.

1968இல் யாழ் குடாநாட்டில் எழுந்த சாதிய அடக்குமுறைக்கு எதிரான போராட்ட அலையில் தமிழரசுக் கட்சியின் 'திசை தெரியாத' பாவனையும், தமிழரசுக் கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்ட ஊர்காவல்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதி வ.நவரத்தினம் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதும் என்ற இன்னோரன்ன காரணங்களால் கட்சியின் சரிவு துரிதப்பட்ட காலத்தில்தான் மாணவ இளைஞர்கள், பொடியன்கள் அரசியலில் நுழைந்தனர்.

1970ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசு அமுல்படுத்திய தரப்படுத்தலுக்கு எதிரான கிளர்ச்சியினூடே அவர்கள் தங்கள் நிலையை வலுப்படுத்தத் தொடங்கினர். கட்சியை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தினர். இலங்கைத் தமிழர்களின் அரசியல் போக்கின் சந்தி பிரிந்த காலம் இது எனலாம். தமிழரசுக் கட்சியின் மூளை வெளியே – சுதந்திரன் ஆசிரியர் எஸ்டிஎஸ் வெளியே – பொடியன்கள் மாணவ இளைஞர்கள் தெருவில்– இவ்வேளையில் குரல்தரவல்ல ஒரே இதழான சுதந்திரன் ஆசிரியப் பணியும், பொறுப்பும் எத்தனை கடினமானதாய் இருந்திருக்கும். கிழடுதட்டிக் கொண்டிருந்த கட்சிக்கு கோவை மகேசனின் பேனா இளம் பூச்சு பூசியது. இளைஞர்களைத் தன்பால் ஈர்க்கவும், தக்கவைக்கவும், தலைமை ஏற்கவும் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார். சிறைமீண்ட செம்மல்கள் இவரை இரத்தத் திலகமிட்டு அதிகப்படுத்தி இளைஞர் தலைவரென உருவகப்படுத்தினர். வரலாற்றை யாரேனும் இழுத்துப் பிடிக்க முடியுமா? கோவை மகேசன் தோற்றுப் போனார் ஜெயகாந்தன் படிப்பதும், விவாதிப்பதும் நாகரிகமான அவ்வேளையில்

சுதந்திரன் படிப்பது இளக்காரமானது. ஜெயகாந்தனுக்கும், சுதந்திரனுக்கும் இடையேயான தூரம் முற்போக்கு, பிற்போக்கு என்பவற்றிற்கு இடையேயான தூரத்திலும் அதிகமானது. அப்படிக் கற்பிக்கப் பட்டிருந்தது. ஆனால் ஜெயகாந்தன் ரசிகர்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரகசியமாகச் சுதந்திரன் படிக்க வைத்ததார் கோவை மகேசன். சுதந்திரனில் இலக்கியப் பக்கம் எப்போதும் சூடாகவும் சுவையாகவும் இருக்கும். யாரையேனும் சீண்டாமல் இலக்கியக் குறிப்பு அமையாது. ஈழத்தமிழ் இலக்கியக் கலாநிதிகள் பலரும் அப்போது ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சர்களை விடவும், அரசியல்வாதிகளை விடவும் செல்வாக்கு மிக்கவராய்க் காணப்பட்டனர். அப்புறம் இலக்கியக்களத்தில் சூடும் சுவையும் கேட்கவா வேண்டும்.

கோவை மகேசனின் மொழியும் வளம் மிக்கது. திராவிட இயக்க மொழிநடையை கையாண்டார். குறிப்பாக 'அறிஞர் அண்ணா' எனப் புகழப்படும் சி.என்.அண்ணாதுரையின் மொழிநடையைக் கையாண்டார். அண்ணாவின் தம்பிக்கு கடிதங்கள் போலவே கோவை மகேசனும் சுதந்திரனில் அரசியல் மடல் தம்பிக்கென எழுதினார். அடுக்குமொழியும், ஆற்றொழுக்கு நடையுமென இளம் வாசகர்களையே குறிவைத்து எழுதினார்.

இலக்கிய சஞ்சிகை ஒன்றையும் பின்னர் வெளியிட்டார். 'சுடர்' என்ற பெயரில் மாத இதழாய் வெளிவந்தது அது. அதன் ஆசிரியராயும் கோவை மகேசன் விளங்கினார்.

சுடர் சஞ்சிகை பற்றியும், அதில் வெளிவந்த சிறுகதைகள் பற்றியும் 'அலை' யேசுராசா அவர்கள் மதிப்பீடு செய்தார் என நினைக்கிறேன்.

தனது எழுத்தும் பேச்சும் பற்றிய நேர்மையான அர்ப்பணிப்பு அவரிடத்தே இருந்தது. 1974ஆம் ஆண்டு நடைபெற்ற 4ஆவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போதான தொடக்க வேலைகளில் இரு முரண்பட்ட கருத்துகள், இலங்கைத் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்பாளரிடையே நிலவியது. இலங்கையில் மாநாட்டைக் கொழும்பிலா, யாழ்ப்பாணத்திலா நடத்துவது என்பதனை இலங்கைக் கிளையே தீர்மானிக்க வேண்டியிருந்தது. திருமதி புனிதம் திருச்செல்வம் (செனட்டர் திருச்செல்வத்தின் துணைவியார்) போன்றோர் கொழும்பில் மாநாட்டை நடத்தவே விரும்பினர். ஆனால் மறவன்புலவு சச்சிதானந்தம் போன்றோர் யாழ்ப்பாணத்தில் நடத்தவே விரும்பினர். சச்சிதானந்தத்தின் சமதலைமுறையினரான கோவை மகேசன் யாழ்ப்பாணத்தில் நடத்தவே குரல் கொடுத்தனர். சுதந்திரன் பத்திரிகையில் அக்குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தார். ஆனால் சுதந்திரன் முதலாளிகளுக்கு இது உவப்புடையதாய் இருந்திருக்க முடியாது. ஆனால், யாழ்ப்பாணத்தில் நடாத்த வேண்டுமென்ற குரல் வலுவுடையதாய் இருந்ததால் அவர்கள் சுதந்திரனில் கோவை மகேசனின் நிலைப்பாட்டைக் காணாது விட்டனர்.

தமிழாராய்ச்சி மாநாடும், இறுதிநாள் நிகழ்வும் இன்று ஈழத்தில் எரியும் நெருப்புக்கு நெய்யூற்றி விசிறிவிட்டதெனலாம். தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெற்றதானது மொழி, கலாசாரம், வரலாறு, இனவேர், இனப் பெருமிதம் என்பவற்றைக் கிளறவும், உணர்நெருப்பு மூளவும் துணையாயிற்று. இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள் அனைத்திலும் செய்திகளும் கட்டுரைகளும் வெளிவந்தன. இக்கட்டுரைகள் எழுதிய எழுத்து வல்லமை கொண்ட அறிஞர்களும் கூடத்தான் இன்று எரியும் நெருப்புக்கு கொள்ளி போட்டவர்கள். கோவை மகேசனும் தன் எழுத்து வல்லமையையும், சுதந்திரன் பத்திரிகையையும் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார்.

1974 யூன் 5இல் சயனைட் அருந்தி மரணித்துப் போன சிவகுமாரன் தமிழ் சமூகத்தையும், தலைமையையும் அதிர்ச்சி அடைய வைத்தான். ஏற்பதா, புறந்தள்ளுவதா என்ற தடுமாற்றத்தில் தேர்தல்கலை வல்லுனர்களான தலைவர்கள் மரணத்தைத் தம்வயமாக்கினர். கோவை மகேசன் தனக்கு இருந்த 'எழுத்துச் சுதந்திர வலய'த்துக்குள் "நெஞ்சம் நிறைந்த தம்பி" எனத் தொடர் கட்டுரை எழுதினார். ஆனால் சிவகுமாரன், அண்ணன்மார் காட்டிய வழியை நிராகரித்தவன் என்பதை 'கோவை அண்ணா' எழுதாது விட்டாலும், தன் நேசத்தை எண்ண வேட்கையை வெளிப்படுத்தினார் என்பதை மறுக்க முடியாது.

சுதந்திரன் ஆசிரியர் என்பதனாலேயே அரசின் அச்சுறுத்தலுக்கும், சிறைப் படுத்தலுக்கும் உள்ளான கோவை மகேசன் அவர்கள் ஒதுங்கி விலகாமல், சலிப்பு கொள்ளாமல் எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எந்தத் தலைமையைப் பாதுகாக்க மூர்க்கத்துடன் எழுதினாரோ பின்னாளில் அப்பேனாவால் அவர்களை எதிர்த்தும் அதே மூர்க்கத்துடன் சாடினார். தனக்கான தனிஅணிகண்டு அதனையும் புலிகளுடன் இணைத்து, 'வீரவேங்கை' இதழினையும் வெளியிட்டுக் கொண்டார்.

அவரது எழுத்துகளும், அவர் ஆசிரியராய் இருந்த சுதந்திரன் பத்திரிகையும், ஈழப் போராட்ட நிகழ்வுகள் பற்றிப் பரிசீலிப்போர் கட்டாயத்துடன் படிக்க வேண்டியதாகும். திறந்த மனதுடனும், பார்வையுடனும் அணுகப்படுமானால் பல உண்மைகள் வெளியே வரக்கூடும்.

கோவை மகேசன் நிச்சயமாய் ஒரு காலத்தைக் காட்டுவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொப்பேகடுவவின் மரணமும் இலங்கையின் இன மோதல்களும்

வ.ஐ.ச.ஜெயபாலன்

I

ஒகஸ்ற் 8, 1992 சனிக்கிழமை காலை ஊர்காவற்றுறை, அராலித் துறையருகே இடம்பெற்ற கண்ணிவெடிப்பில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்ன உட்பட இலங்கை அரச ஆயுதப் படையின் தலைமைப் பீடத்தின் பெரும்பகுதி அழிக்கப் பட்டுள்ளது.

அரசுக்கு மட்டுமன்றி, இன்று தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை வடக்கு கிழக்கு மாகாணங்களை இலங்கை அரசின் இராணுவம் இன்னமும் கைப்பற்றாததுதான் என்று கருதும் அரசு சார்பு தமிழ் அமைப்புகளுக்கும்கூட இச்செய்தி பேரிடியாக அமைந்துள்ளது.

மாற்று அரசியல்த் தீர்வு எதனையும் வழங்காமல் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் வடிவமான ஒற்றையாட்சியை ஸ்தாபிக்கப் போராடிவந்த இலங்கை ஆயுதப் படைகளைப் பொறுத்தவரை ஏற்பட்டுள்ள இழப்புகள் குறுங்காலத்துக்குள் ஈடு செய்ய முடியாததாகும். நீண்ட காலத்துக்குத் தீவிரமான போரைத் தொடருவது பொருளாதார ரீதியாகச் சாத்தியமற்றிருக்கும் நிலையில் குறுங்காலத்துக்குள் வெற்றி காண முனைந்திருந்த அரசுக்கும் இந்த இழப்புகள் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் நிர்ப்பந்தத்திற்கு விட்டுக் கொடுத்து மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ போதிய வளங்களின்றி குறுங்காலத்துக்குள் யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற முன்வைத்த அவதந்திரத்துக்கு தானே பலியாகியுள்ளார். யாழ் குடாநாடு 1987க்குப் பின் மீண்டும் ஒரு அனர்த்தத்தில் இருந்து மயிரிழையில் தப்பித்துள்ளது.

இலங்கையின் இராணுவ வரலாற்றில் 23.07.83இல் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலுக்குப் பின் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதல் இதுவாகும்.

கடந்த ஐந்தாறு வருடங்களாக வடகிழக்கில் இடம்பெற்று வருகிற இராணுவத் தாக்குதல்களின் நோக்கத்துக்கும் விளைவுகளுக்கும் பொதுமக்களது உயிர் உடமை அழிவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்களில் ஒருவரான ஜெனரல் கொப்பேகடுவ தனிப்பட்ட முறையில் 'ஜென்ரில்மென்' என்று பெயரெடுத்திருப்பது ஆச்சரியம்தான். எது எப்படி இருப்பினும் இலங்கையின் நவீன ராணுவ வரலாற்றில் ஜெனரல் கொப்பேகடுவ மதிநுட்பம் வாய்ந்த நிகரற்ற தளபதி என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

வடகிழக்கு மாகாணத்தின் இராணுவ புவியியல் அமைப்பு பற்றிய அவரது அறிவும், விடுதலைப் புலிகள் அமைப்பின் பலம் பலவீனங்கள் பற்றிய அவரது அவரது அறிவும் முதன்முதலில் வடமராட்சித் தாக்குதலில் புலப்பட்டது. தரையிறங்கக்கூடிய கடலும் வெளிகளும் சார்ந்த பகுதிகள், தீவுகள் என்பன தொடர்பாக இராணுவத்துக்கும், ஏனைய பகுதிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் இருக்கிற வாய்ப்புகள் அடிப்படையிலேயே நெடுங்காலமாக கொப்பேகடுவவின் இராணுவ அணுகுமுறை அமைந்திருந்தது.

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் அமைப்பையோ அல்லது தமிழர்களது விடுதலைப் போராட்டத்தையோ நிரந்தரமாக நசுக்கி விட முடியும் என கொப்பேகடுவ கருதவில்லை. தமக்கு

www.tamilarangam.net

வாய்ப்பான பகுதிகளில் இராணுவத்தின் கையை ஓங்க வைப்பதும், அரச அத்தகைய பலமான நிலையில் இருக்கும்போது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லுதலுமே சாத்தியமானது என்று கருத்துக் கூறியதற்காக 1990இல் இலங்கை அரசின் கோபத்திற்கும் இவர் ஆளாகியிருக்கிறார்.

எனினும் அண்மைக் காலத்தில், விடுதலைப் புலிகள் இந்திய உறவில் ஏற்பட்டுள்ள இலகுவில் சரிசெய்ய முடியாத பிளவுகளையும், விடுதலைப் புலிகளின் அரசியல் ரீதியான பின்னடைவுகளையும் பயன்படுத்தி, இராணுவ சாதனங்களின் வரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளை சுற்றிவளைத்து தாக்குவதன் மூலம், விடுதலைப் புலிகளின் கையிருப்பில் உள்ள வெடிபொருள் எரிபொருள் இராணுவ சாதனங்களை செலவழிய வைத்து, ஈற்றில் அவர்களை முறியடித்துவிட முடியும் என்ற அடிப்படையில் செயற்பட்டவர்களில் கொப்பேகடுவவும் ஒருவர் என்றே தோன்றுகிறது.

## II

விடுதலைப் புலிகள் 1987 யூலையில் இருந்து ஆனையிறவு தோல்வி வரைக்கும் கைக்கொண்டிருந்த நேரடி யுத்தத்தை முதன்மைப் படுத்துகிற பிழையான மூல உபாயத்தை திடீரெனக் கைவிட்டு விட்டனர். தொடர்ந்து கெரிலா யுத்தத்தை முதன்மைப் படுத்தியதுடன் தமது நேரடி இராணுவ கடமைகளிலும் கெரிலாத் தன்மையை அதிகரித்தனர். இது கொப்பேகடுவ எதிர்பார்க்காத மாற்றம். அமைப்பு ரீதியாக தனது பிழைகளை இனங்கண்டு திருத்திக் கொள்கிற வல்லமை விடுதலைப் புலிகளுக்கு இல்லை என்று இலங்கை அரச கருதியிருந்தது. விடுதலைப் புலிகளின் இராணுவ மூல உபாய மாற்றத்தினால் இலங்கை அரச தரப்பு போட்ட கணக்கின் இராணுவ பக்கத்தில் தவறு ஏற்பட்டது.

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் அமைப்பு உலகின் முதன்மையான கெரிலா அணி என அராலி சம்பவத்தில் கொல்லப்பட்ட யாழ் குடாநாட்டின் இராணுவத் தளபதி விஜய விமலரட்ண குறிப்பிட்டுள்ளார். கொல்லப் படுவதற்குச் சில வாரங்களுக்கு முன் 'ஏசியா வீக்' நிருபர் 'ஜோன் கொல்மே'க்கு அளித்த பேட்டியில் "முன்னரும் அவர்கள் கடுமையானவர்களாக இருந்தனர்" என 1987க்கு முன்னம் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிக் குறிப்பிட்ட விஜய விமலரட்ண '1987இன் பின்னர் அவர்கள் மிகமிகக் கடினமானவர்களாக மாறிவிட்டனர். இந்தியர்களோடு போராடியதில் அவர்கள் பெருமளவு தன்னம்பிக்கையைப் பெற்று விட்டனர். நாங்கள் இப்போது உலகிலேயே மிக நன்கு பயிற்றப்பட்ட, மிக நன்கு ஆயுதந் தரித்த சிறப்பான செயலூக்கம் பெற்ற கெரிலா அணியோடு மோதுகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவ வெளியேற்றத்தின் பின் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட அதீத தன்னம்பிக்கை எதிரி பற்றிக் குறைவான மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையில் நேரடி இராணுவத் தாக்குதலை முதன்மைப் படுத்த முனைந்தது போன்ற தவறுகள் இராணுவ ரீதியாக இழைக்கப்பட்ட போதும், ஆனையிறவுத் தோல்வியின் பின்னர் அதிசயிக்கத் தக்க வேகத்தில் அக் குறைபாடுகள் நிவர்த்தியாக்கப் பட்டது.

இன்றைய இராணுவ சமநிலை இலங்கை அரச வடகிழக்கு மாகாணங்களின் பெரும்பகுதிகளையும், விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணக் கரையோரம், தீவுப் பகுதிகள், மன்னார்தீவு, பலாலி, ஆனையிறவு, வவுனியா என்பவற்றையும் இழந்த நிலையிலும் ஏற்பட்டுள்ளது. இச்சமநிலையைக் குறுங்கால இராணுவத் திட்டங்களின் ஊடாக மாற்ற முடியாது என்பதை கொப்பேகடுவ மரணம் புலப்படுத்துகிறது.

## III

சரியான அரசியல் மூல உபாயமற்ற நிலையில் பெறப்படுகின்ற இராணுவ வெற்றிகள் குறிப்பிட்ட தாக்குதல்களின் வெற்றியாக அமையுமேயன்றி, விடுதலைப் போராட்டத்தின் வெற்றியாக மேம்படாது. நீண்டகால அரசியல் ஆதாயங்களையும் அவை ஈட்டித் தராது.

விடுதலைப் புலிகள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சனை இவ்வகையினதாகும்

1987இல் அவர்கள் அரசியல் பிரிவை அமைத்தார்களாயினும், அதுவும் கெரிலாப் பிரிவு ஒன்றுக்கு அரசியல் அமைப்பின் பெயரைச் சூடியதாகவே அமைந்தது. சரியான அரசியல் மூல உபாயத்தை முதன்மைப் படுத்தவும், அறிவுத் துறையினதும் மக்களதும் பங்குபற்றலை பெறவும் அவர்கள் தவறிவிட்டனர்.

இந்த நிலையில் அரசியல் பிரிவின் நடவடிக்கைகள், ரகசியமாக விடுதலைப் புலிகளின் இராணுவ செயற்பாடுகளுக்கு உதவிவந்த பல ஆயிரம் இளைஞர்களைப் பகிரங்கப் படுத்தியதாக மட்டுமே அமைந்தது. இதனால் கிழக்கு மாகாணம் போன்று இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு இரகசியமாக உதவிவந்த பொதுமக்கள் பகிரங்கப் பட்டதுடன் பெரும்பகுதியினர் அழிக்கவும் பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் அரசியல் அமைப்பு, அரசியல் ரீதியாக முஸ்லிம் மக்களின் தலைமைகளுடன் இணக்கம் கண்டு, இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் தம்மை ஸ்தாபிக்க வழிகாண்பதற்குப் பதிலாக முஸ்லிம் மக்களது அரசியற் தலைமைகளை நிராகரித்து, அரசியல் ரீதியாகவும் முஸ்லிம் பகுதிகளில் தம்மை விஸ்தரிக்க முயன்றது.

இன்றைய தமிழர் முஸ்லிம்களது மோதல்களுக்கு வழிவகுத்த முக்கியமான தமிழர் தரப்புக் காரணங்களை இந்த அணுகுமுறையே தோற்றுவித்தது.

தற்போது அரசியற் பிரிவு கலைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது உட்கட்சி மோதல்களின் வெளிப்பாடு என்றும் இலங்கை தரப்பில் சொல்லப்படுகிறது.

அரசியல் பிரிவின் கலைப்பு சரியான அரசியல் மூல உபாயத்தை அமைக்கிற முயற்சியின் முன் நிகழ்வாக அமைந்தால் விடுதலைப் புலிகளுக்கும் அது நல்லது, தமிழர்களுக்கும் அது நல்லது.

சரியான அரசியல் மூல உபாயத்தையும் வழிகாட்டலையும் விடுதலைப் புலிகள் ஒத்துக் கொள்வார்களானால் மட்டுமே, அராலிக் கண்ணிவெடித் தாக்குதலின் வெற்றியை அவர்கள் வரலாற்றின் திருப்புமுனை வெற்றியாக மாற்றக்கூடும்.

தமது இளைஞர் சார்ந்த கெரில்லா அணியையும் ஆதரவாளர்களையும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்குப் பதிலாக, மக்களைத் தமது இயக்கத்துக்குள் எடுத்துச் செல்கிற அமைப்பாக, அரசியல் அமைப்பு செயல்பட்டிருக்குமானால் விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைகள் வெற்றி பெற்றிருக்கக் கூடும். அத்தகைய ஒரு வெற்றி சரியான அரசியல் மூல உபாயத்துக்கான தேடலுக்கும், அபிவிருத்திக்கும் வழிவகுத்திருக்கும்.

அரசியல் ரீதியான செம்மைப் படுத்தல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரேமதாசவின் அரசியல் சாணக்கியத் தனத்தின் வெற்றிகளை எதிர்கொள்ளவும், தமது அரசியல் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

## IV

பிரேமதாசாவின் அரசியல் வெற்றிக்கு விடுதலைப் புலிகளுடனான தற்காலிக உறவைப் பயன்படுத்தி 1990இல் ஜேவிபியை அழித்ததுடனும் இந்தியப் படைகளை வெளியேற்றியதுடனும் ஆரம்பிக்கிறது. மிகக் குறுங்காலத்தில் ஜேவிபி தொடர்பாகத் தான் இழைத்த வரலாறு காணாத மனித உரிமை மீறல்களைச் சமாளித்த விதத்தில் இந்த வெற்றி முன்னேற்றமடைந்தது. வடகிழக்கு மாகாணம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழருக்குப் பிரச்சனை இல்லை என சர்வதேச சமூகம் கருதுகிற சூழலை உருவாக்கியதில் இது ஓரளவு ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

1992இல் யுனிசெவ் நிறுவனமும் பிரமதாசாவின் அரசியல் வெற்றிக்குச் சாட்சியாகியது. வடகிழக்கு தவிர்ந்த பகுதிகளில் தமிழருக்குப் பிரச்சனை இல்லை என யுனிசெவ் தெரிவித்ததையும், பிரேமதாசா போரில் மனிதாபிமானத்தைக் கடைப்பிடிப்பதாக யுனிசெவ் அமைப்பின் நிர்வாக இயக்குனர் 'ஜேம்ஸ் கிறாண்ட்' கூறியதையும் இங்கு குறிப்பிடலாம்.

"இலங்கையில் அரசினர் வைத்தியசாலைகளில் பிரிவினைப் போராட்டத்தில் ஈடுபடுகிற சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் சிகிச்சை அளிக்கப் படுவதைக் கண்டு நான் வியப்படைந்தேன். உலகில் இலங்கை மட்டுமே இத்தகைய ஒரு நாடாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த உதாரணம் யூகோஸ்லாவியாவிலும் பின்பற்றப் பட்டால் எமது பணி இலகுவாகி இருக்கும்.என ஜேம்ஸ் கிறாண்ற் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஒரு அரசியல் தந்திரம் இல்லாமல், பிரேமதாசா அரசினால் இவ்வளவு காலமும் போரைத் தொடர்வதும் அதற்கு வேண்டிய சர்வதேச உதவிகளைப் பெறுவதும் சாத்தியப் பட்டிருக்காது. எனினும், வெறும் அரசியல் தந்திரங்கள் மட்டும் சரியான அரசியல் மூல உபாயமாக விடாது. இதுவே இலங்கை அரசின் பிரச்சனை.

## V

விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில், குறைந்த பட்சம் சர்வதேசிய, இந்து சமுத்திர,

---

## விலைவாசி ஏற்றம்

கடந்த இரு மாதத்தில் நோர்வே நாட்டில் பொருட்களின் விலை 0.2%ஆல் அதிகரித்துள்ளன. அத்துடன் கடந்த ஒரு வருடத்தில் விலைவாசி 2.5%ஆல் அதிகரித்துள்ளது. கடந்த இருமாத காலத்தில் உணவு வகைகள் 0.3%ஆல் விலைகூடின, ஆடை வகைகள் 1%ஆல் விலைகூடின.

- ஊர்க்குருவி -

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய ரீதியில் தமக்கு ஏற்பட்டுள்ள தனிமைப்படலில் இருந்து விடுபடுகிறதற்கான அரசியல் முயற்சிகளையாவது, மேலும் காலங் கடத்தாது ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இது மட்டுமே நீண்டகால அடிப்படையில் தோற்றுப் போகாமல் இருக்கவும், இத்தகைய தாக்குதல்களில் கிட்டும் வெற்றிகளூடாக அரசியல் வெற்றிகளையும் ஆதாயங்களையும் பெறவும் வழிவகுக்கும். இத்தகைய விடுபடுதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு குறைந்த பட்சம் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

1. முஸ்லிம் மக்கள் தொடர்பான தமது தவறுகளைத் திருத்துதல்.

2. இந்திய இலங்கை நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டையும், தமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முரண்பாட்டையும் கையாள்வதில் இதுகாறும் கடைப் பிடிக்கப்பட்ட மூல, தந்திர உபாயங்களை மீளாய்வு செய்தலும் தவறுகளைத் திருத்திக் கொள்வதும்

3. சர்வதேச மனித உரிமை நிறுவனங்களின் ஆலோசனைகளுக்குச் செவிமடுத்து தளத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

4. பரந்துபட்ட ஐக்கிய முன்னணியின் அவசியத்தை உணர்தலும், அதனைக் கட்டியெழுப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

விடுதலைப் புலிகள் கொள்கை ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் தம்மை அபிவிருத்தி செய்து கொள்ளாமல் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமில்லை.

முஸ்லிம் மக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள், அலிஞ்சப் பத்தனை தாக்குதல்களைப் போன்ற முஸ்லிம் பொதுமக்கள் மீதான சகல தாக்குதல்களையும் ஒருதலைப் பட்சமாக உடனடியாக நிறுத்துவது அவசியம். முஸ்லிம்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு ஒத்துழைத்தல், முஸ்லிம் மக்களின் மீளக் குடியமர்வு, புனர்வாழ்வு என்பவற்றுக்கு ஒத்துழைத்தலும் அவசியம். இதே வழியை முஸ்லிம் தீவிரவாதிகளும் கடைக்கொண்டு தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்தவும், தமிழர்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கும் அகதிகள் புனர்வாழ்வுக்கும் குந்தகம் விளைவிக்காதிருக்கவும் தூண்டப் படுதல் வேண்டும்.

விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்கள் தொடர்பாக அவர்கள் அங்கீகரிக்கும் தலைமைகளூடாக செயல்படுவதுடன், இணைந்த வடகிழக்கு

# பாட்டிமார் விழா!

உலகில் முதலாவது பாட்டிமார் விழா நோர்வேயில்தான் நிகழ்ந்தது. யூலை மாதம் மூன்றாம் திகதி முதல் ஐந்தாம் திகதிவரை நிகழ்ந்த இந்த விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகள் நீண்ட காலமாக சமூகத்தில் உணரப்படாத ஒரு விசயத்தை உணர்த்துவனவாக இருந்தன. மனிதவாழ்வில் பாட்டிமார் எவ்வாறு முக்கிய பங்குகளை ஆற்றுகிறார்கள் என்பதை இந்த நிகழ்ச்சிகள் தெளிவாக்கின. இந்த விழா முன்னெப்போதும் நிகழாத புதிய வகை விழாவாக இருந்தாலும், நோர்வேப்




பாட்டிகள் இந்த விழாவைச் சிறப்பான முறையில் பலரும் பாராட்டும் விதத்தில் கொண்டாடினர். இந்த விழாவுக்கென ஒஸ்லோவில் இருந்து, துருவ நகரான பூடோ (BODØ) நகர்வரை சிறப்பு ரயில் + பஸ் விடப்பட்டிருந்தன. பாட்டிகள் கலந்துகொண்ட விளையாட்டுகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மட்டுமன்றிப் பாட்டிமார் பற்றிய கருத்தரங்குகளையும் அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். கனடா, அமெரிக்கா, சிலி, இங்கிலாந்து, ஆர்ஜென்டீனா உட்படப் பல நாடுகளில் இருந்தும், ஸ்கன்டினேவிய நாடுகளில் இருந்தும் ஏராளம் பாட்டிகள் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

● சிவன் ●

www.tamilarangam.net

மாகாணத்தில் முஸ்லிம் மக்களை ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தீர்வை முன்வைப்பதும் நடைமுறைப் படுத்துவதும் அவசியம்.

இன்றைய நிலையில் தமிழர் முஸ்லிம்கள் பிளவை தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராக பழிவாங்கல் என்ற பெயரில் முஸ்லிம் ஆயுதபாணிகளின் தரப்பு இராணுவ ஆதரவுடன் மேலும் சிக்கலாக்கி உள்ளது. இத்தவறுகள் முஸ்லிம் தரப்பு அமைப்புகளாலும் அறிஞர்களாலும் போதியளவு விமர்சிக்கப் படவில்லை. இது விரக்தி தருவதாகும். நாளை இலங்கை இராணுவமே முஸ்லிம் ஆயுதபாணிகளை நிராயுதபாணிகள் ஆக்கும். முஸ்லிம் மக்களுக்குரிய தம்மைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையை யாரும் கேள்விக்கு இடமாக்க இயலாது. ஆனால் முஸ்லிம் ஆயுதபாணிகளும், தீவிரவாதிகளும் இராணுவத்தின் கைப்பாவைகளாகி அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைத் தாக்குகிற நிகழ்வுகள் அதிகரிப்பதையிட்டு, முஸ்லிம் மக்களது தலைமையும் அறிஞர்களும் மௌனம் சாதிப்பது பிழையானது.

## VI

4000க்கும் மேல் இராணுவத்தினர் விலகி ஓடிச் சென்றுள்ள நிலையில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் வடமராட்சி சூரயா கீர்த்தியும் பிரிகேடியர் விஜய விமலரத்னவின் தனிப்பட்ட செல்வாக்கும் இதுகாறும் இராணுவத்தினருக்கு ஊக்கம் தந்து அவர்களைப் போர்க் களத்துக்கு எடுத்துச் செல்லப் பெரிதும் உதவியது.

இலங்கையில் அரசியல் தலைவர்கள் யாரும் இத்தகைய 'கரிஸ்மா'வை இராணுவத்தின் மத்தியில் கொண்டிருக்கவில்லை. அதனால் இது அரசைப் பொறுத்து நீண்ட காலத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

நீண்ட காலமாக தமிழகத்தின் ஊடாகவும், கடல் மார்க்கமாகவும் இடம்பெற்ற இராணுவ சாதன வளங்கள் எரிபொருள் வரத்து பாதிக்கப்பட்ட நிலையில் தீவுப் பகுதி வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளைக் கைப்பற்றி முற்றுகையை நீடிப்பது வெற்றிக்கு வழிவகுக்கும் என இராணுவ தடுப்பு கருதுவதாகத் தெரிகிறது. இடம்பெறும் இராணுவ தரப்பு தாக்குதல்கள் பெரும்பாலும் தமது தளங்களை முற்றுகையில் இருந்து காப்பாற்றவும், புலிகளை அங்கும் இங்கும் அலைத்து எரிபொருள் வெடிப்பொருள் இருப்பைச் செலவு செய்ய நிர்ப்பந்திக்கும் அடிப்படையிலும், கடல் பெருவெளிகள் சார்ந்த பகுதிகளைக் கைப்பற்றி முற்றுகையை இறுக்கும் அடிப்படையிலுமே வகுக்கப் பட்டிருந்தது. எனினும் அண்மைக்கால நடவடிக்கைகள் அரசும் ஜெனரல் கொப்பேகடுவவும் குறுங்காலத்துள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றலாம் என்ற அடிப்படையிலேயே செயல்பட்டதாகத் தெரிகிறது. ஒருவேளை இவ்வருட இறுதியில் தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுகிற போது 'யாழ்ப்பாண சூரயா'வாக புகழ்பெற கொப்பேகடுவ மனப்பால் குடித்திருக்கலாம். அரசுக்கும் பொருளாதார ரீதியாக போரைக்



குறுங்காலத்துக்குள் முடிக்க வேண்டியிருந்தது. அரசியல் தீர்வை நிராகரித்து போதிய சாதன வளமற்ற நிலையில் போரைத் துரிதப்படுத்த முன்வைத்த சாத்தியமற்ற இராணுவ மூல உபாயத்துக்கு இலங்கை இராணுவத்தின் தலைமைப் பீடமே பலியாகியுள்ளது.

போதிய வாகனங்கள் இல்லாமையால்தான் இராணுவ விதிமுறைகளுக்கு மாறாக உயர் அதிகாரிகள் பலர் ஒன்றாகப் பயணம் செய்ய நேர்ந்தது என்று கூறப்பட்டதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

நீண்டகால அதிரடித் தாக்குதல்களா அல்லது அரசியல் தீர்வா என்ற கேள்வியை வரலாறு அரசின் முன்னரும் விடுதலைப் புலிகள் முன்னரும் மீண்டும் வைத்துள்ளது என்றே கருதுகின்றேன்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் செம்மைப் படுத்தல் ஏற்படாவிடின், இத்தகைய வெற்றிகரமான தாக்குதல்களின் அரசியல் ஆதாயம், முழுமையாக அவர்களுக்குக் கிட்டப் போவதில்லை. பெரிய வெற்றிகள் கூட தற்காலிக போர் நிறுத்தத்துக்கும், தற்காலிக பேச்சுவார்த்தைக்குமே வழிவகுக்கும். நீண்டகால அடிப்படையில் மீண்டும் போர் என்பதே யதார்த்தமாக அமையும்.

www.tamilarangam.net

# கொழும்பில் நிகழ்ந்தவை

இராணுவ அதிகாரிகளின் மரணத்துக்குப் பழிவாங்கலாக நிகழ்ந்த சம்பவம் எனக் கருதப்படும் தாக்குதல் ஒன்றில் மட்டக்களப்பு மயிலத்தனையில் 25பேர்வரை சுட்டும் வெட்டியும் கொல்லப் பட்டதாக கொழும்பில் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் இராணுவ அதிகாரிகளின் இறுதிச் சடங்குகளின்போது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து அரச அதிகாரிகள், முக்கியஸ்தர்களைத் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தின் போது இறுதிச் சடங்குகளுக்குப் பொறுப்பாயிருந்த பிரதி அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சர் சிறிசேன குரே, கொழும்பு முதல்வர் ராஜபக்ஷ போன்றோர் தாக்கப் பட்டோரில் அடங்குவர். இவ்வாறான சம்பவங்கள் இரு இறுதிச் சடங்குகளிலும் நிகழ்ந்தன.

ஒகஸ்ற் 10ஆம், 12ஆம் திகதிகளில் முறையே கொப்பேகடுவ, விஜய விமலரட்ண ஆகியோரது இறுதிச் சடங்குகள் இராணுவ மரியாதையுடன் நிகழ்ந்தன. கொப்பேகடுவவுக்கு அரச மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. இராணுவ அதிகாரிக்கு அரச மரியாதை செலுத்தப் படுவது வழமையல்ல.

கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகளில் ஏறத்தாழ 50,000 பேர்வரை கலந்து கொண்டனர் என மதிப்பீடுகள் கூறுகின்றன. இறுதிச் சடங்குகளில் கற்களை வீசியும், அரச மந்திரிகளைத் தாக்கியும் கலகத்தில் ஈடுபட்டோர் மீது பொலிசாரால் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யப் பட்டதுடன் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப் பட்டது. இச்சம்பவங்களின் போது 15பேர் காயம் அடைந்தனர். கலகக்காரரினால் பொலிஸ் வாகனங்கள், பஸ்கள் உட்படப் பன்னிரண்டு வாகனங்கள் தாக்குதல்களால் சேதமாக்கப் பட்டன. எதிர்க்கட்சி ஒன்றினாலேயே இந்தக் கலகங்கள் நடத்தப் பட்டன என அரச சார்பில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ கூறியுள்ளார். இக் குற்றச்சாட்டை சுதந்திரக் கட்சி மறுத்துள்ளது. கொப்பேகடுவவுக்கு அரச மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட வேண்டும் என்பதே கலகக்காரர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது.

கொழும்பில் தமிழ் வர்த்தகர் ஒருவர்மீது சிலர் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தியுள்ளனர். காயங்களுடன் இவர் உயிர் தப்பினார். வேறொரு சம்பவத்தில் தமிழருக்குச் சொந்தமான கடை ஒன்று இரவில் தீயிடப் பட்டது.

கொப்பேகடுவ உட்பட பத்து அதிகாரிகள் மரணமானது தொடர்பாக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி இஸ்மாயில் தலைமையில் விசாரணை ஒன்று நடத்தப்பட உள்ளது.

வடக்கில் ராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டபடி தொடரும் என இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். இந்தத் தாக்குதலால், ராணுவ நடவடிக்கைகள் சிறிது தாமதமாகலாம் எனக் கூறிய அவர் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும் நோக்கம் அரசுக்கு இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் இடத்துக்கு மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா நியமிக்கப் பட்டுள்ளார். யாழ்ப்பகுதி ராணுவத் தளபதியாகத் தற்காலிகமாக அனுப்பப்பட்ட பிரிகேடியர் ஆர்.டி.எஸ்.தலுவத்த தொடர்ந்து அப்பதவியை வகிப்பார்.

*- செய்தியாளன் -*

www.tamilarangam.net

# கனடாவிலும் ஓர் இலக்கியமாலை



அப்பாவி

கோடை விடுமுறைக்காய்ப் பாடசாலை மூடியிருந்தது. யூன் மாதத்தின் ஈரமான முதல் வாரம் கொஞ்சம் எரிச்சலைத் தந்தது. உமாவின் வீட்டில் உட்கார்ந்து செந்தாமரையைப் புரட்டிக் கொண்டிருந்த போதுதான் அந்த ஓரங்குல அறிவிப்பு கண்களைக் குத்திற்று. ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் 'காலம்' இலக்கிய மாலை – யூன் ஆறாம் திகதி மாலை ஆறு மணி – புத்தக விற்பனை – புத்தக வெளியீடு – சித்திரலேகா மௌனகுருவின் சிறப்புரை – மஹாகவி கவிதைகள்: ஒரு கவிதா நிகழ்வு..... இப்படி!. "அவங்கள் கடிப்பாங்கள் ஐசே......" என்று தயங்கிய உமாவை இழுத்துக் கொண்டு போகவேண்டியதாயிற்று.

நிகழ்ச்சி நடக்கவிருந்த மண்டபத்தின் முன்னால் மேசையொன்றில் புத்தகங்கள் பரப்பி வைக்கப் பட்டிருந்தன. இந்தியாவிலிருந்து சுங்கக் கெடுபிடிகளைத் தாண்டி வந்திருந்ததாகச் சொன்னார்கள். சேரன், சண்முகம் சிவலிங்கம், ஹம்சத்வனி, புதுமைப் பித்தன் என வட அமெரிக்காவுக்குப் 'புதிய' பெயர்களைக் காண முடிந்தது. மஹாகவியின் கோடை, குறும்பா அல்லது ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் கிடைக்குமா என்று தேடித் தோற்றேன். அடுக்கி வைக்கப்பட்டிருந்த காலம் சஞ்சிகையின் பழைய பிரதிகள் ஈழத்தின் 'அலை'களை நினைவுபடுத்தின.

கூட்டம் ஆரம்பமானபோது மண்டபத்தினுள் ஆண்களும் பெண்களுமாய் நூறுக்கு மேற்பட்டோரைப் பார்த்தபோது கனடாத் தமிழரின் இலக்கிய ஆர்வத்தைப் பாராட்டத் தோன்றியது. "சனங்களுக்கு இது ஒரு get together மாதிரி..." என்று உமா சொன்னதையும் கேட்டேன். "காக்கைச் சிறகினிலே......" என்று ஒற்றை ஆண்குரலில் பாரதி பாடலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. தலைவரின் சிற்றுரையில் ஓர் இலக்கிய ஏடு எதிர்கொள்ளும் பிரச்சனைகளின் விவரம் இருந்தது. சந்தா சேகரிப்பில் உள்ள சிக்கல்கள், நித்தியமான நிதி நெருக்கடி, இதழ் அட்டையில் காலாண்டு இதழ் என்று துணிந்து எழுத முடியாத நிலைமை, கனடாவில் தொகுத்து இந்தியாவில் அச்சிட்டு கனடாவில் வெளியிடும்வரை எதிர்நோக்கும் கேள்விகளும் தடங்கல்களும், எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும்

www.tamilarangam.net

இருக்கும் தட்டுப்பாடு போன்றவற்றிற்கு மத்தியில் காலம் இதழை உயிருடன் வைத்திருப்பதில் முனைப்பாக இருக்கும் சிறு ஆர்வலர் கூட்டமும், ஆசிரியர் செல்வமும் எனது மதிப்பைச் சம்பாதித்தார்கள்.

ஈழத்தின் ஆரம்பகால இலக்கிய இதழான 'பூரணி' மகாலிங்கம் சிற்றிலக்கியக்கங்கள் மற்றும் தமது அனுபவங்கள் பற்றிய தமது உரையை வாசித்தார். சமகால இலக்கிய உலகத்துடன் அதிகம் பரிச்சயம் இல்லையோ என்று தோன்றியது. "ஐசே, உந்தாள் ஆரோ எழுதிக் குடுத்ததை வந்து வாசிக்குது" என்று உமா சொன்னதை மறுத்துச் சொல்ல எனக்குத் தோன்றவில்லை. காலம் சஞ்சிகையின் ஆறாவது இதழும், ஆனந்த பிரசாத்தின் 'ஒரு சுயதரிசனம்' என்ற கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டு முதற்தொகுதி பிரதிகள் மேடையில் விற்கப்பட்டன. "என்ன சிறீ அண்ணை உங்களுக்கு என்னத்துக்கு உது....?" என்று உமா கேட்டதுக்கு "செல்வம் எங்கட கொம்பனியிலைதான் வேலை செய்யிறார். பத்து டொலர் குடுத்தனான், பறவாயில்லை...." என்று மேடையில் போய் ஓர் இதழை வாங்கி வந்திருந்த சிறீ அண்ணை பதில் சொன்னார்.

"எண்பதுகளுக்குப் பின்னர் ஈழத்தில் தமிழ் இலக்கியம்: போக்குகளும் சவால்களும்" என்ற தலைப்பில் சித்ரலேகா மௌனகுரு சிறப்புரையாற்றினார். அரசியல், மொழி, மொழியின் பெருமை, தேசியம், தேசியப் பிரச்சனைகள், பெண்களின் விழிப்பு, விடுதலைப் போராட்டம், புலம்பெயர்ந்த மக்களும் அவர்களது பிரச்சனைகளும்.... என ஈழத்தின் இலக்கியப் போக்கை அவர் ஆராய்ந்தார். எமது வேர், புலம்பெயர்ந்த இலக்கிய கர்த்தாக்களிடையே காணப்படும் திரும்பிப் போவதா இல்லையா என்ற குழப்பமான நிலைமை, சுய இனங்காணல், மனிதம் வெளிப்படுகின்ற படைப்புகள், எமது இலக்கியத்தைப் பொது உலக இலக்கியப் பரப்பில் இணைத்துக் கொள்ளல் என்ற சவால்களைப் பற்றியும் அவரது உரை தொட்டது. "வட அமெரிக்காவில் வாழும் ஜப்பானிய, சீன, அரபு, ஆபிரிக்க மக்களிடையே அவர்களது சுயதேச இலக்கியம் இன்னமும் உயிருடன் இருக்கின்றபோதும் படைப்புகள் ஆங்கிலத்திலேயே வெளிவருகின்றன. ஆனால், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தமிழிலேயே தமிழ் இலக்கியம் படைக்கப்படுகின்றது." என்ற தனது அவதானிப்பைப் பகிர்ந்துகொண்ட சித்ரலேகா, "அடுத்த தலைமுறை

## தமிழர் நிதி உதவி!

அண்மையில் இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்களது ஆலோசனை, வேண்டுகோளின் பேரில் துறொம்சோ தமிழ்ச்சங்கம், யாழ் பல்கலைக்கழகத்திற்கு அச்சுக்கூடம் ஒன்றை நிறுவ உதவவுள்ளது.

இந்த அச்சுக்கூடத்தினை நிறுவ ஏற்படும் செலவு ஏறத்தாழ இரண்டுலட்சம் நோர்வேஜியக் குறோணர்களாகும். இந்த நிதியைத் திரட்டும் பணியில் தம்முடன் ஒத்துழைக்குமாறு துறொம்சோ தமிழ்ச் சங்கம் நோர்வே வாழ் தமிழர்கள் அனைவரையும் கேட்டுள்ளது.

முகவரி: Tromso Tamil Forening, Sondre Tollbu gt 2, 9008, TROMSO

வங்கிக் கணக்கிலக்கம்: 4750.27.11616

www.tamilarangam.net

தமிழிலேயே இலக்கியம் படைக்குமா?" என்ற கேள்வியையும் எழுப்பினார். நோர்வேயின் சக்தி சஞ்சிகையைப் பற்றிச் சிலாகித்துப் பேசிய அவர், அதில் வெளிவந்த கறுப்பு இனச் சகதொழிலாளியுடன் உட்கார்ந்து தமிழ்விழா பார்த்த ரஞ்சனியை வைத்து கலாப்ரியா எழுதிய கதையையும் சொன்னார்.

ஏறத்தாழ ஒருமணி நேரம் நீடித்த இந்த உரையில் ஆங்கிலமும் மேடைத் தமிழும் பேச்சுத் தமிழும் ஒரு சமமற்ற பரிமாணத்தில் கலந்திருந்தமையும் சரளமற்றதாகத் தோன்றிய பேச்சு ஓட்டமும் என்னை ஏமாற்றியமை நிஜம். பூரணமான தொகுப்பு இல்லாமல் எந்தச் சஞ்சிகையையோ இலக்கியக் காரனையோ குறிப்பிட்டுச் சொல்லப் போவதில்லை என்று ஆரம்பத்திற் சொல்லிவிட்டு, அரையும் குறையுமான பட்டியல்களைப் பின்னர் தந்ததும் குறையாகப் பட்டது. அவ்வப்போது தயார் செய்யாமல் விரிவுரைக்கு வரும் எமது பேராசிரியர் ஒருவரை உமா ஞாபகப் படுத்தினார்.

கடைசியாய் ஆனந்த பிரசாத், புராந்தகன் மற்றும் மூவர் பங்கேற்க 'உய்ய விழையும் உளம்' எனும் தலைப்பில் கவிதா நிகழ்வு ஆரம்பமானது. பாறைகீறிப் பயிர் செய்யும் நம்மூரானையும், கிடுகிடுத்து வண்டி ஓடும் பாதை இடுக்கில் முளைத்திருக்கும் சிறுபுல்லையும் புள்ளியளவிலான ஒரு பூச்சியையும் இணைத்து குரல் அசைவும், இசையும் கலந்து பின்னப்பட்ட கவிதா நிகழ்வு அவ்வப்போது கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த உமாவை நிமிர்ந்து உட்கார வைத்தது. "ம்... ஒரு நல்ல விமர்சனம்" என்று நினைத்துக் கொண்டேன்.

எட்டரை மணிக்குச் சாப்பிட வருவதாக முன்னர் வாக்குக் கொடுத்திருந்த நண்பன் ஒருவனைக் கூப்பிட்டுத், தவறியமைக்காக மன்னிப்புக் கேட்கவேண்டி வந்தது வேறு கதை! ●

# நாட்டிலிருக்கும் நண்பனுக்கு

அடையாளம் காட்டாத
பனிப் புகாரும்
அரவணைத்துச் செல்லாத
கடும் குளிரும்
நிர்வாணமாய்க்
காட்சி தரும்
நிழல் தரு மரங்களும்

எல்லாமே துன்பத்தின்
சுமைகளை துலாபாரமிட
நான் மட்டும் எங்கு
மகிழ்ச்சியைத் தேட
முனைப்புடன் எதிர்பார்த்தோம்
முறைப்புடன் அல்லவே

நீயும் காணாமல்
போய்விடுவாயோ என்ற
சேதி ஒன்றை
எதிர்பார்த்து
ஏங்கியிருக்கையிலே
எப்படி நிம்மதி?

இயந்திர வாழ்வின்
நிதர்சனம்கூட
என்னைப் பார்த்து
ஏளனம் செய்யும்.

இழந்ததைத் தேடிக்
கொண்டிருக்கையிலே
மீண்டும் மீண்டும்
எதனையோ இழக்கின்றோம்.

இப்போது
தேடுவதை விட
இருப்பதைப் பாதுகாப்பதே
தேவை என எண்ணுகிறேன்
கவனமாயிரு.

● குப்பிளான் ஜெகன் ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கட்டிடக்காட்டுக்குள்

செல்வம் கவிதைகள்

"ஆசியா"
3, Allee Paul Leautaud,
95200 Sarcelles,
France.





| | |
|---|---|
| கவிதைகள் | :செல்வம் |
| முதற் பதிப்பு | :பங்குனி 1992 |
| வெளியீடு | :ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம் (பிரான்சு) |
| வடிவமைப்பு | :சி.புஸ்பராசா |
| கணனி பதிப்பு | :ச.சபாலிங்கம் & செ.ராஜமோகன் |
| அட்டைப்படம் | :அ.தேவதாசன் |


## விசாரணை

பனி கொட்ட
வெள்ளையாய் இரவு

கொடுமைக் குளிர்காற்று
ஊரின் கோடையை நினைப்பூட்ட
விடியாமல் இரவு நீளும்

நாளை காலையில் விசாரணை
அகதியின் கதை கேட்பார்கள்

பசி தீர்க்க வந்தவர்கள்
பகை ஆறிய கதை சொல்வேன்

கண் வழியே உயிர் பிரிய
பலபேர் பார்த்திருந்தார்
பாலன் தீலிபன் நிமிர்ந்திருந்தான்
பத்திரிகை குறிப்புண்டு.

கடலையும் கோயிலையும் தவிர
வேறொன்றுமறியா
பக்கத்துவீட்டு செபமாலை அப்பு
அமைதிக்கு தடங்கலாகி
மூன்று நாட்களுக்குப் பின்தான்
உடல் கிடைத்தாம்
அம்மாவின் கடிதம் தலைமாட்டில்.

கண்ணயர்ந்த ஒருகணம்,
இருந்த கச்சையையும் அவிட்டுவிட்டு
காந்தி தாத்தா வடலியடைப்பில்
நடந்து வரக் கனவு கண்டேன்.

நாளை காலையில் விசாரணை
நாள்தோறும் வாதிக்கப்பட்டு
காலைகள் தோறும் தண்டிக்கப் படுகின்றேன்.

உடல் சுமந்து மனம் சலிக்கும்
இருந்தாலும்
யுத்தமே என்னை வாழச்சொல்லுது
சீவித்திட காரியங்கள் உண்டு
இருக்கப்போகின்றேன்,
நாளை காலையில் விசாரணை.

09/04/1988

www.tamilarangam.net

# வேதாளம் கேட்ட வில்லங்கக் கேள்வி!

வேதாந்தி



தான் ஆசையோடு வாங்கிவந்த மரக்கறிகளை இரண்டு பைகளில் சுமந்தபடி தேபான் ஸ்ரேசனைவிட்டு வெளியேறி வீதியைக் குறுக்கிட்டு மறுபக்கம் வந்த விக்கினதாஸைச் சிரிப்பு ஒன்று நிறுத்தியது. திரும்பிப் பார்த்தான், பைன் மரத்தில் இருந்து பாய்ந்த வேதாளம் சிரித்தபடியே அவனது பைகளைப் பறித்துக் கொண்டு மீண்டும் மரத்தில் ஏறிக்கொண்டது.

தன் முயற்சிகளில் சற்றும் தளராத விக்கினதாஸ் வேதாளத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தாலும், நேரடியாகச் சந்தித்திராதபடியால் பாதி விறைப்பும் பாதி நடுக்கமுமாய் நின்றுகொண்டிருந்தான். தன் சிரிப்பைச் சற்றும் மாற்றாத வேதாளம் அவனைப் பார்த்து, "நான் கேட்கும் கேள்விக்கு நீ விடை தெரிந்திருந்தும் கூறாவிட்டால் உன் தலை சுக்குநூறாக வெடித்துவிடும், உனது மரக்கறியும் கிடையாது" என்றது. தலை வெடித்தபிறகு மரக்கறி எதற்கு என்று தனக்குள் கேட்ட விக்கினதாஸ், வேதாளத்தைப் பாத்து "கேள்" என்றான்.

அப்போது ஓரளவு சமாதானமடைந்த தொனியில் தனது கேள்வியைக் கூறியது வேதாளம். "உங்கள் நாட்டவர்கள் பல ஆயிரம் பேர் இங்கேயும், வேறு ஐரோப்பிய நாடுகளிலும் அகதிகளாக வசதிகளோடு வாழ்கிறார்கள். ஆனால் தாய்நாட்டில் லட்சக்கணக்கில் அகதிகள் வாழ்ந்தும்

www.tamilarangam.net

அவர்களைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுவதில்லை?"

வழமையாக நீண்ட கதைகூறி அதன் முடிவில்தான் கேள்வி கேட்கும் என நினைத்திருந்த வேதாளம் இப்படித் திருரென்று காலை வாரியது, திகிலாக இருந்தது. தனது தலை சுக்குநூறாவதைக் கற்பனையில் பார்த்தான் விக்கினதாஸ்.

"பொதுவாக எம்மில் பலருக்குப் பிரச்சனையில் இருந்து தப்பத்தான் விருப்பம். பிரச்சனையை வேறு யாராவது வந்து தீர்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பதுதான் அதிகம். இதனால்தான் இப்படிப் பலலட்சம் பேர்கள் நாட்டைவிட்டு ஓடி வந்திருக்கிறோம்" என்று நிறுத்தினான் விக்கினதாஸ். வேதாளம் அவனை விறைத்தபடியே பார்த்துக் கொண்டிருந்தது. சுருங்கச் சொல்லி விளங்கப்படுத்தும் தனது பாணி வேதாளத்தைத் திருப்திப் படுத்தவில்லை என்பதை உணர்ந்த விக்கினதாஸ், குரலைச் செருமிக்கொண்டு மேடைப் பேச்சாளர்களின் பாணியில் ஆரம்பித்தான்.

"மற்றவர்களைப் பற்றி யோசிப்பது சின்ன வயசிலிருந்தே எமக்குப் பழக்கம் இல்லாதது. 'நீ படித்து நல்லா வந்தாப் போதும்' என்றுதான் எல்லாப் பெற்றாரும் யோசிக்கிறது. ஊர் நல்லா வரவேணும் எண்டு ஒருத்தரும் யோசிக்கிறதில்லை.

இவ்வளவு பிரச்சனை வந்தாப் பிறகும், எல்லாரும் தான் தப்பினாப் போதும், தனது பிள்ளை வெளிநாடு போனாற் போதும் என்றுதான் வாழ்ந்தவை. இது எங்கட நாடு, நாங்கள்தான் இதை மீட்கவேணும் என்று யாரும் யோசிச்சதில்லை. சுத்துமாத்துப் பண்ணியாவது தான் தப்புகிற எண்ணம் முற்றாக விடுபடாதவரை, யாரும் மற்றவனைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. இந்த நிலைமையிலை நாட்டு அகதிகளைப் பற்றி யோசிக்கிறது யார்?" என்று கேள்வியாக நிறுத்தினான் விக்கினதாஸ். மறுபடியும் வேதாளத்தைப் பார்த்தான். அதே முறைப்பில் இருந்தது வேதாளம்.

'அட கடவுளே இதுக்கு எப்படிச் சொல்லி விளங்கப் படுத்திறது' என்று தனக்குள் கேட்டுக்கொண்ட விக்கினதாஸ் மீண்டும் அதே தொனியில் ஆரம்பித்தான்.

"ஒவ்வொருவருக்கும் பிரச்சனைகளில் இருந்து தப்ப உரிமை இருக்கு. உயிரைப் பாதுகாக்க அப்படிச் செய்வதைப் பிழை என்றும் சொல்ல முடியாது. ஆனால் இலங்கையில் பிரச்சனை என்று சொல்லி அந்தச் சாட்டில்தான் இங்கே சீவிக்கிறோம். இந்த நிலைமையில் நாட்டைப் பற்றியோ, அங்கே இருக்கிற லட்சக் கணக்கான அகதிகளைப் பற்றியோ கவலைப் படாமல் இருக்கிறது சரியல்ல. ஏதாவது ஒரு விதத்தில் நாட்டுக்கும், அந்த அப்பாவி அகதிகளுக்கும் நாங்கள் ஏதாவது செய்யலாம், செய்யவேண்டும்"

வேதாளம் கண் இமைப்பதே இல்லையா? அதன் முகத்தில் உணர்ச்சிகளே இல்லையா? அவனுக்குப் புரியவில்லை. நாளை வெள்ளிக்கிழமை. இந்த மரக்கறி வீடுபோய்ச் சேராவிட்டால் நாளை பனிப்போர் தொடங்கிவிடும். பிறகு சனிஞாயிறும் நிம்மதியாக இருக்க முடியாது என்றே தோன்றியது. அவனது மனைவி நல்லவள்தான். ஆனால் வெள்ளிக்கிழமையாவது கோழி, பன்றியை விட்டால் என்ன என்று அவள் ஆசைப்படுவது பிழையா? மரக்கறி வீடுபோய்ச் சேரவேண்டும், தலையும் தப்பவேண்டும். பாழாய்ப் போன வேதாளத்துக்கு இது எங்கே விளங்கப் போகிறது?

ஏற்கனவே தான் சொன்னவற்றுக்கு மேல் போனால் இயக்கம், கியக்கம் என்று ஏதாவது கலந்துவிடும். வேதாளம் எந்த இயக்கம் என்று யாருக்கும் தெரியாது. வீணாக வில்லங்கத்தை விலைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்கமுடியாது. இப்படியே தனக்குள் யோசித்துக் கொண்டிருந்த விக்கினதாஸ் தேவையில்லாமல் இந்தத் தேபானில் வந்துவிட்டேனே என்று யோசித்தான். வேதாளம் ஏதாவது இயக்கமென்றால் என்ன நடக்கும்? ஆகக்கூடியது தலைதான் போகும். சிலநேரம் வேதாளம் அருகிலுள்ள லைற் போஸ்ற்றில் அவனைக் கட்டிவிடலாம். அவன் சொல்லும் பதிலில் திருப்தியில்லா விட்டாலும் தலை போகத்தான் போகிறது. எனவே வேதாளத்துக்குப் பயப்படுவதில்லை என்று முடிவு கட்டினான். நோர்வே வந்தபிறகு வேதாளத்துக்குப் பயப்படுவதாவது- போனால் தலை, வந்தால் மரக்கறி.

"தாய்நாட்டையும், அங்க இருக்கிற மக்களையும் பற்றி ஒவ்வொருத்தர் ஒவ்வொருவித அபிப்பிராயம் வைத்திருக்கலாம். ஒரு இயக்கத்துக்கும் ஆதரவு தராமல்கூட இருக்கலாம். அப்படிப் பட்டவர்களும் ஏதோ ஒருவிதத்தில் - உணவோ, பணமோ - அனுப்பி உதவ முயலவேண்டும். தாங்கள் சரியென்று நம்புகிற கருத்தில் நின்று, உதவிகளைத் தமக்கு நம்பிக்கையான வழிகளில் அனுப்பினால் அதுவும் ஒருவகை உதவிதான். அதைவிடத் தாங்கள் இருக்கிற நாடுகளில் இலங்கை இனப்பிரச்சனை நியாயமான முறையில் தீர்க்கப்பட வேணும் என்று குரலெழுப்பிப் போராட்டத்துக்கு சர்வதேச ரீதியில் ஆதரவு தேடவேணும். எங்கள் ஆட்கள் பலர் செய்த காரியங்களால் எங்கள் போராட்டம் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. எங்கட போராட்டத்திலை இருக்கிற பிழைகளைத் துணிஞ்சு கண்டிக்கவேணும். இவைகளைச் செய்யாமல் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் நாங்கள் எந்தப் பிரயோசனத்தையும் செய்ய முடியாது."

இப்போது வேதாளத்தை நிமிர்ந்து பார்த்தான். வேதாளம் சிரித்தது. முகத்தில் திருப்தி தெரிந்தது. பைகள் இரண்டையும் அவனிடம் நீட்டியது.

"விக்கினதாஸ், நீ பெரிதாகப் படித்தவனில்லை, என்றாலும் உனது நாட்டை நீ விரும்புகிறாய் என்பதும், உனது மக்களின் விடுதலை பற்றி ஓரளவு கருத்துத் தெளிவாக இருக்கிறாய் என்பதும் புரிகிறது. உனது கருத்துகளை நீ மற்றவர்களுடன் பகிர்ந்துகொள். பலர் தெளிவற்று உள்ள இந்த நாட்களில் உன்னைச் சந்தித்தது பெரிய நம்பிக்கையாக இருக்கிறது. தமிழர்கள் தமக்கிடையே உள்ள விரோதங்களைக் களைந்து, ஒருவரோடு ஒருவர் மனந்திறந்து கதைத்துப் பிரச்சனைகளைத் தீர்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். துவக்கு உயிரைத்தான் தீர்க்கும், பிரச்சனைகளைத் தீர்க்காது" என்று கூறிய வேதாளம் தன் கழுத்தில் இருந்து, தேர்வடம் மாதிரி எட்டுப் பவுணில் செய்த தங்கச் சங்கில் ஒன்றை அவனது கழுத்தில் போட்டு அவனைப் பாராட்டியது.

விக்கிரமதாஸ் அந்தச் சங்கிலியை எப்போதும் அடிக்கடி தடவிப் பார்த்துக் கொள்வான். வேதாளத்தைப் போலவே, அது கொடுத்த சங்கிலியும் வேறு ஒருவரது கண்ணுக்கும் தெரிவதில்லை. ●

## எதிலும் கொம்பியூட்டர்!


அடுத்த வருடத்துக்குள் நோர்வேயில் ஓடும் ரக்ஸிகள் அனைத்திலும் கொம்பியூட்டர்கள் பொருத்தப்படும். ரக்ஸி ஓட்டுபவர்கள் ஏதும் களவு புரியாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

இந்தக் கொம்பியூட்டர்கள் மூலம் பயணி, அதுவரை ஓடிய தூரம், அதற்கான சரியான கட்டணம், காத்திருந்ததற்கான நேரம், அதற்கான கட்டணம் என்பவற்றைச் சரியாக அறிந்துகொள்ள முடியும்.

● ஜீவகன்

www.tamilarangam.net

# லொஸ் ஏஞ்சல்ஸ்



மேற்காக விளைந்து
பொற்கொழித்த பூமியில்
செழித்த தேவதை நகரில்
செவ்விந்தியர் வேட்டை மிருகங்களாக
மரித்த காலத்தின்
மீட்டல் வரலாறு தொடங்குகின்றது.

உலகின் கண்களுக்கு
அழகழகாக வெள்ளைக் கனவுகள் சேர்த்து
மகிழ்வூட்டித் தூங்கவிட்டு
செழித்த வரலாறு
கணம் இடிந்து ஸ்தம்பிக்க
வான்முட்டிப் பரவும்
புகை
உலகெங்கும் செய்திசொல்லும்.

ஒளிசெத்து, இருள்விளைய
அத்திலாந்திக் சமுத்திரத்தின்
நீர்ப் பரப்பின் மேல் எழும்
ஈனக்குரலும், புகையும்,
வெளிநீண்டகையில் அணைந்த தீவட்டியுமாக
கட்டியம் கூறும்
நடந்தது கொலை என்று.

சுதந்திர லிபர்ட்டியின்
உப்பிப் பெருத்த உடல்
அனாதரவாகக் கரை ஒதுங்கிக் கிடக்கிறது.

அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஆழத்திலிருந்து
எழுந்து வருகின்றனர் 'கறுப்பு மனிதர்கள்'
சூட்டுக் காயங்களுடன்.

உலகெங்கும் ஒன்றுசேர்ந்தன குரல்கள்
"தேவதை நகரே!
உன் கனவுத் தொழிற்சாலையின்
துருப்பிடித்த அத்திவாரங்கள்
அத்தனை வெண்பூச்சுக்களையும் மீறி
வெளிக்காட்டி நிற்கிறது.
உன் வெள்ளைக் கனவுகள்
நீதியின் பட்டறைகளில்
உரசிப் பார்க்கப்பட்டு
மீண்டும், தீயில் சுடப்படுகிறது.

பொலிவிழந்த தேவதையே
இனியாகிலும்
தீக்குளித்து மீண்ட சீதைபோல
எழுந்து வா
நீதியின் பக்கமாக!"

**● சின்னா ●**
**"மே'92**

www.tamilarangam.net

# ஒலிம்பிக் திருவிழா

கோகுலன்

## Barcelona '92

உலகின் எல்லாப் பகுதியினரையும், ஒன்றிணைக்கும் விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக் கோடைகாலப் போட்டிகள் ஸ்பெயின் நகரான பார்சலோனாவில் நிறைவுபெற்றன.

மிக அதிக நாடுகள் பங்குபெற்றதும், பதக்கம் பெற்றதும் இந்த முறைதான். கோடை கால, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ஒரே வருடத்தில் நிகழ்வது இதுவே கடைசித் தடவையாகும். 1994இல் லில்லஹம்மரில் (நோர்வே) குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளும் 1996இல் அமெரிக்க நகரான அற்லாண்டாவில் கோடைகாலப் போட்டிகளும் நிகழ்வதுடன், பின்னர் இரு போட்டிகளும் மாறிமாறி இருவருட இடைவெளியில் வரும்.

பொதுநலத் தேசங்களின் ஒன்றியம் (பழைய சோவியத்) இவ்வருடமும் ஒலிம்பிக்கில் முதன்மை இடத்தைப் பெற்றது. இரண்டாவதாக வரும் என எதிர்பார்க்கப்பட்ட ஜேர்மனி, மூன்றாவது இடத்தைப் பிடித்தது. அமெரிக்கா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

கடந்த இரு ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரித்த கியூபா பதினான்கு தங்கப் பதக்கங்களுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இதில் ஏழு தங்கப் பதக்கங்கள் குத்துச் சண்டையில் பெறப்பட்டவை. (குத்துச் சண்டைக்கான மொத்தப் போட்டிகள் பத்து என்பது குறிப்பிடத் தக்கது)

நோர்வே இரு தங்கப் பதக்கங்களைப் பெற்றது. போட்டிகளில் பங்குபெறத் தகுதியற்றிருந்த கைப்பந்து (Handball) வீராங்கனைகள், யூகோஸ்லாவியா பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டதால் கிடைத்த சந்தர்ப்பத்தில் வெள்ளிப் பதக்கத்தைத் தமதாக்கினர். இந்தியா, இலங்கை என்பன (வழமைபோல) எந்தப் பத்தகத்தையும் பெறவில்லை.

(uavhengig - குழுவாக அனுமதி மறுக்கப்பட்ட யூகோஸ்லாவிய வீரர்கள், Ungarn - ஹங்கேரி, Osterike - ஒஸ்த்திரியா)

புள்ளிகளின் அடிப்படையில்:

1. SUS ........ 737,5 (169)
2. USA ........ 694,5 (169)
3. Tyskland ........ 560,5 (141)
18. Sverige ........ 108,5 (34)
23. Finland ........ 51,5 (18)
24. Norge ........ 51 (13)
27. Danmark ........ 38 (12)

Barcelona '92

| | GULL | SØLV | BRONSE |
|---|---|---|---|
| SUS | 45 | 38 | 29 |
| USA | 37 | 34 | 37 |
| Tyskland | 33 | 21 | 28 |
| Kina | 16 | 22 | 16 |
| Cuba | 14 | 6 | 11 |
| Spania | 13 | 7 | 2 |
| Sør-Korea | 12 | 5 | 12 |
| Ungarn | 11 | 12 | 7 |
| Frankrike | 8 | 5 | 16 |
| Australia | 7 | 9 | 11 |
| Italia | 6 | 5 | 8 |
| Canada | 6 | 5 | 7 |
| Storbritannia | 5 | 3 | 12 |
| Romania | 4 | 6 | 8 |
| Tsjekkoslovakia | 4 | 2 | 1 |
| Nord-Korea | 4 | 0 | 5 |
| Japan | 3 | 8 | 11 |
| Bulgaria | 3 | 7 | 6 |
| Polen | 3 | 6 | 10 |
| Nederland | 2 | 6 | 7 |
| Kenya | 2 | 4 | 2 |
| Norge | 2 | 4 | 1 |
| Tyrkia | 2 | 2 | 2 |
| Indonesia | 2 | 2 | 1 |
| Brasil | 2 | 1 | 0 |
| Hellas | 2 | 0 | 0 |
| Sverige | 1 | 7 | 4 |
| New Zealand | 1 | 4 | 5 |
| Finland | 1 | 2 | 2 |
| Danmark | 1 | 1 | 4 |
| Marokko | 1 | 1 | 1 |
| Irland | 1 | 1 | 0 |
| Etiopia | 1 | 0 | 2 |
| Algerie | 1 | 0 | 1 |
| Estland | 1 | 0 | 1 |
| Litauen | 1 | 0 | 1 |
| Sveits | 1 | 0 | 0 |
| Jamaica | 0 | 3 | 1 |
| Nigeria | 0 | 3 | 1 |
| Latvia | 0 | 2 | 1 |
| Nanibia | 0 | 2 | 0 |
| Sør-Afrika | 0 | 2 | 0 |
| Østerrike | 0 | 2 | 0 |
| Belgia | 0 | 1 | 2 |
| Iran | 0 | 1 | 2 |
| Kroatia | 0 | 1 | 2 |
| uavhengige | 0 | 1 | 3 |
| Israel | 0 | 1 | 1 |
| Mexico | 0 | 1 | 0 |
| Peru | 0 | 1 | 0 |
| Taiwan | 0 | 1 | 0 |
| Mongolia | 0 | 0 | 2 |
| Slovenia | 0 | 0 | 2 |
| Argentina | 0 | 0 | 2 |
| Bahamas | 0 | 0 | 1 |
| Colombia | 0 | 0 | 1 |
| Filippinene | 0 | 0 | 1 |
| Ghana | 0 | 0 | 1 |
| Malaysia | 0 | 0 | 1 |
| Pakistan | 0 | 0 | 1 |
| Puerto Rico | 0 | 0 | 1 |
| Qatar | 0 | 0 | 1 |
| Surinam | 0 | 0 | 1 |
| Thailand | 0 | 0 | 1 |

VG/REUTER



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## தீயும் நோர்வேயும்!


உலக சூழல் சமநிலையை நவீன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் உடைந்து சிதற வைத்துள்ளன. சூழல் மாசடையத் தொடங்கியதால் குழம்பிப் போன பூமிப்பந்தின் சூழல் சமநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக காலநிலை இதனால் பெரிதளவில் பாதிக்கப் பட்டுள்ளது. இந்தப் பாதிப்பின் நேரடி அனர்த்தத்தை, அண்மையில் நோர்வே அனுபவித்தது.

இந்தக் கோடை காலம் பல இடங்களில் கடும் வரட்சியை ஏற்படுத்தியது. விவ்சாயிகள் பெரியளவில் பாதிக்கப் பட்டனர். பல இடங்களில் காட்டுத் தீ உருவாகிப் பெரியளவு நாசத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு உண்டான தீயை அணைக்கப் பல மில்லியன் குறோணர்களை அரசு செலவிட வேண்டியிருந்தது. இந்த அனுபவங்கள், சூழல் பாதுகாப்பு பற்றிய உணர்வைப் பலரிடம் ஏற்படுத்தியிருக்கும் என நம்பலாம்.

*தீசன்*



*ஒஸ்லோ நகரை 1858 ஏப்ரல் 14ஆம் திகதி பெரும் தீ விழுங்கியது. இந்த விபத்தில் கணிசமான நகரக் கட்டிடங்கள் எரிந்து கருகின. குறைந்தது ஆயிரம் பேர் இந்த விபத்தில் உயிரிழந்தனர். இந்தப் பழைய ஓவியம் அந்த விபத்தைச் சிறைப் பிடிக்கிறது.*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியச் சிறையில் ஈழத்துப் பத்திரிகையாளர்!



இந்திய அரசினால் கடந்த வருடம் கைது செய்யப்பட்ட ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சிவநாயகம் கடந்த ஒருவருட காலமாக விசாரணை ஏதுமின்றிச் சிறையில் வைக்கப் பட்டுள்ளார். கடந்த வருடம் தமிழகத்தில் நிகழ்ந்த ராஜீவ் காந்தி கொலைக்குப் பின் கைது செய்யப்பட்ட பலரில் சிவநாயகமும் ஒருவர்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், இந்தியப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிப்பார் என்ற குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்ட போதும், இதுவரை இவரை எந்த நீதிமன்றத்திலும் நிறுத்தவோ குற்றப்பத்திரிகையை வழங்கவோ இந்திய அரசு தவறிவிட்டது. இது அடிப்படை மனித உரிமை மீறல் என்பதுடன், இந்திய அரசின் ஜனநாயக முகமூடியைக் கிழிக்கும் ஒரு தெளிவான சம்பவமுமாகும்.

சிவநாயகம் அவர்கள் கொண்டிருக்கும், வெளிப்படுத்திய அரசியற் கருத்துகளுடன் சுவடுகள் உடன்பாடாவிடினும், சிவநாயகம் அவர்களை நிபந்தனையற்ற முறையில் விடுவிக்குமாறு இத்தருணத்தில் சுவடுகள் பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறது●

## விமலேஸ்...



### மௌனம் உறைகிறது!

தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய போராட்டத்தில், தாம் கொண்டிருந்த கருத்துக்காக மௌனமாக்கப் பட்டோரின் தொகை அதிகரித்தே வந்திருக்கிறது.

மக்களுடன் தன்னை உறுதியாக இணைத்துக்கொண்டு, போராட்ட சூழலில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படக் கூடாது என்பதற்காகப் போராடிய விமலேஸ்வரன் இன்று உலகில் இல்லை. யூலை 18, 1988இல் கல்வியங்காட்டில் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட விமலேஸ்வரன் நினைவுகளை மக்கள் மனதில் இருந்து அழித்து விடுதல் இலகுவல்ல.


●தமிழவன்●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டக் களத்தில் இருந்து ஓவியங்கள்



கைது (1970)



**BURHAN KARKUTLI**

* நோர்வேயின் பிரடெரிக்ஸ்ராட்டில் கடந்த இலையுதிர் காலத்தில் நிகழ்ந்த ஓவியக் கண்காட்சியில் 69 நாடுகளைச் சேர்ந்த 334 ஓவியர்கள் பங்கெடுத்தனர். இந்த இதழில் இடம்பெறும் ஓவியங்கள் பாலஸ்தீன ஓவியர் புர்ஹான் கார்குட்லி படைத்தவை.

சிரியத் தலைநகர் டமாஸ்கஸில் பிறந்த புர்ஹான், கெய்ரோ ஓவியக் கல்லூரியிலும் மற்றும் ஸ்பெயின், கிழக்கு ஜேர்மனியிலும் ஓவியம் பயின்றவர். பல சர்வதேசக் கண்காட்சிகளிலும் இவரது படைப்புகள் இடம்பெற்றுள்ளன. அனைத்து ஓவியங்களையும் அரசியல் ஓவியங்களாகவே படைக்கும் இவர், பாலஸ்தீன ஓவியர்கள் அமைப்பில் அங்கம் வகிக்கிறார். இந்த இதழில் இடம்பெறும் அவரது ஓவியங்கள் 1970- 1982 காலப் பகுதியில் வரையப் பட்டவை.

- அபிமன்யு -



பலஸ்தீனர்களின் சுயநிர்ணய உரிமை, அழிக்கப்பட முடியாதது (1982)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலஸ்தீனச் சிறுவன் *illig arbeidskraft (1980)*
- மலிவான உழைப்பு சக்தி (1980)



பணிய மறுத்தல் - தனது சுதந்திரத்தை வரையும் பலஸ்தீனச் சிறுவன் (1979)



இஸ்ரேலில் மனித உரிமைகள் (1977)



அடக்குமுறையை எதிர்த்தல் (1979)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எப்போது?
## எது மறையும்?

பசி, மரணம், அவலம்

துப்பாக்கி, வெடிகுண்டு, சாம்பல்

செத்தவர்கள் போக
மற்றவர்கள்
மறைந்துகொண்டனர்.

வெடிச்சத்தங்கள்
ஓய்வெடுக்கும் கணங்களில்
ஒன்றிரண்டு தலைகள்
வீதியில் இறங்கும்

மீண்டும்
உடல்களைப் போட்டுவிட்டு
உயிர்கள் ஓடி மறைந்துகொள்ளும்
உயிரோடுள்ள உடல்களின்
மௌனமான ஒப்பாரி
தெருவிளிம்பில்
மெல்ல மெல்ல ஊர்ந்துவரும்

பிசாசுகள் நிறைந்த இருள்
பூமியைத் தின்றுகொண்டிருக்க,
காற்று சாம்பரைச் சுமந்துகொண்டு
முகிலுக்குள் மறைந்துகொள்ளும்

முன்பு
மனிதர்கள் மட்டும்
மறைந்துகொண்டனர்
பின்

கனவுகள் மறைந்துகொண்டன.

இப்போ
கனவுகளோடு
மனிதங்களும் மறைந்துபோயின.

எப்போது
எது தலைமறைவாகுமென்பது
தீர்க்கதரிசனங்களுக்குள்ளும்
அடங்காதலை.

மகிமைப்படுக! மகிமைப்படுக!
மண்ணே! மகிமைப்படுக!
மரித்த மனிதர்களின் ஆத்துமங்கள்
புத்திரத்தின் புண்ணியத்தால்
புதைகுழியில் இளைப்பாறுக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருளிலிருந்து

நேற்றைய இரவில்
ஏதோ அனர்த்தம்

இன்றைய அதிகாலையும், காலையும்
சாவின் முனகலையும் இழந்து
சலனமற்று
சவமாய்க் கிடந்தது

நெருப்பில் உருகிய
கொழுப்பு நெடியை

பனிப்புகார் சுமந்து வந்து
தெருக்களில் தூவிச் சென்றது.

இன்னும் விடியவில்லை,
இன்னும் விடியவில்லை.
ஒன்றிரண்டு காகங்கள் மட்டும்
நிழல்வாகை இலைகளூடு கூவியது
இல்லை; கதறியது.

நிணல் வாகைமரத்தினடியில்
நிலத்தில்

முளைக்கால்கள் ஊன்றி
வேப்பம் விதைகள்
உச்சி மரத்தை அண்ணாந்து
கிளைகளூடே
சிதறும் சூரியத் தெறிப்பை
'எப்போது விடியும்?'
என்று கேட்டுவைக்கும்.

இன்னும் விடியவில்லை என்பதை மட்டும்
உச்சிமரக் காகங்கள்
உளறிக் கொண்டிருக்கும்.

## ஐந்தாவது காலடி

உங்களைப் போலவே எங்களுக்கும் சற்று ஆச்சரியமாகத்தான் இருக்கிறது, சுவடுகள் விரைவில் தனது நான்காவது வருடத்தை நிறைவு செய்வது பற்றி. இதுவரையிலான காலங்களில் சுவடுகள் அரசியல் மாத்திரம் என்று குறுக்கிக்கொண்டதில்லை. இனியும் அவ்வாறே எமது கலை, இலக்கியங்கள், பிற அறிவியற் துறைகள் என்பவற்றையும் வாசகர்களது எண்ணங்களுக்கேற்ப வழங்குவோம். எப்போதும் போலவே வாசகர்கள் தமது பொருளாதார உதவிகளை மட்டுமன்றிப் படைப்புகளையும் விமர்சனங்களையும் அனுப்பி உதவவேண்டுகிறோம். இந்த நான்கு வருட காலத்தில் எம்மோடு தோள்கொடுத்த வாசகர்களை நன்றியோடு நினைவுகூர்கிறோம். இவ்வாறான உதவிகள் இன்றி, சுவடுகள் போன்ற ஒரு சுயாதீனமான சஞ்சிகை இத்தனை காலம் வெளிவந்திருக்க முடியாது. ஐந்தாவது ஆண்டின் முதல் மலரைப் புரட்டாதி மாதத்தில் சிறப்பான படைப்புகளுடன் வெளியிட உத்தேசம். உங்களது படைப்புகள் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. சுவடுகள் எப்போதும் வாசகர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஒரு சஞ்சிகையாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.


தோழமையுடன் – சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.ஆர். எழுதிய 'Men and Memories'



## நூல் அறிமுகம்:

● வீணா ●

இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனா மனிதர்களும் நினைவுகளும் (Men and Memories) என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். 185 பக்கங்கள் அடங்கிய இந்தப் புத்தகத்தை தனது சுயசரிதை எனவும், (விரிவான முறையில் அல்ல) தனது கடந்தகால அனுபவங்களை நினைவு கூர்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில், புதுடெல்லியிலுள்ள Vika publication என்ற பதிப்பகம் வெளியிட்ட இந்த நூலின் விலை 195 (இந்) ரூபாய்களாகும். இதே பதிப்பகமே சில மாதங்கள் முன், தற்போதைய இலங்கை ஜனாதிபதியான பிரேமதாசவின் வரலாற்றை, அவரது வெளிநாட்டு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பின்பற்றும்படி மற்றவர்களுக்குப் போதிப்பது, ஜே.ஆர் வாழ்க்கையில் முக்கிய அம்சமாகும். சில வருடங்களுக்கு முன்பு யாரோ ஒருவர் ஜே.ஆர். ஆட்சியில் இருக்கும்போது அகிம்சையைக் கைக்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டதற்கும் ஜே.ஆரிடம் இருந்து பதில் கிடைத்தது. அரசுத் தலைவராக இருக்கும் ஒருவர் தனது கடமைகளை நிறைவேற்றும்போது அகிம்சையைக் கடைப்பிடிக்க முடியாது என உடனே ஒரு கட்டுரையை ஜே.ஆர். 'சண்டே ரைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு எழுதிக் கொடுத்தார். சில கிழமைகள்கூட ஆகவில்லை. லண்டனில் பொதுநலவாய நாடுகளின் அரசுத் தலைவர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் பேசும்போது அகிம்சையைக் மொழியையும், மதத்தையும் காப்பாற்றுவதற்குப் போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது" எனக் கூறியதையும் குறிப்பிட மறந்துவிடுகிறார்.

தான் ஒரு ஜனநாயகவாதி என்றும், இலங்கையில் தானே ஜனநாயகத்தை நிலைபெறச் செய்தவர் என்றும் கூறும் ஜே.ஆர்., சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாகப் பதவியேற்று, எட்டு உயர்நீதிமன்ற நீதியரசர்களைப் பதவியிறக்கம் செய்தமை, மேலும் நான்கு உயர்நீதிமன்ற நீதியரசர்களைப் பதவிநீக்கம் செய்தமை, 1981 மாவட்டசபைத் தேர்தலில் யாழ்ப்பாணத்துக்கெனத் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட 150 தேர்தல் அதிகாரிகளின் நியமனங்களை ரத்துச் செய்துவிட்டுத் தேர்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எழுதியதை வெளியிட்டுள்ளது.

ஜே.ஆரின் 'மனிதர்களும் நினைவுகளும்' என்ற இந்த நூல் குழம்பிய நிலையில் எழுதப்பட்டதென்றும், தனது வரலாற்றைச் சரித்திரத்தில் குறிப்பிடவும், அரசியல் சாக்கடையில் கசப்பான நினைவுகளையும், சந்தர்ப்பவாதச் செயல்களையும், மக்கள் மறந்துவிடவும் எடுக்கப்பட்ட முயற்சி எனவும் சொல்லலாம்.

2ஆம் உலக யுத்தத்தின் பின்னர் ஜப்பான் நாட்டுடன் சமாதான உடன்படிக்கையைப் பிரகடனப் படுத்தும் முகமாக, சான் பிரான்சிஸ்கோவில் 1957ஆம் ஆண்டு புரட்டாதி 4ஆம் திகதி நிகழ்ந்த மாநாட்டில் தான் ஆற்றிய உரைதான் மிக முக்கியமானதாக அமைந்ததாகவும், ரைம் நியூஸ்வீக் போன்றவை தன்னைப் புகழ்ந்த பாணியையும் ஆசிரியர் குறிப்பிட மறக்கவில்லை.

'வெறுப்பினை வெறுப்பினால் வென்றுவிட முடியாது' என்ற புத்த பகவானின் போதனையே உரையில் முக்கிய அம்சமாகவும், இதுவே அன்று ஆட்சியில் இருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் போன்ற தலைவர்களுக்கு ஏற்றதாகவும் இருந்ததால், இவருடைய பேச்சு பலராலும் பாராட்டப் பட்டது. இன்னுமொரு அம்சம், ரஷ்யாவைத் தாக்கிப் பேசியதுமாகும். இதனால்தான் 1953ஆம் ஆண்டுவரை ஐ.நா.வில் இலங்கை பிரதிநிதித்துவம் பெறமுடியாத நிலைமை இருந்தது.

சர்வதேச மாநாடுகளில் அகிம்சையைப்



கடைப்பிடிக்கும்படி அரசுத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டமை பலரை ஆச்சரியத்திலும் குழப்பத்திலும் ஆழ்த்தியது.

இதே புத்தகத்தில் "சிங்கள மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்டது இனவாதத்தையும் தூண்டியது, இலங்கை அரசியலையும் தர்மத்தையும் அழித்து விட்டது" எனக் கூறும் ஜே.ஆர். பண்டா – செல்வா ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருந்தபோது, இனவாதத்தைத் தூண்டி ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டும் என்று கண்டிக்குப் பாதயாத்திரை செய்ததை மறந்து விடுகிறார். 1957ஆம் ஆண்டு ஆனிமாதம் 13ஆம் திகதி 'சிலோன் டெய்லி நியூஸ்' பத்திரிகையில் "2,500 வருடங்களாக சிங்கள இனம் காப்பாற்றிவந்த நடைமுறைகளையே அவமதித்து மிகவும் கீழ்மட்டத்தில் கடமை புரிபவர்களை அனுப்பி வைத்தமை, சம்பள உயர்வு வேண்டும் எனப் போராட்டம் நடத்திய 40,000 அரச உத்தியோகத்தர்களை வேலைகளில் இருந்து நீக்கியமை, உயர்நீதிமன்றத்தில் குற்றப் பிரிவினால் தண்டிக்கப் பட்ட அரச அதிகாரிகளின் அபராதங்களை அரசையே கொடுக்க வைப்பதும், அவ்வாறு தண்டிக்கப்பட்ட அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்குவதும் ஜனநாயகத்துக்கு அடிக்கப்பட்ட சாவுமணிகளாகும்.

சர்வசன வாக்கெடுப்பைத் துஷ்பிரயோகம் செய்து, மக்களை ஏமாற்றி, தானும் தனது அரசும் ஆட்சியில் மேலும் ஆறு வருடங்கள் நீடிக்க வழிவகுத்தவரும் இந்த ஜனநாயகவாதிதான். அதே ஜனநாயகவாதி, தனது அரசியல் எதிரியான சிறிமாவோ பண்டாரநாயக்க இரு வருடங்கள் பதவியில் நீடித்தார் எனக் கூறி (உயர்நீதிமன்றம் அரசியல் அமைப்பின்படி எதுவும் பிழையாக நிகழவில்லை என்று கூறியும், அந்த உயர்நீதி மன்றத்தையும் கலைத்து) புதிதாக ஆணைக்குழுவை நியமித்து விசாரணை மேற்கொள்ள வைத்து ஏழு வருடங்கள் சிறிமாவோவின் குடியுரிமையைப் பறித்தது அரசியல் பம்மாத்து என்பது சரித்திரத்தில் உள்ளது. இவ்வம்சங்கள் அனைத்தையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ குறிப்பிட இப்புத்தகத்தின் ஆசிரியரான ஜே.ஆர் மறந்துவிட்டார்.

www.tamilarangam.net

வெளிவந்துவிட்டது!

ஈழத்தின்
தலைசிறந்த
கவிஞர்களில்
ஒருவரான
சோலைக்கிளியின்
'காகம் கலைத்த கனவு'
கவிதைத் தொகுதி

ஐரோப்பா எங்கும்
விற்பனையாளர்கள்
தேவை

சகல
தொடர்புகளுக்கும்

சுவடுகள் பதிப்பகம்

SUVADUGAL PATHIPPAGAM
Herslebs Gt43
0578 Oslo
NORWAY

## தீர்மானங்கள்

துரொம்சோவில் நோர்வே தமிழர் அபிவிருத்திப் பணியகம் ஏப்ரல் மாதம் நடத்திய கருத்தரங்கில் எடுத்த தீர்மானங்கள்:

1. இடம்பெயர்ந்து வாழ்வோரின் சட்டரீதியான நிலைப்பாடும் அதன் அம்சங்களும்

(அ) இது தொடர்பாக இங்குள்ள தமிழர்களதும் ஏனைய வெளிநாட்டவர்களதும் பிரச்சனைகளை விரிவாக ஆராய்ந்து அறிக்கை தயாரித்தல், அரசியல் ரீதியாக வேலை செய்தல்

(ஆ) அமைப்பின் சட்ட ஆலோசகர் மூலம் தேவையான ஆலோசனைகளைப் பெறல்

2. நோர்வேஜிய மொழி கற்றல்

இது தொடர்பாக நம்மக்களிடையே போதிய நாட்டமின்மை கவலையுடன் சுட்டிக் காட்டப்பட்டது. மொழி கற்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஊக்குவிப்புகளை ஏற்படுத்தல்.

3. வேலைவாய்ப்பு

(அ) வேலைவாய்ப்புகள் பொதுவாக அருகிவருவதும் நம்மிடையே போதிய தொழில்நுட்ப அறிவு இல்லாமையும் சுட்டிக் காட்டப்பட்டது. இவை தொடர்பான வழிகாட்டல்களுக்கு அனுபவசாலிகளின் உதவியை நாடல்

(ஆ) வெளிநாட்டவர் தொடர்பான தப்பபிப்பிராயங்களைக் களைய நடவடிக்கை எடுத்தல்

(இ) புதிய வேலை வாய்ப்புகளைத் தேடல் உ+ம் வியாபார முயற்சிகள்

தகவல்: தமிழர் அபிவிருத்திப் பணியகம், துறொம்சோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிராமத்து மடையன்

## காமிலோ ஜோஸ் செலா

அந்த கிராமத்து மடையன் பெயர் ப்ளாஸ். ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினெஸ். இவனுக்கு முந்தின கிராமத்து மடையன் பெரிஜிலோண்டோ தன் உண்மையான பெயர் ஹெர்மினெஜில்டோ என்பதையே சாமர்த்தியமாக மறந்து விட்டிருந்தான். அவனுடைய இறப்பிற்குமுன்னர் ப்ளாஸ் மந்தமான பையனாக, பியர் பழங்களைத்திருடுபவனாக, எல்லோரது உதவாக்கரை உதைகளுக்கும் எரிச்சலுக்கும் இலக்கானவனாக இருந்தான். அவன் வெளிறிய நிறத்துடன், நீளமான கால்களுடன் தனிமையானவனாக, எதற்கெடுத்தாலும் நடுங்குபவனாக இருந்தான்.

ஒரு மடையனுக்கு மேல் இடமளிக்க முடியாத அளவிற்கு அந்த கிராமம் சிறியது. பாரம்பரியத்தைப் பற்றிய அதிக மதிப்பு வைத்திருந்த ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினெஸ் இதை அறிந்திருந்தான். அவன் பைன்மரத்தோப்புகளிலும், புல்வெளிகளிலும் அலைந்து திரிந்து எதையெல்லாம் சாத்தியமோ அவைகளைத் திருடுவதில் திருப்தியுற்று கிராமத்திற்கு எக்காலத்திலும் வெகு அருகாமையில் வராமல் பார்த்துக்கொண்டான். மூப்படைந்த பெரிஜிலோண்டோ தன்பாதங்கள் தனக்கு முன்புறமிருக்க பின்புறத்தில் பாதிரியார்கள் பின்தொடர மரப்பெட்டியில் எடுத்துச் செல்லப்படுவதற்காக ப்ளாஸ் பொறுமையாக காத்திருந்தான்.

சடங்குகள் மரியாதைக்குரியன. அவை அரசனைவிட முக்கியத்துவம் வாய்ந்தன என்றும் சட்டத்தைக்காட்டிலும் எவ்விதத்திலும் முக்கியத்துவத்தில் குறைந்தவையில்லை என்றும் ஊரில் ஒருபழமொழி உண்டு. ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினெஸ் வாழ்வை உள்ளுணர்வினால் புரிந்துகொண்டான். மோப்பத்தைப் பின்தொடரும் நன்குபயிற்சியளிக்கப்பட்ட வேட்டைநாயின் துல்லியமான திட்டத்துடன், தன்னுடைய காலம் இன்னும் கைகூடவில்லை என அறிந்து, தன்னை காத்திருத்தலுக்கு துணிச்சலுடன் ஒப்புவித்தான். எதிரிடை உண்மையென தோற்றமளிக்கும் போதிலும், இவ்வாழ்க்கையில் எல்லாவற்றிற்குமே எப்பொழுதும் நேரம் உண்டு.

ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினெஸ் சிறிய வழுக்கையான கூரியதலையையும், குறுகலான மார்பையும், மெலிதான கால்களையும், தேமல்களையும், எடுப்பான பற்களையும் பெற்றிருந்தான். மேலும் அவன் மாற்றுக் கண்களையும் உமிழ்நீரொழுகும் வாயையும் கொண்டிருந்தான். அவன் ஒரு வெளிப்படையான விதத்தில் மடையனாக, தேவையான அனைத்து குணதிசயங்களையும் பரிபூரணமாக பூர்த்திசெய்யும் வகையில் அமைந்திருந்தான். அவனை கருத்துடன் கவனத்திற்கொள்ளும் பட்சத்தில் கிராமத்து மடையன் எனும் பாத்திரத்தை அவன் மிக்க தேர்ச்சியுடன் சித்தரிப்பது விளங்கும். ஒரு மருத்துவரின் ஆய்வின் உதவியின்றி முட்டாள்தனத்தை நிரூபிக்கமுடியாத சில அறிவிலிகளைப் போன்றல்லாமல் அவன் எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி ஒரு மடையனாக இருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் சாந்தமாக, சாதுவான குணத்துடன், ஒரு கன்றுக்குட்டியைப் போன்று எப்பொழுதும் புன்முறுவலுடன் காணப்படுவான். மென்மை யானவர்கள் என அழைக்கத்தகுதியற்ற கிராமத்து மக்கள் அவன்மீது கல்லெ றிந்து தாக்குவது அடிக்கடி நிகழ்கிற சம்பவமாயிருந்த போதிலும் அவன் புன் னகை மறையவில்லை. ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினெஸ் தன் கிரியையொத்த சிறுமுகத்து முன் தன்னுடைய சாமர்த்தியங்களுள் ஒன்றான காதுகளை பக்க வாட்டில் அசைக்கும் செயலை செய்துகொண்டிருப்பான். விவரிக்கமுடியாத ஒருவித புன்னகையுடனே வெளிர் சிவப்பு ரத்தமொழுகும் சமீபத்திய காய மொன்றை பேணிக்கொண்டிருப்பான். ஒரு வேளை முதலில் பட்ட காயத்தின் மேல் இரண்டாம் முறையும் கல்லெறிய வேண்டாமென்று புன்னகையின் வாயி லாக இம்சிப்பவர்களை மன்றாடுகிறான் போலும்.

பெரிஜிலோண்டோவின் காலத்தின்போது, தான் கிராமத்துத் தெருக்களில் நடப்பதற்கு சிறிதேனும் உரிமையுள்ளதென்று உணரும் நாட்களான ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் நமது கிராமத்து மடையன் கடவுள் ப்ரார்த்தனைக்குப் பிறகு லூயி கஃபேயின் வாயிலில் உட்கார்ந்துகொள்வான். வாடிக்கையாளர் கள் தங்கள் பசியைத்தூண்டும் மதுபானத்தை குடித்து முடித்து மதிய உண விற்கு வீடு செல்வதற்குத் தேவையான இரண்டு அல்லது மூன்று மணிநேரம் வாயிலில் காத்திருப்பான். லூயி கஃபே ஒருவழியாக முழுவதும் காலியான பிறகு ப்ளாஸ் புன்னகைத்துக்கொண்டே உள்ளே நுழைந்து உணவுமேசைகளின் கீழே நழுவி சிகரெட் துண்டுகளை பொறுக்குவான். சில சமயங்களில் மிகவும் நல்ல நாட்கள் அமைவதுண்டு; உதாரணமாக இரண்டு வருடத்திற்கு முன்பு மிகவும் உல்லாசமான விருந்து நடந்தது. அச்சமயத்தில் ப்ளாஸ் தன்னுடைய டப்பியை எழுநூறு சிகரெட் துண்டுகளால் நிரப்பமுடிந்தது. சில ஆங்கில வார்த்தைகளும் ஒரு சங்கு சித்திரமும் தீட்டப்பட்ட இந்த குழிவான அழகான பளபளப்பான மஞ்சள்நிற டப்பிதான் ப்ளாஸின் சந்தோஷமும் பெருமையும்.

தனது பணியை முடித்தபிறகு ப்ளாஸ், மிகவும் மூப்படைந்து நகருவதற்கே பிரயாசைப்படும் பெரிஜிலோண்டோவைக்காண மூச்சுவிடாமல் ஓடினான். அவனிடம் கேட்டான் "பெரிஜிலோண்டோ, நான் எதைக் கொண்டுவந்திருக் கிறேன்பார். உனக்குத் திருப்திதானே?"

---

**மூலம் : ஸ்பானிஷ்**
**ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சத்யன்**
Great Spanish stories, Ed. Angel Flores, Modern Library, New York.

---

பெரிஜிலோண்டோ தனது சிறப்பான உச்சஸ்தாயி கள்ளக் குரலில் பதில ளித்தான்:

"ஆம்............ஆம்............"

பிறகு கருமியின் புன்னகையுடன் சிகரெட்துண்டுகளை பெருமிதத்துடன் பார்வையிட்டு, அரைடஜன் சிகரெட்டுகளை தாறுமாறாக பொறுக்கி எடுத்து அவற்றை ப்ளாஸிடம் அளித்தான்.

"நான் சரியான காரியத்தைத்தான் செய்தேனா?"

"ஆம்........ஆம்........."

ப்ளாஸ் ஹெர்ரெரோ மார்டினெஸ் தனது துண்டுகளை எடுத்து ஏதோஒரு வடிவில் உருவாகும் சிகரெட்டைத் தயாரித்தான். சிலசமயங்களில் இம்முயற்சி பிரமனான சிகரெட்டாக பலனளிக்கும். ஆனால் வேறு சமயங்களில் புகைக்க முடியாத வகையில் மிகமெலிதானதாக அமையும், துரதிருஷ்டம். லூயி கஃபே யில் தான் கண்டெடுக்கும் சிகரெட்டுதுண்டுகளை ப்ளாஸ் எப்போதும் பெரிஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லோண்டாவிடம்தான் கொடுப்பதுண்டு, ஏனெனில் அந்த கிராமத்திலிருக்கும் அனைத்துத் துண்டுகளுக்கும் பெரிஜிலோண்டோதான் நியாயமான சொந்தக்காரன் மேலும் ஒன்றுமில்லாததற்காகவா அவன் கிராமத்து மடையனாக இருக்கிறான்? தன்னிஷ்டப்படி துண்டுகளை செலவழிக்கும் அதிகாரம் ப்ளாஸுக்கு வரும்போது ஒரு புதியவன் தன்னை ஏமாற்றுவதை அனுமதிக்கமாட்டான். அடிப்படையில் ப்ளாஸ் பாரம்பரியத்திற்கு பெருமதிப்பு தரும் ஒரு பழமைவிரும்பி. பெரிஜிலோண்டோதான் அதிகார பூர்வமான கிராமத்து மடையன் என்ற உண்மையை அறிந்திருந்தான்.

இருந்தபோதிலும், பெரிஜிலோண்டோ இறந்தநாளில் இயல்பாகத் தோன்றிய சந்தோஷ உணர்வை கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் வழக்கமாக குடிக்கப்போகும் புல்வெளியில் செம்மறியாட்டுக் குட்டிபோல குதித்து துள்ளிவிளையாடினான். அதற்குப்பின் தான் தவறு செய்துவிட்டோமென்று உணர்ந்தான். உடனே பிராயச்சித்தம் செய்வதற்கும் பெரிஜிலோண்டோவின் பூதஉடலின் மீது கண்ணீர் விடுவதற்கும் கல்லறைக்குச் சென்றான். பெரிஜிலோண்டோவின் சமாதியருகில் இதுவரையில் யாரும் பிராயச்சித்தமும் செய்யவில்லை, கண்ணீரும் விடவில்லை இனி எப்பொழுதும் கண்ணீர்விடப்போவதுமில்லை.

சிலவாரங்களுக்கு ப்ளாஸ் சிகரெட்துண்டுகளை கல்லறைக்கு கொண்டுவந்தான்; தனக்குரியதான அரைடஜன் துண்டுகளை ஒதுக்கிவைத்து எஞ்சியவற்றை ஜாக்கிரதையாக அவனுடைய தலைவனின் சமாதியருகே புதைத்தான். பிறகு படிப்படியாக இவ்வாறு செய்வதை நிறுத்தி இறுதியில் எல்லாத்துண்டுகளையும் பொறுக்குவதைப் பற்றிக்கூட அக்கறை கொள்ளவில்லை; அவன் தனக்குத் தேவையான அளவுமாத்திரம் பொறுக்கி எடுத்து, எஞ்சியவற்றை தனக்குப்பின் யார் தேடுகிறார்களோ அவர்களுக்கு விட்டுவிட்டான். பெரிஜிலோண்டோவை அவன்மறந்துவிட்டபிறகு வித்தியாசமான ஒன்று நிகழ்வதை உணர்ந்தான்: ஒரு துண்டை பொறுக்கி எடுக்க குனியும்போது அத்துண்டு தனக்குச் சொந்தமானதா இல்லையா என வியக்காமலிருக்கும் ஒரு பழக்கமில்லா உணர்வுதான் அது.




1989 ஆம் ஆண்டு, இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றிருக்கும் ஸ்பானியர் காமிலோ ஜோஸ் செலா. ஸ்பெயின் தேசத்தின் உள்நாட்டு யுத்தத்திற்குப் பிற்பட்ட காலகட்டத்தில் சர்வதேச இலக்கிய உலகிற்குத் தெரிய வந்தார். 1942 ஆண்டு தொடங்கி 10 நாவல்களுக்கு மேல் வெளிவந்திருக்கிறது. இவற்றில் மிக சிறந்தவை என தனித்துத் தெரியும் இரண்டு நாவல்கள்: The Family of Pascual Duarte (1942) மற்றும் The Hive (1953) முதலாவதாகச் சொல்லப்பட்ட நாவலில் மறுமலர்ச்சிக்கால ஸ்பெயினின் நாடோடி நாவல் வகை (picaresque) உத்திகளைப் பயன்படுத்தி முதல் நபர் பார்வையில், தனது சாவை எதிர் நோக்கிக் காத்திருக்கும் ஒரு கொலைகாரனின் வாழ்க்கை விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாவலில் ஒளிரிடும் யுகாந்திர வன்முறை ஸ்பெயினில் ஒரு இலக்கியப் பரபரப்பை ஏற்படுத்தியது. பெரும் இனக்கொலைகளையும் மனித வதைப்படலங்களையும் ஸ்பெயின் தேசம் அப்பொழுதுதான் கண்டு முடித்திருந்தது இதற்குக் காரணம். பொதுவாக செலாவின் மிகச்சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது The Hive நாவல். 200 கதா பாத்திரங்களையும் ஏறுமாறான வருட ஒழுங்குகளையும் கொண்ட இந்த நாவல் வடிவ ரீதியான சிக்கல்கள் கொண்டது. இதில் செலா திரைப்படத்தின் உத்திகளை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார். விளம்பரமான முறையில் ஏழ்மையையும், சீரழிவையும் நல்வாழ்வென ஸ்பெயின் தந்திருந்த பொய்தோற்றமும் இந்த நாவலில் வருகிறது. இதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உத்தி objectivismo என்று அழைக்கப்படுகிறது. ஒரு வகையான டாக்குமென்டரி ரியலிஸமான இந்த உத்தி காமிராவையும், டேப்ரெக்காடரையும் அடிப்படையாகக் கொண்டு இதன் வழியாக எழுத்தாசிரியனின் குரலை இல்லாமல் ஆக்கிவிடுகிறது. முழுக்க முழுக்க தனது எழுத்து வாழ்க்கையில் சோதனை எழுத்தாளராகவே செயல்பட்டார் செலா. சிறந்த சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார் செலா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பிய சினிமா மையம்



பிரான்ஸ் நாட்டவரின் முயற்சியால் ஜேர்மன் நாட்டின் மிகப்பெரிய சினிமா ஸ்ரூடியோவான Fugl Fonixஐ புனரமைப்பதன் மூலம் அது ஐரோப்பாவின் சினிமா மையமாக மாறவுள்ளது. இது ஜேர்மனியில் பேர்லின் நகரத்துக்கு அண்மையில் உள்ளது.

பழைய கிழக்கு ஜேர்மனியின் நகரான பாபல்ஸ்பேர்க், வத்திக்கான் நகரளவு பரப்புக் கொண்டது. இரு ஜேர்மனிகளும் ஒன்றானபின் பிரான்சின் திரைப்படத் தயாரிப்புப் பகுதியில் பெருமளவைக் கட்டுப்படுத்தும் CGE நிறுவனம் இந்தத் திரைப்பட மையத்தைத் தனதாக்கி விரிவுபடுத்தவுள்ளது.

தற்போது இந்தத் திரைப்பட ஸ்ரூடியோவில் 780பேர் தொழில் வாய்ப்புக் கொண்டுள்ளனர். விரைவில் இந்தத் தொகை 3,500 ஆக்கப்பட உள்ளது. முதலீடும் 400கோடி குறோணர்களாக ஆக்கப்பட உள்ளது.

ஜேர்மனிய செய்தித் தொடர்பு நிறுவனமான Bertelsmann நிறுவனமும் இந்த நிறுவனத்துடன் ஒத்துழைக்கவுள்ளது. இன்று அமெரிக்காவே உலக சினிமாவில் ஆதிக்கம் கொண்டுள்ளது. இந்த ஆதிக்கத்தை முறியடித்து சினிமாவுக்கென ஐரோப்பாவில் ஒரு மையத்தை உருவாக்க மேற்படி நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க ஜேர்மன் நாட்டின் முக்கிய திரைப்பட இயக்குனர்கள் சிலர் உறுதி கொண்டுள்ளனர்.

## இங்கிலாந்தின் பெரிய நடிகர்



இங்கிலாந்தில் இந்த நூற்றாண்டின் நாடக சினிமாத் துறைகளில் முக்கிய நபராகக் கருதப்படும் றொபேட் மோர்லி கடந்த மாதம் தனது 84ஆவது வயதில் காலமானார். ஒஸ்கார் வைல்ட் நாடகமே முதலாவது வெற்றி எனக் குறிப்பிடப் படுகிறது.

சினிப்பித்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிங்குராஜன்

# பேயரசு ஆட்சி செய்யும் தேசம்!

## முன்னாள் பொலிஸ் அதிகாரியின் குத்துக்கரணங்கள்

இலங்கையில் அண்மைக்காலங்களாக மிகப் பரபரப்பாகப் பேசப்படும் ஒருவர், பிரேமதாச உடுகம்பொலவாகத் தான் இருக்க முடியும். எந்த அரசின்கீழ் பல படுகொலைகளைப் புரிந்து 'புகழ்' பெற்றாரோ, அதே அரசுக்கு இப்போது பெரும் தலையிடியாக இருப்பவர் இவர்.

1987 - 1989 வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் ஏறத்தாழ 60,000பேர் - முக்கியமாக சிங்கள இளைஞர்கள் - கொல்லப் பட்டிருந்தனர். இவர்கள் கொல்லப்பட முக்கிய காரணம், படையினரின் குடும்பங்களைக் கொலை செய்யத் தொடங்கிய ஜேவிபியின் வன்முறையும், அதைத் தொடர்ந்து, ஜேவிபியினரின் குடும்பங்கள், கிராமங்களை அழித்த ராணுவத்தினரின் வன்முறையும்தான். படையினரின் இந்த நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவர் உடுகம்பொல. உடுகம்பொலவின் சகோதரர், அவரது மனைவி, இரு குழந்தைகள் ஜேவிபியினால் படுகொலை செய்யப்பட்ட பின்பே, உடுகம்பொல ஜேவிபி உறுப்பினர்கள், குடும்பங்கள், கிராமங்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டதாகச் சொல்லப் படுகிறது.

1982இல் சட்டவிரோதமான முறையில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தித் தனது அரசை மேலும் ஆறு வருடங்கள் நீடிக்க ஜே.ஆர் முயன்றபோது, அந்த சர்வசன வாக்கெடுப்பைப் பகிஷ்கரிக்குமாறு பிக்குகள் சிலர் குரல் கொடுத்தனர். அவர்களால் விநியோகிக்கப்பட்ட 'பிக்குகளின் குரல்' என்ற துண்டுப் பிரசுரத்தின் பல ஆயிரக் கணக்கான பிரதிகளை, உடுகம்பொல பறிமுதல் செய்தார். அவ்வாறு பறித்தது தவறு எனத் தொடுக்கப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம்,



உடுகம்பொலவுக்கு 15,000 ரூபா அபராதம் விதித்தது. இந்த அபராதத்தை, ஜனாதிபதி நிதியத்தில் இருந்து வழங்கிய ஜே.ஆர், உடுகம்பொலவைப் பதவி உயர்த்தினார்.

ஜே.ஆரின் பதவிக் காலம் தொடங்கி அண்மையில் தலைமறைவாகும்வரை நீண்ட காலமாகப் பல படுகொலைகளில் இவர் நேரடியாகச் சம்பந்தம் கொண்டிருந்தார் என நம்பப்படுகிறது. முக்கியமாக ஜேவிபியின் நடவடிக்கைகள் மிகஉச்சம் கொண்டிருந்த காலப் பகுதியில், பிரேமதாச அரசு கறுப்புப் பூனைகள், பச்சைப் புலிகள் என்ற பெயர்களில் எதிர்க் கட்சி உறுப்பினர்களையும், ஜேவிபி சந்தேக நபர்களையும் கொன்று குவித்தது. இக்காலப் பகுதியில் பெருமளவில் ஜேவிபி

www.tamilarangam.net

சந்தேக நபர்கள் படுகொலை செய்யப்படுவது பற்றிப் பத்திரிகை நிருபர்களின் கேள்விக்கு 'அவர்களின் வழியிலேயே நானும் அவர்களுடன் போரிடுகிறேன்' எனக் கூறினார் உடுகம்பொல.

ஜே.ஆரின் பதவிக்காலத்தில் உதவிப் பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டுத் தெற்குப் பகுதிகளில் பணிபுரிந்தவர் உடுகம்பொல. படுகொலைகள் மிக வேகமாக அதிகரித்தபோது, மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி ஒருவருடன் பிக்குகள் குழுவொன்று ஜே.ஆரையும் பிரேமதாசவையும் சந்தித்தது. இவர்கள் உடுகம்பொலவைத் தெற்குப் பிரதேசத்தில் இருந்து இடமாற்றம் செய்யும்படி கேட்டனர். அந்தக் கோரிக்கை ஜே.ஆரால் நிராகரிக்கப் பட்டது. நிலைமைகளைச் சீராக்கப் புதிய தேர்தல் ஒன்றை நடத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை, அந்தக் கூட்டத்தில் பிரேமதாசவினால் நிராகரிக்கப் பட்டது.

உடுகம்பொல 'ஆட்சி' செலுத்திய பிரதேசங்களில் ஏராளமான சிங்கள இளைஞர்களின் பிணங்கள் வீதிகளில் எரிக்கப் பட்டன, ஆறுகளில் வீசப்பட்டன. இருவருட கால இடைவெளிக்குள் 60,000பேர்வரை கொல்லப் பட்டனர். பிரேமதாச அரசில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ரஞ்சன் விஜேரத்னவினால் விசேட நடவடிக்கைகளுக்கான பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. முக்கியமாக ஊழல் போன்ற குற்றச்சாட்டுகளை ஆராய அமைக்கப் பட்ட இவ்வமைப்புக்குப் பொறுப்பாக உடுகம்பொல நியமிக்கப் பட்டார். இப்பிரிவினால் ஆராயப்பட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமாக கஸினோக்களில் நிகழ்ந்த ஊழல்கள் அடங்கும். கஸினோக்களின் உரிமையாளர்கள் பொலிசாருக்கும், ஐ.தே.க உறுப்பினர்களுக்கும் பெருமளவில் லஞ்சம் வழங்கியதாகவும் அறியப் படுகிறது. இவற்றுடன் கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்று புலிகளுக்கு ஆயுத தளபாடங்களை விநியோகம் செய்தது என்ற குற்றச்சாட்டும் அடங்கும். இதுபற்றி ஆராயத் தான் முயன்று அறிக்கை சமர்ப்பித்ததாகவும், இதன்பின் அந்த நிறுவனம் வழங்கிய வெடிமருந்துகளைக் கொண்டே ரஞ்சன் விஜயரட்ண கொலை செய்யப் பட்டதாகவும் அண்மையில் வெளிவந்த உடுகம்பொலவின் தகவல்கள் கூறுகின்றன.

ரஞ்சன் கொல்லப் பட்டது தொடர்பாகத் தான் ஆராய விரும்பிதாகவும் அதற்குப் பிரேமதாச அனுமதி வழங்கவில்லை எனக்கூறும் உடுகம்பொல, ரஞ்சன் கொலை பற்றித் தான் ஆராயப் பொலிஸ் மா அதிபர் ஏணஸ்ற் பெரேரா அனுமதி வழங்கவில்லை எனவும், விசாரணையின் இடையில் தலையிட்டு மேலதிக விசாரணையை நிறுத்தியதாகவும் கூறியுள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் பதவியில் இருந்து, கட்டாய லீவில் செல்லுமாறு உடுகம்பொல பணிக்கப் பட்டார். அதன்பின், 1988இல் ஜேவிபி சட்டத்தரணியான லியனாராச்சியின் கொலை சம்பந்தமான வழக்கு ஒன்றை மீண்டும் விசாரணைக்கு எடுத்தது நீதிமன்றம் ஒன்று. லியனாராச்சி, உடுகம்பொலவின் நேரடி உத்தரவின் பேரில் கடத்திச் செல்லப்பட்டுச் சித்திரவதைக்குப் பின் கொல்லப்பட்டவர். இந்த வழக்கில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்ட உடுகம்பொல, நீதிமன்றம் வராமல் தலைமறைவானார். இவரது தலைமறைவுக்குப் பின் இவரது பேட்டிகளும், சத்தியக் கடுதாசிகளும் பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவந்தன. ஐ.தே.க உறுப்பினர்களாலேயே கறுப்புப் பூனை, பச்சைப் புலி போன்ற அமைப்புகள் நடத்தப் பட்டதாகவும், அவற்றால் கொல்லப்பட்ட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் பட்டியல் தன்னிடம் இருப்பதாகவும் உடுகம்பொல கூறியுள்ளார். இதைவிட கஸினோக்களில் ஆளும் கட்சியினரும் பொலிசாரும் கொண்டிருந்த கள்ள உறவுகள் பற்றியும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தத் தகவல்களை வெளியிட்ட பத்திரிகைகள்மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதைவிட உடுகம்பொல தெரிவித்த தகவல்களில் உண்மையில்லை என்று, பிரதமர்

www.tamilarangam.net

விஜேதுங்க தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார். (ஒரு பொலிஸ் அதிகாரியின் தகவல்களைத் தொலைக்காட்சியில் பிரதமர் தோன்றி மறுப்பது வழமையல்ல)

தற்போது, உடுகம்பொல தெரிவித்த தகவல்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஆர்வம் கொண்டுள்ளன. தமது அரசியல் நோக்கங்களுக்காக இந்தத் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு, பிரேமதாச அரசு மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளது என அவை கூறி வருகின்றன. இதுபற்றி ஆராய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும், பாராளுமன்றம் இந்தத் தகவல்கள் பற்றி விவாதிக்க வேண்டும் எனவும், அரசு பதவி துறக்க வேண்டும் எனவும் பல கோரிக்கைகளை எதிர்க் கட்சிகள் விடுத்துள்ளன.

நீதிமன்றத்தில் தோற்றத் தனக்குப் பாதுகாப்புப் பிரச்சனை இருப்பதாகக் கூறியுள்ள உடுகம்பொல மேலும் பல தகவல்களை வெளியிடாமல் வைத்துள்ளார். ஒருவேளை முழுத் தகவல்களையும் வெளியிட்டு விட்டால் எதிர்க் கட்சிகள் தன்னைக் கைவிட்டுவிடும் என அவர் நினைக்கக்கூடும்.

தற்போது, சிறிமாவும் அவரது கட்சியினரும், லலித் - காமினி கட்சியினரும் உடுகம்பொலவினது தகவல்கள் மூலம் பிரேமதாசவைக் கவிழ்க்க இறுதி முயற்சி செய்கின்றனர். பிரேமதாசவின் அரசியல் எதிரிகளில் முக்கியமான காமினி திசநாயகா, உடுகம்பொலவுடன் நெருக்கம் கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது. ஏற்கனவே 'இந்திய ஆசீர்வாதத்துடன்' பிரேமதாசவைக் கவிழ்க்க இவர்கள் எடுத்த முயற்சி தோல்வியுற்றிருக்கிறது. இந்த முயற்சிக்கு என்ன நடக்கும் என்பதைக் காலம்தான் சொல்லும்.

இப்போது உடுகம்பொல இவ்வாறு ஞானம் பெற்ற ஒருவர் போலப் பிதற்றினாலும், அவரது காலத்தில் அவரது கட்டுப்பாட்டில் இருந்த மனித உரிமை மீறல்கள், படுகொலைகளுக்கு அவரும் பொறுப்பேற்க வேண்டும். அரசைக் காப்பாற்றவே தான் அவ்வாறு செய்ததாகக் கூறித் தப்ப முடியாது. அதுபோலவே, உடுகம்பொலவை ஆதாரமாகக் காட்டி லலித், காமினி, சிறிமாவோ போன்றோர் தம்மைச் சுத்தமாகக் காட்ட இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதால் அவர்கள் 'கங்கையில் ஸ்நானம்' பண்ணியவர்களாக ஆகிவிட முடியாது.

இலங்கையின் துரதிர்ஷ்டம் என்னவெனில் இந்தக் கைகள்தான் இலங்கையை ஆளப் போகின்றன. இந்தக் கறைபடிந்த கைகளால் ஆட்சி செய்யப்படும் துர்ப்பாக்கியம் இலங்கையின் விதியாகத் தற்காலிகமாகவேனும் இருக்கும். பேயரசு ஆட்சி செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்' என்றான் பாரதி. இலங்கையின் நிலைமையைப் பற்றிக் கற்பனை செய்துதான் அவன் பாடினானோ தெரியாது●

CHIDANAND RAJGHATTA



www.tamilarangam.net

பூலை 1
* பல்லேகல தடைமுகாமில் நிகழ்ந்த குழு மோதலில் கைதி ஒருவர் பலியாகினார் பலர் காயம்.
* சி.பி.ஐ. சட்ட ஆலோசகரின் கொழும்பு விஜயத்துக்கு இலங்கை அரசு அனுமதி மறுத்தது
* ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கு முடிவடைந்தது. மார்ச் 89இல் இருந்து 530 நாட்கள் நிகழ்ந்த இந்த வழக்கில் 26,500 பக்கங்களில் சாட்சிகள் பதிவாகின. ஒரு பிரதம நீதியரசரும், நான்கு நீதியரசர்களும் நடத்திய இந்த வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.
* கொக்கட்டிச்சோலையில் பத்துப் பொதுமக்கள் பலியானது பற்றி ஜனாதிபதியிடம் ஜோசப் (பா.உ) முறைப்பாடு செய்துள்ளார்.
* அரசைப் பதவிவிலகுமாறு கோரி எதிர்க்கட்சிகள் நடத்திய இரைச்சல் எழுப்பும் போராட்டத்தில் நவசமசமாஜக் கட்சிச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன கண்டியில் கைதாகினார்.
பூலை 2
* புல்லாவெளி - வெற்றிலைக்கேணிப் பகுதியில் பலத்த மோதல்கள் தொடர்கின்றன.
பூலை 3
* அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றை எதிர்க் கட்சிகள் கொண்டு வரவுள்ளன.
* புலிகளால் வடக்கில் 15 பேருக்கு மரண தண்டனை வழங்கப் பட்டுள்ளது.
பூலை 4
* மனித உரிமைச் செயலணிக்குழு மட்டக்களப்பிலும் மாத்தறையிலும் திறக்கப் பட்டன. முதல்நாள் பெரும்தொகையான காணாமற் போனோர் பற்றிய முறைப்பாடுகள் பதிவாகின.
பூலை 5
* இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான வை.8 ரக சீன விமானம் இயக்கச்சியில் விழுந்ததில் ஆறு அதிகாரிகள் உட்படப் பத்தொன்பது படையினர் பலி. தாமே இதைச் சுட்டு வீழ்த்தியதாக புலிகள் கூறியுள்ளனர்.
பூலை 6
* வடக்கு கிழக்கு முஸ்லிம்களைத் திருப்தி செய்யாத தீர்வை ஏற்கமுடியாது என முஸ்லிம்

# செய்திகள்

பூலை 14
* ஆனையிறவு முதல் வெற்றிலைக்கேணி வரை தமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகவும், இனி ஆனையிறவுக்கு மேற்கே தமது நடவடிக்கை ஆரம்பமாகும் எனக் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.
பூலை 15
* இராணுவ சேவையில் இருந்து சொல்லாமல் விலகி ஓடிய 4,000 சிப்பாய்களையும், கடும் நடவடிக்கைக்கு முன் மீண்டும் படையில் இணைய பூலை இறுதிவரை அவகாசம் வழங்கப் பட்டுள்ளது.
* அமெரிக்கா, கனடா, ஜேர்மன் போலி

பண்டாரநாயகா கூறியுள்ளார். கொழும்பில் ஆரம்பித்த மோட்டார் பவனியில் 500 கார்கள், 300 மோட்டார் சைக்கிள்கள் கலந்து கொண்டன.
பூலை 21
* காணிப் பங்கீட்டில், காணியற்ற தொழிலாளருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனப் பல தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.
பூலை 22
* மட்டக்களப்பு ரயில்மீது சித்தாண்டியில் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப் பட்டுள்ளது. ரயில் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது. ஒன்பது பயணிகள் சம்பவத்தில் பலியாகினர்.
* இலங்கைத் தமிழர்மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்துச் சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி உட்படப் பல அமைப்புகள் ஆர்ப்பாட்டம் செய்தன. ஆயிரம் பேர்வரை இதில் கலந்துகொண்டனர்.
பூலை 23
* பல்கலைக்கழக அனுமதியில் பாரபட்சம் காட்டப்படக் கூடாது எனத் தமிழ் பா.உ.க்கள் அமைச்சர் ஹமீதைச் சந்தித்துக் கோரியுள்ளனர்.
* ரயில் தாக்குதலில் பலியான ஒன்பது முஸ்லிம்களின் இறுதிக்கிரியைகள் நிகழ்ந்தன. கிழக்கில் சற்றே பதட்டம் நிலவுகிறது.
பூலை 24
* மட்டுநகர்ப் பகுதியில் எந்த நிலையையும் சமாளிக்கப் படையினர் தயாராக உள்ளதாகவும், மோதலுக்கு இடமில்லை எனவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.
* யாழ்ப்பாணத்தில் மருத்துவபீடப் பரீட்சை எழுத முடியாமல், அரசின் வேண்டுகோள்ப்படி கொழும்பு சென்று பரீட்சை எழுதிய யாழ் பல்கலைக்கழக மாணவர் நால்வர் கைதாகியுள்ளனர். இவர்களில் ஒருவர் புலிகளின் முக்கிய உறுப்பினர் எனவும், ஏனையோர் விடுவிக்கப் படுவர் எனவும் இரகசியப் பொலிசார் கூறியுள்ளனர்.
பூலை 25
* மீண்டும் ஜேவிபி நடவடிக்கைகள் தொடங்கலாம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா எச்சரித்துள்ளார்.
* கிழக்கில் கடைசி முஸ்லிம் உள்ளவரை புலிகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொங்கிரஸ் கூறியுள்ளது.

யூலை 7

* தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள நான்கு அம்சத் திட்டத்துக்கு நவசமசமாஜக் கட்சி முழு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

யூலை 8

* சொந்த மக்களைக் கொன்று எந்த லட்சியத்தையும் வெல்லமுடியாது என, புலிகளால் பறநாட்டக்கல் பகுதியில் பத்துத் தமிழர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது பற்றி, புளொட் பதில் ராணுவப் பொறுப்பாளர் வசந்தன் கூறியுள்ளார்.

யூலை 9

* வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரை படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

யூலை 10

* புலிகளை நிராயுதபாணிகளாக ஆக்குவதே எமது நோக்கம். அவர்கள் நாளை நிரக்ஷ தபாணிகளாக ஆகினால் நாளையே யுத்தம் நின்றுவிடும் என அமைச்சர் ரணில்-விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

* யூன் 28ஆம் திகதி ஆரம்பித்த வடபகுதித் தாக்குதல் நடவடிக்கையில் இதுவரை 340 புலிகள் பலியானதாகவும், அவர்களில் 47 பேரின் உடல்களைப் படையினர் மீட்டிருப்பதாகவும் அரச கூறியுள்ளது.

யூலை 11

* கந்தளாயில் 16 படையினரும், இயக்கச்சியில் 18 படையினரும் புலிகளின் தாக்குதலில் பலியாகியதாக அரச அறிவிப்பு.

* முல்லைத்தீவு ராணுவமுகாமில் இருந்த நகைகள் மாயமாய் மறைந்தது தொடர்பாக 12 படையினர் கைதாகி விளக்கமறியலில் உள்ளனர்.

* வடக்கில் இருந்து வெளியேறும் மக்களின் தொகை பெரிதளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

யூலை 13

* 50க்கு மேற்பட்ட படையினர் பலியான கட்டுப்பொத்த தாக்குதல் பற்றி அரச உயர்மட்ட விசாரணை மேற்கொள்ளவுள்ளது.

* தம்புள்ளயில் ஐந்து நட்சத்திர விடுதி கட்ட எதிர்ப்புத் தெரிவித்து பிக்குமார், மக்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.



விசாக்களைத் தயாரித்ததாக இரு எகிப்தியர், ஒரு இலங்கையர் கெய்ரோ விமான நிலையத்தில் கைதாகியுள்ளனர்.

* புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான கட்டுப்பொத்த ராணுவமுகாம் காவல் நிலைகள் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் நிகழ்த்தியதாக அரச செய்தி தெரிவிக்கிறது.

யூலை 16

* கிரான்குளத்தில் பத்தொன்பது பயணிகள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக ஆராயுமாறு முஸ்லிம் கொங்கிரஸ் அரசைக் கேட்டுள்ளது.

* பரந்தன் பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

யூலை 17

* ஆனையிறவுப் பகுதியூடாக மக்கள் பிரயாணம் செய்யலாம் எனப் படையினர் கூறியுள்ளனர்.

யூலை 18

* கிரான்குளம் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மட்டக்களப்பில் முஸ்லிம்கள் கடையடைப்புச் செய்தனர்.

* மக்கள் நலன் கருதி யாருடனும் பேசுவேன், யாரையும் கைவிடுவேன் எனப் பிரேமதாச பேசியுள்ளார்.

யூலை 20

* புலிகளுடன் பேச அரசு முஸ்லிம்களுக்கு வழியமைத்துத் தரவேண்டும் என சேகுதாவூத் (கயேச்சை, பா.உ) கேட்டுள்ளார்.

* மக்களைப் பொதுத் தேர்தலுக்குத் தயாராக்கவே மோட்டார் பவனி நடத்தப்படுவதாக அனுரா முஸ்லிம்கள் எதிர்த்துப் போராடுவர், எங்களை விடுதலைப் புலிகள் தாக்குவதால் குர் ஆனின்படி புலிகளுக்கெதிராக ஜிகாத்தைப் (புனித யுத்தம்) பிரகடனம் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம் என அஷ்ரப் (மு.கொ) பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

* யாழ்ப்பாணத்துக்கு ஒன்றரை மாதகாலத்துக்குப் போதுமான உணவு கையிருப்பில் உள்ளதாக யாழ் அரச அதிபரை மேற்கோள் காட்டி அரசு அறிவித்துள்ளது.

* புலிகளுடன் அரசு ரகசியமாகப் பேசுகிறதா? அவ்வாறாயின் என்ன பேசுகிறது? கூட்டுப்படைத் தலைமையகத்துக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையில் பிரச்சனையா? - சபையில் சு.க.பா.உ, அனுருத்த ரத்வத்த

யூலை 27

* அனாவசிய வடக்கு கிழக்குப் பிரச்சனையால் 2000 கோடி ரூபா வீணாக்கப்படுவதாக பிரேமதாசா பேசியுள்ளார்.

* கொழும்பு நகர முதல்வர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

யூலை 28

* தந்திரிமலையில் புத்தபிக்கு கைக்குண்டால் கொலை செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் வெளியேறி வருகின்றனர்.

* ஒரு நாளில் வெட்டவேண்டிய (கவ்வாத்து) தேயிலை மரங்களின் எண்ணிக்கையை 200ஆக அதிகரித்தமைக்கு ஆட்சேபம் தெரிவித்து, அப்புத்தளைப் பகுதியில் 15ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

* ஊவா பகுதியில் மூன்று தமிழ் வாலிபர்கள் கடத்தப் பட்டுள்ளனர்.

* புலிகளுடன் பேசுமாறு அரசை ரெலோ கேட்டது பற்றி, முஸ்லிம் கொங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தமிழ் முஸ்லிம் உறவுகளைப் பாதிக்கும் என மு.கொ. கூறியுள்ளது.

* பத்மநாபா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் அவரது கணவருக்குப் பிணை மறுக்கப்பட்டது.

யூலை 29

* கிளாலி கடற் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* ஒரிசாவில் உள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்பத் தயக்கம் காட்டியுள்ளனர். பெரும்பாலும் இந்தியப் படைக்கு ஆதரவாக இருந்த அமைப்புகளின் குடும்பத்தினரே இங்கு உள்ளனர். இவ்வாறான 1612பேரை இந்தியா கப்பலில் கொண்டு சென்று, ஒரிசாவில் தங்கவைத்தது.

* தொழிலோ பொருளாதார உதவிகளோ வழங்குமாறு வெளிநாட்டுத் தூதுக்குழுவிடம் மன்னார் திரும்பிய அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யூலை 30

* நாவலடியில் வீதிரோந்து சென்ற கூட்டுப்படை மீது புலிகள் தாக்கியதில் 26 படையினர் மரணம்.

* சாம்பல்தீவு அத்திமோட்டைப் பொலிஸ் நிலைகள் ஒரே காலத்தில் தாக்கப்பட்டு, 5 பொலிசார் பலி.

யூலை 31

* இந்தியாவில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்பும் வேலைகளை மேற்பார்வை செய்ய ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் ஒப்புக் கொண்டுள்ளது.

* புலிகள் இயக்கத்தைவிட்டு வெளியேறிய 27 பேருக்கு மரண தண்டனை கொடுக்கப் பட்டது என்ற செய்தியைப் புலிகளின் பேச்சாளர் திலகர் மறுத்துள்ளார்.

* ராஜீவைக் கொல்ல கொங்கிரஸ் முகாமையாளர் தனக்குப் பணம் தந்ததாகச் சிவராசன் கூறியதாக, ராஜீவ் கொலை வழக்கின் எதிரிகளில் ஒருவரான ஆதிரை கூறியுள்ளார்.

* ராணுவத்தில் தனி முஸ்லிம் பிரிவு சாத்தியமில்லை என அரசு கூறியுள்ளது.

## பாகிஸ்தான் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான ரெஸ்ற் ஆட்டத் தொடரில் 2 - 1 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் வென்றது. இரு போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன. ஆட்டத் தொடரின் சிறந்த வீரராக வாஸிம் அக்ரம் (பா) தெரிவானார். கடந்த 12 வருடங்களாக ரெஸ்ற் ஆட்டத் தொடர்களில் பாகிஸ்தானை இங்கிலாந்து வெல்லவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.



## இந்தியாவின் புதிய ஜனாதிபதி

இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக சங்கர் தயாள் சர்மா அண்மையில் தெரிவாகினார். இவரையே ஆளும் கட்சி பிரேரித்திருந்தது. இவருக்கு முன்னர் இந்திய ஜனாதிபதியாக இருந்த வெங்கடராமன் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சங்கர் தயாள் சர்மா பதவி ஏற்கச் செல்லும்போது எடுக்கப்பட்ட படம் இது.

\- கேசவன் -

இலங்கையில் நிகழும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள் பற்றிய தமது அறிக்கைகளை ஒழுங்காகப் வெளியிட்டுவரும் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழு தனது ஒன்பதாவது அறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது. 62 பக்கங்களில் முதல் தடவையாக இந்த அறிக்கை கைக்கடக்கமான நூல் வடிவில் வெளியாகியுள்ளது.

வடக்கு கிழக்கில் தமது கருத்துகள் வெளியிடப்பட முடியாமல் உள்ள மக்களின் குரலாக வெளிவரும் இந்த அறிக்கையின் கடைசிப் பிரசுரத்தில் சகல இயக்கங்களினதும், அரசினதும் போர் நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் மக்கள் முக்கிய கவனம் பெறுகின்றனர்.

இந்த அறிக்கையின் பிரதிகளைப் பெற விரும்புவோர் உடனடியாக சுவடுகளுடன் எழுத்துமூலம் தொடர்பு கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும்

மணிமாறன்

மூன்றாம் உலக நாடுகளில் அரசியல் பொருளாதார எழுச்சியையும் வீழ்ச்சியையும் புரிந்துகொள்வதற்கு உலக வங்கியினதும் (WB), சர்வதேச நாணய நிதியத்தினதும் (IMF) அமைப்புகள் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

அனேகமானவர்களுக்கு இந்த இரு நிறுவனங்களதும் பின்னணி புரியாத புதிராக இருக்கலாம். இக்கட்டுரையின் மூலம் ஒருசில தகவல்களைத் தருகிறோம். இக்கட்டுரையின் தொகுப்பு பல புத்தகங்களில் இருந்து எடுக்கப் பட்டதாகும்.

(இலங்கையில் வருடாவருடம், குறிப்பாக 1977 ஒகஸ்ற்றுக்குப் பிறகு பதவிக்கு வந்த ஐ.தே.கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையும், அந்நிய முதலீட்டுக்கு உதவும் வகையிலும் இந்த இரு அமைப்புகளும் கோடிக்கணக்கில் - 1991இல் 100கோடி டொலரும், 1992இல் 83.6கோடி டொலரும் தொழில்வள நாடுகளின் உதவியுடன் பரிசில் ஒன்றுகூடி இந்த நிதியை - வழங்குவது குறிப்பிடத்தக்கது)

## நிறுவனத்தின் தோற்றம்

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் பிரித்தன் வூட்ஸ் (Bretten woods) எனும் இடத்தில் 1944இல் ஒன்றுகூடி உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் தோற்றத்திற்கு வழிவகுத்தனர். ஆகவேதான் இவ்விரு நிறுவனங்களையும் பிரித்தன்வூட்ஸ் சகோதரிகள் (Bretten woods sisters) என்று அழைப்பதுண்டு. சர்வதேச நாணய நிதியத்தின் ஆரம்பத்திற்கு அடிகோலியவர்கள் வர்த்தக நிலுவை (Balance of trade deficit) உள்ள நாடுகளின் வியாபாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் குறுகியகால கடனை வழங்கி இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்த்தனர். 40ஆம், 50ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகள் அதிகமாக இருக்கவில்லை. 60ஆம் ஆண்டுகளில் முன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட பணநெருக்கடி இந்த நிறுவனத்தின் ஆதிக்கம், அதிகாரம் தலைதூக்க வழிவகுத்தது.

73,74,79ஆம் ஆண்டுகளில் பெற்றோல் விலை உயர்வு மூன்றாம் உல்க நாடுகளை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வழிகோலியது. 1980களில் இருந்து சர்வதேச ரீதியாக எழுந்த கடன் பிரச்சனையை குறைக்க நிறுவனம் முக்கிய பங்கை ஆற்றியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர்

www.tamilarangam.net

சின்னாபின்னம் ஆக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தைச் சீரமைக்க, அமெரிக்கப் பொருட்களுக்கு நல்ல சந்தையை ஏற்படுத்த உலக வங்கி உதவியது. இந்நாடுகளில் அடிப்படை வசதிகளை (வீதியமைப்பு, புகையிரதப் பாதையமைப்பு, மின்சாரம் மற்றும் துறைமுகம் போன்றவை) அமைக்க உலக வங்கி உதவியது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப, முன்பு மேற்கத்தைய நாடுகளுக்கு உதவியதுபோலவே, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அமைப்பு ரீதியாக உதவ **European bank for reconstruction and development** என்ற அமைப்பை உருவாக்கி கோடிக்கணக்கில் பணத்தை வாரிவழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

1950இல் மூன்றாம் உலக நாடுகளில் இறக்குமதிக்கு மாற்றீடாக ஏற்படுத்தும் தொழில் திட்டங்களை உலக வங்கி கடுமையாக எதிர்த்தது. பொருளாதார வளர்ச்சிக்கு உதவ என ஏற்படுத்தப்பட்ட இந்நிறுவனங்கள் தன்னிறைவு காண்பதற்கான வழிவகைகளை எதிர்ப்பது உலகவங்கியின் இரட்டைத் தனத்தைப் படம்பிடித்துக் காட்டியது.

வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை இந்தியாவில் தொடங்க அதிகளவு கடன்களை வழங்கிய உலக வங்கி பிரேசில் நாட்டுக் கடன் விண்ணப்பங்களை, அந்நாட்டு தேசிய மயமாக்கல் கொள்கையின் பின்னணியில் முற்றாகத் நிராகரித்தது.

ஜப்பான், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும், 60ஆம் ஆண்டுகளில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலையும் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி ஆகியவற்றின் செயற்பாடுகளை அதிகரித்தது.




வியத்நாமில் அமெரிக்கா எதிர்கொண்ட தோல்வியும், அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் உலக நாடுகளின்மேல் கொண்ட ஆதிக்கத்தையும் குறைக்க வழிகோலியது. இதனால் அமெரிக்கா இத்தகைய நிறுவனங்களைக் கருவியாகப் பாவித்து தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றது.

தொழில்வள நாடுகளில் உழைப்பூதியம் அதிகமாக இருந்ததால் உழைப்பை மூலதனமாகக் கொண்ட உற்பத்திகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு மாற்றத் தொடங்கியது. இவ்விரு நிறுவனங்களும் இந்த மாற்றத்தைத் துரிதப் படுத்தியதில் முக்கிய பங்கு வகித்தன.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மெக்சிக்கோ போன்ற நாடுகள் பெருமளவில் கடனைப் பெற்று தமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டது. (பிரேசில், சிங்கப்பூர், இந்தோனேசியா, தைவான் போன்றவையும் இவ்வழிவகைகளைக் கைக்கொண்டன)

1980ஆம் ஆண்டுகளில் உலகவங்கி கடனை வழங்கி உதவுவது மட்டுமன்றி கடனைப் பெறும் நாடுகள், பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தத் தொடங்கியது.

மேற்கத்தைய நாடுகளில் இந்த இரு

www.tamilarangam.net

நிறுவனங்களும் சந்தைப் போட்டி (Trade war) உருவாகிவிடாமலும், இறக்குமதித் தடையின் (Protectionism) மூலம் பாதிக்கப் படாமல் இருக்கவும் வழிசெய்தது.

அமெரிக்காவிற்கு கட்டுப்பாடற்ற முறையில் பொருட்கள் வந்தடைவதற்கும் அவர்களிடையே இருந்து முதலீடுகள் வேறு நாடுகளுக்கு இரட்டிப்பு முறையில் போவதற்கும் இவை வழிசெய்தன. இரண்டாம் உலக யுத்தத்தில் தொழில்முக நாடுகளில் மிகவும் குறைந்தளவில் பாதிக்கப்பட்டது அமெரிக்காவாகும். ஆகவேதான் நன்கு நன்மையும், நயமும் தரக்கூடிய முதலீடுகளும் சந்தர்ப்பங்களும் இதன் மூலம் கிடைக்கப் பெற்றன.

தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் இந்த இரு நிறுவனங்களிலும் முதலீடுகள் செய்யமுடியாது என்பதைத் தவிர மற்ற அனைத்திலும் வங்கிகள்போல் செயல்படுகின்றன. நாடுகளின் அரசாங்கங்களே இந்த நிறுவனங்களில் முதலீடு செய்யமுடியும்.

உலகவங்கியில் அங்கத்துவ நாடுகள் 10% அங்கத்துவப் பணம் உடன்செலுத்தவேண்டும். இதில் 1% தங்கமாகவும், 9% மாற்றக்கூடிய பணமாகவும் இருக்கவேண்டும். மீதி 90%உம் எந்நேரத்திலும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் அங்கத்துவ நாடுகள் 25% மாற்றீடு செய்யக்கூடிய பணமாகவும், 75% உள்ளூர்ப் பணத்திலும் வழங்கவேண்டும்.

இதுவரை 155 நாடுகள் சர்வதேச நாணய நிதியத்திலும், 148 நாடுகள் உலக வங்கியிலும் அங்கம் வகிக்கின்றன. சில விதிவிலக்குகளைத் தவிர, பொதுவாக ஒரு நாடு கட்டாயம் இந்த இரு நிறுவனங்களிலும் அங்கம் வகிக்கவேண்டும். ஆரம்பத்தில் அமெரிக்கா தனது பலம் வாய்ந்த பொருளாதாரத்தால் இந்நிறுவனத்தின் முக்கிய இடம் வகித்தது. படிப்படியாக ஜேர்மனி, ஜப்பான், பெற்றோல் உற்பத்தி நாடுகள் (OPEC) முக்கிய இடம் வகித்தன.

இந்த இரு நிறுவனங்களிலும் வாக்குகளைப் பொறுத்தவரை ஒரு நாடு ஒரு வாக்கு எனும் நியதியோ ஜனநாயகமோ இல்லை. இங்கு பணம்தான் பேசும் என்பார்கள். இதற்கு யார் அதிக பணம் வழங்குகிறார்களோ அவர்களுக்குக் கூடிய வாக்குப் பலமும் உண்டு.

ஆரம்பத்தில் மிகப் பணக்கார நாடாகவும் இவ்விரு நிறுவனங்களிலும் உந்துசக்தியாகவும் இருந்த அமெரிக்காவிற்கே விதிகளை அமைக்கவும், மாற்றவும், தலைமையகம் எங்கே அமையவேண்டும் என்பதையும் நிர்ணயிக்கும் வல்லமை உண்டு எனக் கூறலாம்.




அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் ஆகிய ஐந்து நாடுகளே எதையும் நிர்ணயிக்கும் வல்லமை வாய்ந்தவையாக உள்ளன.

சில நாடுகளின் கணக்குப் பலம்:

அமெரிக்கா: 15.12%(உ.வ), 19.1%(ச.நா.நி)

ஜப்பான்: 8.74%(உ.வ) 4.52%(ச.நா.நி)

ஜேர்மனி: 6.75%, 5.78%

ஐ.இராச்சியம்: 6.47%, 5.78%



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆங்கிலத்தில் இலங்கை இலக்கியங்கள்

உலகப் பிரசித்தி பெற்ற லண்டன் பெங்குயின் பிரசுரத்தார், இலங்கையின் தமிழ் சிங்கள ஆங்கிலப் படைப்பாளிகளின் இலக்கியத் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளனர். 245 பக்கங்கள் கொண்ட இந்தத் தொகுதியை பேராசிரியர் டி.சி.ஆர்.ஏ.குணதிலகா தொகுத்துள்ளார்.

இலங்கையில் பெங்குயின் ஆக்கங்கள் என்ற தலைப்பில் முழுவதும் இலங்கைப் படைப்பாளிகள் சிலரின் ஆக்கங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. பல சிங்கள ஆங்கிலப் படைப்பாளிகளுடன் அமெரிக்க நிலைய நூலகப் பிரிவின் இயக்குனர் பி.தம்பிராஜா எழுதிய 'தலைக்கொள்ளி' (இலஸ்ற்ரேட்டட் வீக்லியில் வெளியானது), சதானந்தன் எழுதிய 'விமலா', டொக்டர் நந்தி எழுதிய 'படிகம்', என்எஸ்எம்.ராமையா எழுதிய 'மலைகளுக்கு மத்தியில்' ஆகிய கதைகளும், மஹாகவி, முருகையன், சில்லையூர் செல்வராஜன், குறிஞ்சிநாதன் ஆகியோரது கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

பிரான்ஸ்: 5.15%, 4.80%
சவுதி அரபியா: 2:36%, 3.44%
சீனா: 3.27%, 2.57%
பிலிப்பைன்ஸ்: .38%, .54%

உலக வங்கியை நிர்ணயிக்கும் பொறுப்பு இயக்குனர் சபையிடமே உள்ளது. இச்சபை அங்கத்துவ நாடுகளின் நிதியமைச்சர்களையும் அல்லது அந்த நாடுகளின் தேசிய வங்கி/ மத்திய வங்கியின் முதல்வர்களையும் கொண்டதாகும். முக்கியமான விடயங்கள்

வாக்குகளினால் நிர்ணயிக்கப் படுகிறது என்று கூறினாலும் அதிகளவு பணத்தைக் கொடுத்து உதவுகின்ற ஐந்து நாடுகளும் 42 வீதமான வாக்குப் பலத்தையும், மிகுதி 143 நாடுகளும் 58 வீதமான வாக்குப் பலத்தையும் கொண்டுள்ளதால் வாக்குகளினால் நிர்ணயிக்கப் படுவது மிக அரிதாக உள்ளது. முடிவுகள் பெரும்பாலும் ஏகமனதான ரீதியில் எடுக்கப் படுகின்றன.

சர்வதேச நாணய நிதியமும் பெருமளவில் உலக வங்கிபோலவே செயல்படுகிறது. இந்த இரு நிறுவனங்களதும் உப இயக்குனர்கள் மரபுரீதியாக கட்டாயம் அமெரிக்கப் பிரஜையாக இருக்க வேண்டும்.

1990ஆம் ஆண்டு உலக வங்கி வழங்கிய கடன்கள்:

ஆசிய நாடுகள்: 6.40 பில்லியன் டொலர்கள்

ஆபிரிக்க நாடுகள்: 3.93 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

தென்னமெரிக்க, கரிபியன் நாடுகள்: 5.96 பில்லியன் டொலர்கள்

மத்தியகிழக்கு ஐரோப்பிய நாடுகள்: 4.4 பில்லியன் டொலர்கள்

மொத்தம்: 20.69 பில்லியன் டொலர்கள்

உலக வங்கி 1990ஆம் ஆண்டின் கடைசி ஆறு மாதத்தில் மட்டும் 7.79கோடி டொலர்களை லாபமாகப் பெற்றுள்ளது.

1989ஆம் ஆண்டில் மட்டும் ச.நா.நிதியம் 3.07 பில்லியன் டொலர்களை லாபமாகப் பெற்றது.

கடனாக வழங்கும் பணத்தைவிட வட்டியாக அதிகம் மீளப் பெறுவது பற்றி இன்னொரு தடவை பார்க்கலாம்.

www.tamilarangam.net

# எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும்...

• துருவச்சி •



புரியாத புதிர் 3
கவிராயருக்கும் வில்லங்கம்

அவசர அவசரமாக சுவடுகள் சஞ்சிகையுடன் என்னைத் தேடிவந்தார் விசித்திர கவிராயர். அவரது பரபரப்பினை வருகையிலேயே புரிந்துகொண்டேன். என்ன பிரச்சனையாக இருக்கும் என்று மண்டையை உடைத்துக்கொண்டு இருந்ததில், 'வாங்கோ' என்று வரவேற்கவும் முடியவில்லை.

'தம்பி வரலாமோ?' என்றார்.

ஆங்கிலப் பாணியில் **'Oh sure'** என்று சொல்லலாம் என்றால் அதுவும் வம்பாகிவிடும். எனவே தமிழில் மாறி நயமாக 'தாராளமாக, வாங்கோ' என்றேன். ஏன் என்னைத் தேடி வந்தாரென்று பேந்தப் பேந்த முழித்தேன். சூழ ஒரு நிமிடம் 'சிலோன் அமைதி' (மயான அமைதி) நிலவியது. அவரே தொடங்கினார். 'தம்பி, போனமுறை நீர் என்னை வம்பிலை மாட்டிப் போட்டீர்' என்றார். 'வம்பிலையோ? நானோ? உங்களையோ?' என்றேன் புரியாமல்.

"பின்னத் தம்பி? போனமுறை என்னைப்பற்றி எழுதினீரெல்லோ சுவடுகளிலை. ....... அதாவது, கவிராயர் மனிதனை மனிதன் கொல்வது சரியென்று சொல்பவர் இல்லை எண்டு, அதை வாசிச்சுப்போட்டு ஒருத்தர் என்னட்ட வந்து என்ன கவிராயர் நீர் 'எந்த' இயக்கம் எண்டு கேட்டார். நானும் 'ஒண்டுமில்லை' எண்டன். 'சுத்தாதையும் நீர்தானே மனிசனை மனிசன் கொல்றதைப் பிழை எண்டனீர்? அப்ப நீர் நிச்சயமா இயக்கமா இருக்கவேணும்' என்றார். நானும் 'இல்லத்தம்பி, நான் இயக்கமில்லை, மனிதாபிமானி 'எண்டன். அதுக்கு அவர், 'சீச்சீ சுத்திறீர், நீர் 'அந்த' இயக்கத்தைத் தாக்கி நக்கலடிக்கத்தான் இப்பிடிச் சொல்லி இருக்கிறீர்.... உங்களை எல்லாம் ...... என்ன செய்யவேணும் தெரியுமே? "

' ' எண்டு பல்லை நெருமிப்போட்டுப் போட்டார். எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. ஒருத்தன்

www.tamilarangam.net

மனிதாபிமானியாக இருக்கக் கூடாதா? அப்பிடி இருந்தாலும் 'ஒரு இயக்கத்தை' எதிர்க்கிறவானாகத் தான் இருக்க வேணுமா? அல்லது வேற ஒரு இயக்கத்தவனாக் கட்டாயம் இருக்கவேணுமா? எங்கட ஆக்கள் ஏன் இப்பிடிச் சின்னத்தனமா யோசிக்க வேணும் எண்டு விளங்கேல்லை ......" என்று பெருமூச்சு விட்டார் கவிராயர்.

நான் நிம்மதிக்காகப் பெருமூச்சு விட்டேன்.

புரியாத புதிர் 4
உலக ஒலிம்பிக் விளையாட்டு

இம்முறை ஒலிம்பிக் போட்டி பார்சலோனாவில் அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தது. இதுபற்றிக் கவிராயரிடம் கேட்டேன்.

"ஓமோம் தம்பி, ரீவீக்க கண்ணை நுழைச்சுப் பார்த்துக் கண்கள் பூத்துப் போச்சு. முந்தி இதையெல்லாம் நாங்கள் பார்க்க முடியாது. இப்ப ரீவீயாலை நேர பாக்கிற மாதிரி இருக்கு. இம்முறை 'பனிப்போர்' முடிஞ்சதாலை (?) கடைசி முந்திமாதிரி அரசியல் காரணங்களுக்காக போட்டிகளைப் பகிஷ்கரித்த சோவியத்தும் அமெரிக்காவும் இந்த முறை அப்பிடிச் செய்யேல்லை. நல்ல விசயம்தான். ஆனா ரெண்டு விசயம் விளங்கேல்லை" என்றார்.

"என்ன அந்த இரண்டு விசயம்.....?" எனத் தூண்டினேன்.

"இல்லைத் தம்பி...... எங்கட ஆக்கள் விளையாட்டுத் துறையில எவ்வளவு பின்னுக்கு நிக்கிறம் பாருங்கோ? முந்தி ஒலிம்பிக் போட்டிகளில அதிக பதக்கங்களை 'வெள்ளை'க்காரர்தான் எடுப்பினம். இப்ப நிலைமை மாறிவருகுது. அமெரிக்கக் 'கறுப்பு' வீரர்களோடை வேற பல நாட்டுக் 'கறுப்பு' வீரர்களும் பதக்கங்களைக் குவிக்கிறதைக் கவனிக்கக் கூடியதாக இருக்குது. குறித்தளவு காலத்துக்கு மேல யாரையும் அடக்கி வைச்சிருக்க ஏலாது எண்டதும், அந்தத் திறமைகள் எப்பவாவது ஒருநாள் வெளியிலை வரும் எண்டதும் தெரியுது. ஆனாலும் பாருங்க தம்பி, நாப்பது லச்சம் சனத்தொகையைக் (கிட்டத்தட்ட இலங்கைத் தமிழ் மக்களின் தொகை) கொண்ட சின்ன நாடான நோர்வே, இரண்டு தங்கப் பதக்கத்தைப் பெறமுடிஞ்சது. ஆனால் இலங்கை என்ன பண்ணுது? சரி அதைவிட்டாலும், எண்பது கோடி சனத்தைக் கொண்ட இந்தியா ஏன் ஒரு பதக்கத்தைத் தானும் எடுக்க முடியேல்லை? அதிலையும் எண்பது லட்சம் சனமேயுள்ள சுவீடனிலை இருந்து நூறுக்கு மேற்பட்ட வீரர்கள் கலந்து கொள்ளேக்கை, இந்தியாவிலை இருந்து அதிலை பாதிப்பேர் கூடக் கலந்து கொள்ளேல்லை. சின்ன நாடான கியூபாவாலை பதின்நாலு தங்கப் பதக்கம் எடுக்க முடியும் எண்டால், நாங்கள் உலகத்திலை ஆறுகோடித் தமிழர் ஏன் ஒண்டுகூட எடுக்க முடியேல்லை?"

இந்தப் பெரிய கேள்வியைச் சுமந்துகொண்டு வீடு திரும்பினேன்.

## இலக்கியச் சந்திப்பு

கடந்த நான்கு வருடங்களாக மேற்கு ஜேர்மனியில் நிகழ்ந்துவரும் இலக்கியச்சந்திப்பின் 13ஆவது நிகழ்ச்சி பொண் நகரில் ஒகஸ்ற் 22ஆம் திகதி நிகழவுள்ளது. நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

K.THOFEEK
Kiefern Weg 38
VENUSBERG
GERMANY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# குட்டி யாழ்ப்பாணம்

ஒஸ்லோ தமிழர்களால் 'குட்டி யாழ்ப்பாணம்' எனச் செல்லமாக அழைக்கப்படும் ஸ்ரொவ்ணர் (Stovner) பகுதியில் அண்மையில் நிலக்கீழ் புகையிரத நிலையம் வண்ணப் பூச்சோடு புதுப் பொலிவு பெற்றது. இங்கு சுவர்களில் வரையப்பட்டுள்ள கிழக்காசியப் பாணியில் அமைந்த பலவர்ண ஓவியங்கள் அனேகரது பாராட்டையும் பெற்றவை.

ஒஸ்லோ புகையிரதத் திணைக்களம் 88ஆம் ஆண்டில் இருந்து வருடாந்தம் நடத்தும் நிலக்கீழ் புகையிரத நிலையங்களுக்கான ஓவியப் போட்டியில் பல கல்வி நிலைய மாணவர்கள் பங்கெடுப்பர். இவ்வருடம் அமைக்கப்பட்ட போட்டியில் ஸ்ரொவ்ணர் நிலையத்துக்கான ஓவியமே முதலாவது இடத்தைப் பிடித்ததுடன் ஐம்பதாயிரம் குறோணர் பரிசையும் தட்டிக்கொண்டது. இந்த ஓவியத் தொகுதியின் தலைப்பு இதுதான் - 'உலகப் பயணிகள்'

## The Sri Lanka Monitor

இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்களையும், அரசியல் நிலைமைகளையும் பற்றி மாதந்தோறும் பிரிட்டிஷ் அகதிகள் கவுன்சில் வெளியிடும் செய்தி இதழ். ஆங்கிலத்தில் வெளியாகும் இந்த இதழைப் பெறத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: The Sri Lanka Project, The British Refugee Council, 3/9 Bondway, LONDON SW8 1SJ, United Kingdom

## மன்னிப்புச் சபை அறிக்கை

1991இல் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களின் சுருக்கமான தொகுப்பை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது. இதன் பிரதிகள் நோர்வேயில் உள்ள மன்னிப்புச் சபைக் கிளையில் கிடைக்கும்.

Amnesty International, Maridahls vn87, Oslo 4



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலு மகேந்திராவின் தொடர் பேட்டி

(முன்தொடர்)

"கமர்ஷியல் படங்கள் என் ஏரியா அல்ல, இனி இந்த வியாபார நோக்கை விலக்கப் போகிறேன்" என்று 'கல்கி'யில் ஒருமுறை பேட்டி அளித்திருக்கிறீர்கள். மீண்டும் நீங்கள் 'வண்ண வண்ணப் பூக்கள்'தானே கொடுத்திருக்கிறீர்கள்?

இந்தக் கேள்விக்கு பதில் சொல்வதற்கு முன் இன்னொரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒவ்வொரு காலகட்டத்திலேயும் எனக்கு இருக்கும் மனநிலைகள் - அதற்கான காரணங்கள் இவற்றையும் கணக்கிலெடுக்க வேண்டும்.

தொழிலின் எந்த பொழுதிலாவது இனி இதைச் செய்யக்கூடாது — தொடரக்கூடாது — தொடக் கூடாது என்று முடிவெடுத்திருக் கலாம். ஆனால் ஓரிரண்டு ஆண்டு களுக்கு பிறகு என் முடிவை மற் றொரு முடிவால் மாற்ற நினைக் கலாம். இந்த மாற்றத்துக்கு காரணம் நான் முன்னால் எடுத்த முடிவு தப்பென்று தோன்றியிருக்கலாம். அல்லது அந்த மாற்றத்துக்கு நான் கட்டாயப் படுத்தப்பட்டிருக்கலாம். In short, என் முன் முடிவுகளை மாற்றவோ தொடரவோ எனக்கு முழு உரிமை உண்டு என்று சொல்லி விட்டு உங்கள் கேள்விக்கு வருகிறேன்.

இன்ஸ்டிட்யூட்டிலிருந்து வெளி வந்த கால கட்டங்களில் — கனவுச் சுமைகளை இதயத்தில் தாங்கி, சர்வதேச சினிமாவுடன் சல் லாபம் நடத்திய சந்தோஷத்தோட, மற்றவர்களைவிட இந்த மகத்தான மீடியத்தின் பிடிப்புகள் நமது



"நான் ரசித்து, கவனத்தோடு light up பண்ணிய காட்சிக்கு அவன் கை தட்டவில்லை. ஒரு குயில் பறக்கறதுக்கோ அல்லது கத்துக்குட்டி கேமராமேன் எடுக்கக்கூடிய ஒரு Sun rise - சூரிய உதயத்திற்கோதான் கை தட்டுகிறான்!"

ருக்கிறேன். 'வண்ண வண்ணப் பூக்கள்' just above average. அதற்குக் குறைவாகவும் இருக்கலாம். இந்த வண்ண வண்ணப் பூக்களையே இந்த தமிழ் ரசிகனால் ஏற்றுக்கொள்ள முடியலேன்னா... நான் அடுத்து என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வி என் முன்னே எழுகிறது. 'வண்ண வண்ண பூக்கள்' எந்த விதமான கொச்சைத்தனமும் இல் லாமல், வன்முறை கலக்காமல், எந்த இரட்டை அர்த்த வியாபாரத் திணிப்புகளும் இல்லாமல், தெளிவான சுத்தமான ஒரு படத்தைக் கொடுக்க முடியாதான்னு நெனைச்சேன்.

"வண்ண வண்ண பூக்'களில் ஆபாசத்தனம் — வார்த்தை யைப் பயன்படுத்தியிருந்தேன்னா — ஆபாசவார்த்தையை பயன்படுத் திய பழியை சுமக்கத் தயாராக இருப்பேன். இல்லியே.

ஒரு பெண்ணுடன் படுப்பதே ஆபாசமல்ல. Sex is not vulgar. ஆரோக்கியமானது. உணவு மாதிரி அவசியமானது... நல்ல இலக்கியத் தைப் படிப்பதுபோல... நான் அப் படித்தான் பார்க்கிறேன்.

இன்னொரு கட்டத்திலே — "நான் love பண்ணினேன். உண்மை, ஆனா கல்யாணம் பண்ணிக்கணும்னு எப்பவுமே நெனைச்சதில்லே"ன்னு சொல்றான். உடனே நண்பன் கோபமாக வெடித்தெழுகிறான். 'காதலிக்கறதுக்கு ஒருத்தன். கல் யாணம் பண்ணிக்கிறதுக்கு இன் னொருத்தன். ஒசியிலே வந்து'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாலுமகேந்திராவின் தொடர் பேட்டி



"பேசிக்கொண்டே இருந்தால்தான் படம் என்று நினைக்கிற பருவத்திலேயே இருக்கிறான் - ஒரு கற்பழிப்புக் காட்சியில் கூட பேசிக்கொண்டே..."

"ஒரு பெண்ணுடன் படுப்பதே ஆபாசமல்ல... **Sex is not vulgar.** ஆரோக்கியமானது. உணவு மாதிரி அவசியமானது..."

பிடியில் அடங்கி விட்டன என்ற பெருமிதத்தோட, வெளியேவந்து — இங்கு இருக்கிற சகல சினிமா வித்தகர்களையும் குனிந்து பார்த்து, எள்ளி நகையாடுகின்ற ஒரு சிறுபிள்ளைத் தனத்தோடத்தான் நானும் இருந்தேன். பிறகு — அனுபவங்கள் எனக்கு பக்குவத்தை அளித்தன... என் பலவீனங்களைப் புரிய வைத்தன.

*'வீடு' ஒரு வசூல் படமல்ல, 'வண்ண வண்ணப்' பூக்களும் வசூலான படம்னு சொல்ல முடியாது — வசூலுக்காக எடுக்கப்பட்ட படமான போதிலும்! 'வீடு'களின் தோல்வி உங்க ,ள பாதிக்காது — 'நல்ல படம் எடுத்தாரு ... reach ஆகலே' அவ்வளவுதான். ஆனா, 'வண்ண வண்ண பூக்கள்' தோல்வி உங்களைப் பாதிக்கும்*

you are absolutely right. நான் இதே கேள்வியை எனக்குள் கேட்டுக்கிட்டி

*களில் கூட கலக்கலேன்னு சொல்ல வர்றீங்களா?*

நிச்சயமா... இரண்டு இடங்களைத்தான் 'நீங்க குறிப்பிடறீங்கன்னு புரிஞ்சுக்கறேன். ஒண்ணு மனோவை வீட்டுக்கு கொண்டுவந்து, நண்பர்கள் ரண்டுபேரும் வெளியே பேசிக்கிட்டிருக்காங்க. 'இவளை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'னு சொல்றவனிடம் 'இந்தப் பொண்ணை நீ பார்த்து, ஒருவாரம் கூட ஆகலே நாலு நாளு வெச்சுக்கிட்டு ரண்டு தட்டு தட்டிட்டு விட வேண்டியது தானே?"ங்கற senseலே கேட்பான். இது ஒரு honest expression... அந்த வயசிலிருக்கும் ஒரு பையன் என்ன சொல்வான். ஒருவேளை கொஞ்ச நாளைக்கு வெச்சுட்டு நாலு "..." பண்ணிட்டுவிட வேண்டியது தானே'ன்னு 'அந்த' வார்த்தை நொட்டிக்கிட்டு போறதுக்கு ஒருத்தன் வெளியே வந்து பீத்திக்கறதுக்கு இன்னொருத்தன்"ன்னு கத்தறான். இந்த ஒசியிலே வந்து நொட்டிக்கிட்டு போறதுக்கு. என்ற பதப் பிரயோகத்தைத்தான் object பண்றீங்க. "நீ sex வெச்சுக்கறதுக்க ஒருத்தன்" — இதை நான் strongஆ சொல்லியாகணும் "படுத்துக்கிட்டு போறதுக்கு ஒருத்தன்"ன்னு சொல்லலாம். அது போதாது எனக்கு. நொட்டிக்கிறது 'படுத்துக்கறது' இதில் எதைப் பயன்படுத்தறது... குழப்பமாக இருந்தது... 'நொட்டிக்கிறது' ஒரு வட்டார வழக்குச் சொல். தமிழ்நாட்டிலே பலருக்கும் புரியும் — சிலர்தான் — அதைப் பயன்படுத்தறாங்க. அந்த வார்த்தையைத் தவிர "sex வெச்சுக்கறது" என்பதற்கு அதன் அர்த்தமும், ஆழமும் இருக்கிற கொஞ்சம் நாகரீகமான usage 'நொட்டிக்கிறது' என்ற தீர்மானமான முடிவுக்கு வந்தேன். தப்புன்னு என்னை நான் கண்டிக்க முடியலே... எனக்குப் படலே... That's all.



"சினிமா மற்ற எந்த கலையையும் விட, அழுத்தமான உடனடித் தாக்கம் கொண்ட அற்புதமான மீடியம். அந்த சினிமா பொழுதுபோக்கிற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதை நான் வருத்தத்தோடு எதிர்க்கிறேன்!"



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கவர்ச்சியின் சிறிய விரிவாக்கம் தான் ஆபாசம். அதை எப்படி கோடிட்டு பிரித்து, இது கவர்ச்சி, இது அதை மீறிய ஆபாசம் என சொல்கிறீர்கள்?**

Eroticism is the aesthetic expression of sex, அதை "கம்பராமாய"ணத்திலும் பார்க்கலாம். கம்பரை விட மிஞ்சிய eroticis'ஐ-மா நம்ப பண்றோம்? இல்லே, கஜிராஹோவிலே காணுற eroticism-ஐ விடவா நம்ப பண்றோம்?

ஜாக்கெட் போடாமெ குடத்திலே தண்ணி எடுத்துக்கிட்டு வர்ற ஆதி வாசியிடத்தில் அற்புதமான ஒரு eroticism-ஐ நான் பார்க்கறேன். அதே நேரத்திலே ஒரு சராசரி சினிமா பத்திரிகைக்கு பாதி மார்பு தெரியறா மாதிரி ஒரு நடிகை 'போஸ்' கொடுக்கறதெ vulgar ஆபாசம்னுதான் சொல்ல லாம். நடிகையை விட ஆதிவாசிப் பெண் உடம்பு அதிகமா மூடப் படாமல் இருக்கலாம் - அது vulgarity அல்ல. ஏன்னா இதிலே motivation இருக்கு. அதே நேரத்தில் அம்மணமா எடுக்கப்பட்ட படமா இருந்தா கூட, அதை ஒரு அற்புதமான கலை வடிவமா, கலை வெளிப்பாடா எடுக்க முடியும்.

Eroticism சங்க இலக்கியத்திலே தண்ணி பட்ட பாடு. கம்பர் ஒரு விடிய லைச் சொல்லும்போது கூட eroticism வெளிப்படுத்துகிறார் - சிவந்த கண் களும், தொங்கிய மார்புகளுமாக



**கம்பர் ஒரு விடியலைச் சொல்லும்போது கூட Eroticism வெளிப்படுத்துகிறார் - சிவந்த கண்களும், தொங்கிய மார்புக ளுமாக வீடு திரும்பிக் கொண்டிருக்கும் விலை மாதர்கள் என பொழுதை Picturise பண்ணிக் காட்டுகிறார்.**

சூரிய வெளிச்சம் வரும். இந்த பிரேமைப் பிடிச்சு, முன்னாலே ஒரு magnifying glass வெச்சு, மணிக் கணக்கா சுவத்திலே விழற படத்தைப் பார்த்துக்கிட்டிருப்பேன். அதுக்கு டிக்கெட் போட்டு, மத்தவங்களையும் பார்க்கச் சொல்லுவேன்.

அப்படியே பூனேயிலிருந்து, நீங்க சொன்னா மாதிரி, வெளியே வந் தேன். with lot of dreams. ஆனா, கனவுகள் கலைந்து, சிறகுகள் முறிந்து - நம்பிக்கை மட்டும் இன்னும் உடையலே. But, நிறைய காலம் வீணா போச்சு. என்னுடைய முட்டாள்தனங்களாலெ நிறைய காலம் வீணா போயிருக்கு - இயலாமை யாலே என்னோட over sensitivityயாலே - முக்கியத்துவம் கொடுக்கக் கூடாத காரியங்களிலே அதிக முக்கியத்துவம் கொடுத்து நிறைய காலம் போச்சு. யாரையும் குற்றப்படுத்த முடியாது. இப்போ நான் என் வாழ்க் கையின் பிற்பகலில் இருக்கேன். இனிமே, evening, sunset, darkness-தான். அதனாலே, இந்த குறைஞ்ச காலத்

வரின் பார்வையில் படமாக்கு கிறார்களே, இதனுடன் தங் களால் பொருத்தப்பட முடி - கிறதா?

தனிப்பட்ட முறையில் நான் அதை எதிர்க்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய சக படைப்பாளிக்கு, அவன் இஷ்டப்பட்ட விதத்தில் அவன் படைப்பைக் கொடுக்க அவனுக்கு உரிமை இருக்கு. அது தேவையோ, நியாயமோ அது வேறெ விஷயம்.

**கண்ணில் என்ன வண்ணம் தெரி கிறதோ - எப்படி நமது பார்வை யில் படுகிறதோ அதை அப் படியே காட்டறது தானே நல்ல photography?**

எல்லா சமயங்களிலும் இல்லே. எடுத்துக்கொண்ட கதைக் கருவை சிதையாமல், divert ஆகாமல், வெளிப் படுத்த ஒத்துழைப்பதுதான் ஒளிப் பதிவு. to enhance the Script in whatever possible ways. கதையோட தேவை களை, ஆழங்களை, வேகங்களை எல்லாம் நிராகரித்து ஒளிப்பதிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விலைமாதர்கள் என பொழுதை pictu-rise பண்ணிக் காட்டுகிறார்.

**Film Institute-ல் எளிதாக நுழைந்தவரல்ல நீங்கள். அங்கே, அப்போது வார்த்தெடுத்த கனவுகள், எதிர்பார்ப்புகள் இப்போது நடைமுறையிலே செயலாகி இருக்குன்னு திருப்திப் படநீங்களா... இல்லே இதயத்தின் ஒரு மூலையில் சின்ன வருத்த ரேகை படர்வதாக கருதறீங்களா?**

எனக்கு ஒரு பனிரண்டு - பதிமூணு வயசிலேயே சினிமா ஒரு பொழுது போக்கா நான் கருதலே சினிமா ஒரு வெறியா — பைத்தியமா இருந்தது. அதை ஒரு அநியாயமான — அட்டகாசமான — அடாவடித்தனமான காதல் என்றுகூட சொல்லிக்கலாம். அதனாலே நேரா பூனே பிலிம் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போய், சினிமா என்கிற அந்தக் கலையை முழுமையா — முழுமையா கத்துக்கணும்னு நெனைச்சேன். சினிமாவிலே, அதனோட glamour-ருக்காகவோ - பண வசதிக்காகவோ நான் வரலே.

எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கு. ஒரு பிலிம் பிரேமுக்காக தியேட்டர் ஆபரேட்டருக்கு டீ வாங்கிக் கொடுத்து, மிஷின் தொடச்சிருக்கேன் - ஒரு டென்ட் கொட்டகையில். எங்க வீட்டிலே ஒரு ஓட்டை இருக்கு. நாலு, நாலரை மணிக்கு அது வழியா தூலமே ஏதாவது உருப்படியாக செய்ய முடியாதா என்ற தாகமும், ஏக்கமும் என்னுள் இருந்து கொண்டிருக்கும். அதுமட்டும் by God's grace இன்னும் அழியலே. அது இன்னமும் வெளிப்படாமெ, வெடிக்காத எரிமலையா இருந்துக்கிட்டிருக்கு. ஒரு வருஷத்திலே 'வீடு' மாதிரி, 'சந்தியா ராகம்' மாதிரி ஒரு சின்னப் படம் பண்ண முடியும்னா, அதுக்காக பத்து குப்பைப் படம் பண்ண நான் தயாரா இருக்கேன். ஒரு சின்ன சப்பைக்கட்டு. என்னதான் என்னை விபசாரியா ஆக்கிக் கிட்டாலும், ஒரு நாகரீகமான விபசாரியா இருந்துக்கிட்டிருக்கேன்.

**ஒளிப்பதிவில் புதுமையைச் செய்வதாக சொல்லிக் கொண்டு, ஒரு சிவப்புக் கண்ணாடியைப் போட்டு படம் பார்க்கறா மாதிரி, பச்சைகளை, நீலங்களைக் கூட அதே வர்ணத்தில் காட்ட மனமில்லாமல் வெளிறிய சிவப்பாக காட்டுகிறார்கள். மூக்குக் கண்ணாடியில் எண்ணெய் தடவியது போல் - Cataract முதிய** செய்யும் மனிதனை மட்டும் மக்கள் இனம் கண்டு கொள்ளணுங்கற ஒரே நோக்கத்தோட செயல்பட ஒரு படைப்பாளி ஆரம்பிச்சான்னா, அவனை நான் கோபத்தோட நிராகரிக்கிறேன். உரிமை இருக்கலாம். எதையெல்லாம் பலி கொடுத்து, அதை பண்றாங்க. உன்னுடைய நோக்கமே cheap ஆகி விடுகிறதே. இதை எதுக்கு ஒப்பிடலாம்னா ஒரு கல்யாணத்திலே, பட்டுப்

புடவை கட்டி நிற்கும் அழகான பெண்கள் நடுவே, மற்றவர்கள் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் அவள் ஒரு பேரழகியாக இருக்க வேண்டும். ஆனால் ரொம்ப சுமாரான ஒருத்தி, 'பிகினி'யில் வந்தால் எல்லாரும் திரும்பிப் பார்ப்பாங்க தான். அதுமாதிரி வித்தியாசமா பண்றதா சொல்றதாகாது... அவங்க motive-ஐ நான் சந்தேகப்படறேன்.

*(மீண்டும் தொடர்கிறது)*

**"எனக்கு ஒரு பனிரெண்டு - பதிமூணு வயசிலேயே சினிமாவை ஒரு பொழுது போக்காக நான் கருதலே.. சினிமா ஒரு வெறியா — பைத்தியமா இருந்தது."**

**"ஒரு பிலிம் பிரேமுக்காக தியேட்டர் ஆபரேட்டருக்கு டீ வாங்கிக் கொடுத்து, மிஷின் தொடச்சிருக்கேன்."**



நன்றி: பிலிமாலயா



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சங்கரன்

# புதிய நாஜிகள்

நோர்வேயில் முதல்தடவையாக புதிய நாஜிகள் கனரக ஆயுதந் தரித்துள்ளனர் என்பது செய்திகள் மூலம் வெளிவந்துள்ளது. இதற்கு முந்திய காலங்களில் அமெரிக்காவின் கூ குளுக்ஸ் க்ளான் (Ku Klux Klan) பாணியில் சிலுவை எரிப்புகள் செய்து வந்தனர். அண்மையில், புதிய நாஜிகளின் அங்கத்தினர் ஒருவர் ஏ.ஜி.3 என்ற தன்னியக்கத் துப்பாக்கியுடனும், மற்றொருவர் அமெரிக்கத் தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றுடனும் புறுமுண்டால் அருகில் நிற்கும் படங்கள் வெளியாகியுள்ளன.




அவர்களில் ஒருவர் கூ குளுக்ஸ் க்ளான் பாணியில் ஆளைமூடும் வெள்ளை அங்கி அணிந்து தோன்றியிருக்கிறார், மற்றவர் முழுக் கறுப்பு அணியுடன் தோன்றியிருக்கிறார். இந்தப் படம் முதலில் வீகிங்ஙென் (Vikingen) என்ற பத்திரிகையிலும், பின்னர் பிரபல பத்திரிகை ஒன்றிலும் வெளியானது. 'வெள்ளை ஆரிய சக்தி' (Hvit Arisk Motstand) என்ற அமைப்பினால் வெளியிடப்படுவது.

புதிய நாஜிகள் முன்பு போல ஆண மி(ய்)ர்டால் பின்னால் அவரது உரையைக் கேட்பதற்குச் சுற்றுவதில்லை எனவும், அவரது மந்தப் போக்கால் சலிப்புற்று, வேறு தீவிர வழிகளில் இறங்கியுள்ளதாகவும் தமது ஆய்வுகளில் தெரிவதாக ஹமார் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி றிங்சாகர் மாநகரசபைத் தலைவர் கருத்து வெளியிடுகையில், புதிய நாஜிகள் ஆயுதம் வைத்திருப்பது தமக்கு முன்பே தெரியும் எனவும், இதுபற்றித் தாம் ஆச்சரியம் அடையவில்லை எனவும், மே 15ஆம் திகதி நிகழ்ந்த ஆண மி(ய்)ர்டாலின் கூட்டம் பெரும் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து சத்தமின்றி இருந்த புதிய நாஜிகளும், நிறவெறியர்களும் தங்களை வேறு வடிவில் வெளிப்படுத்த விரும்புகின்றனர் எனவும் கூறியுள்ளார்.

நிறவாதத்துக்கு எதிராகப் பணிபுரியும் பல அமைப்புகள், தனிநபர்கள், அதிகாரிகள், பொலிசார் போன்றோரின் தகவலைப் புதிய நாஜிகள் சேகரிப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.●


**நிவேதனம்**

புதிய சிறுகதைத் தொகுதி, வெளியீடு
திருமலை கலை இலக்கிய வட்டம்,
வித்தியாலய ஒழுங்கை, திருகோணமலை,
இலங்கை.

**இருப்பு**

கல்முனையில் இருந்து வெளிவரும்
இலக்கியச் சஞ்சிகை. தொடர்புகளுக்கு:
இருப்பு இலக்கிய வட்டம், 374 செயிலான்
வீதி, கல்முனை 04, இலங்கை.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

தமது தாய்நாட்டைவிட்டு அரசியற் காரணங்களுக்காக வேறு நாடுகளுக்குச் சென்றோர், உலகின் ஏனைய பல சமூகங்களைக் காட்டிலும் எமது சமூகத்தில் அதிகம். இதற்கான காரணங்கள் பல்வேறு விதமாகக் கூறப்பட முடியும். காரணங்கள் எவ்வாறானதாய் இருப்பினும், ஒரு பெரும் தொகையானோர் தாய்நாட்டுக்கு முற்றிலும் வேறுபட்ட தேசங்களில் வாழ்கிறோம் என்பதும், இவ்வாறு வாழ்பவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

எமது தாய்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் தமிழ் மக்களுக்குக் கல்வி வாய்ப்புகள் ஏதோ ஒருவிதத்தில் மறுக்கப்பட்டே வருகின்றன. அண்மையில் நிகழ்ந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வெவ்வேறு தடவைகள் நிகழ்த்தப்பட்டது என்ற காரணத்தைக் காட்டி வடக்குப் பகுதி மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை மேலும் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது. அனைவரையும் சமமென மதிக்கும் பௌத்தக் கொள்கையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் பல நாடுகளிலும் எமது சமூகத்தினர் கல்வி வாய்ப்புகளைப் பெறக்கூடியதாக உள்ளனர். இவ்வாறான வாய்ப்பு எம்மில் பலரால் பயன்படுத்தப் படுவதில்லை. பலர், இந்த நாடுகளில் தங்கியிருக்க ஒரு காரணமாக மாத்திரமே கல்வியைப் பயன்படுத்துவது கவலை தரும் ஓரம்சம். இது தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படாது அவர்களைப் பாதுகாக்கிறது என்பது உண்மையே. ஆயினும் பெருமளவு நேரத்தையும், இந்த நாடுகள் வழங்கும் உதவியையும் செலவு செய்து பெறப்படும் இவ்வாறான கல்வி யாருக்காவது பயன் தரக்கூடியதா என்ற கேள்வி எழுகிறது.

இங்கு நாம் கவனம் செலுத்தும் துறைகள் காலத்தைக் கடத்தி, இங்கு மாணவர்களாகத் தொடர்ந்து இருக்கப் பயன்படுவன. சில சமயங்களில் இலங்கையில் உள்ளது போன்றே பணம் ஈட்டக்கூடிய அல்லது எமது சமூகத்தில் மதிப்புத் தருகின்ற துறைகளையே எம்மவர்கள் தேர்வு செய்கின்றனர். இந்தத் துறைகளால் எமது சமூகத்துக்கு என்ன பயன் உண்டு என யாரும் கவலைப் படுவதில்லை.

எமது சமூகம் மிகவும் நலிந்து, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளபோது, அந்தச் சமூகத்தைச் சாட்டி இங்கு வந்துள்ள நாம், அந்தச் சமூகத்துக்குப் பயன் தரும் கல்வித் துறைகளைத் தேர்ந்தெடுத்தல் அவசியம். எங்களது எதிர்காலம் எமது தாய்நாட்டில்தான் என்பதை நாம் ஒருபோதும் மறத்தல்கூடாது. அவ்வாறு நாம் திரும்பிச் செல்கையில் வெறுமனே எமது பொருளாதார வளங்களுடனும், சமூகத்துக்குப் பயன் விளைவிக்காத கல்வியுடனும் செல்வதால் எதிர்காலத்திலும் எமது தேசம் சிறத்தல் சாத்தியமில்லை.

எமக்குள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி எமது தேசத்துக்கு எதிர்காலத்தில் பயன் தரக்கூடிய துறைகளில் அறிவைத் தேடிச் சேர்த்துவைத்தல் இன்று நாம் எமது சமூகத்துக்குச் செய்யும் பெரிய உதவியாக இருக்கும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயந்திரமான ஐரோப்பிய வாழ்விலும் சீரழிவுக் கலாச்சாரத்தில் சிக்கித் தவிக்கிறார்கள் ஈழத் தமிழர்கள். இப்படியான சூழ்நிலையிலும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளிவருகின்ற தமிழ்ச் சஞ்சிகைகளில் குறிப்பாக சில சஞ்சிகைகளே, ஐரோப்பிய சீரழிவுக் கலாசாரத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அவற்றில் சுவடுகளும் ஒன்று. தொடர்ந்தும் தங்கள் கருத்துகள் தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று விரும்புகிறேன். அத்துடன் தங்கள் சஞ்சிகையில் சிறு குறைபாடு உள்ளது. அதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது தங்கள் சஞ்சிகையில் ஒருசில 'விளம்பரங்கள்' இடம்பெறுகின்றன. அவற்றைத் தவிர்த்தால் நல்லதென நினைக்கிறேன். ஏனெனில் அரசியல் சஞ்சிகையின் தரத்தைக் குறைப்பதுபோல எனக்குத் தோன்றுகிறது. தங்கள் கருத்து எப்படியோ?

*எம்.கண்ணதாசன்*
*சூரிச்,*
*சுவிஸ்*

*ஆசிரியர்,*
*சுவடுகள்*

*பேரன்புடையீர்,*

*நீங்கள் அன்புடன் அனுப்பிவைத்த சுவடுகள் 35ஆவதுஇதழ் கிடைக்க மிக்க மகிழ்ந்தேன். உள்ளடக்கமும் அமைப்பும் சிறப்பாக இருக்கவே ஒரே மூச்சில் படித்துப் பாராட்டுகள் கூறத்தோன்றியது. உடன் எழுதத் தொடங்குகிறேன்.*

*பலவித இன்னல்களுக்கிடையில் தமிழை வளர்க்கும் உங்களையொத்த கடலோடிகள் முயற்சியைக் கண்ணுற எதிர்காலத் தமிழ் இலக்கிய முன்னேற்றத்தின் அறிகுறிகளை உணர்கிறேன். 'திட்டத்திட்டத் திண்டுக்கல் வைய வைய வைரக்கல்' என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது.*

*அங்கதச் சுவை நிரம்பிய 'கோடிப்புறம்' சுவீடனைச் சேர்ந்த ஜெயத்தின் 'சலனங்கள்' உள்ளத்தை உருக்கும் சிறுகதை. இன்றைய அவல*

## நாற்றிசை

www.tamilarangam.net

நிலையினை அம்பலப் படுத்துகிறது. இயக்கங்களினால் ஏற்படும் சீர்குலைவு, அக்கரையில் நிலவும் அன்றாட வாழ்க்கை முறைகள், கடல்கடந்தும் சாதிக் கோட்பாடுகளைப் பேணும் சிற்றுள்ளம் இவை இழையோடிய படைப்பு சிறப்புடன் அமைந்துள்ளது.

துங்கள் தலையங்கம் நடுநோக்குடன் வரையப் பட்டிருப்பதை உணர்கிறேன். குறிப்பாக இந்திய அரசின் (அ)சாணக்கியப் போக்கு குறித்த குறிப்பு நல்ல கணிப்பு.

'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' அழுகல் பூக்களாக இருப்பதால் இனங்காட்டி உணர்த்தும் கட்டுரை - சிந்தனைக்குரியது. உங்கள் முயற்சியில் பங்குகொள்ளும் அனைவருக்கும் வாழ்த்துகள் -

அன்புடன்
கே.கணேஷ்
தலாத்து ஓயா
● இலங்கை

(சோலைக்கிளியின் கடிதத்தில் இருந்து)

இப்போது சமூகநிலைமை சற்று மாறியிருக்கிறது. முஸ்லிம்களைக் கொலை செய்வது முழுத் தமிழ்ச் சமூகமும் இல்லை. தமிழ் இளமும் வெறுக்கக்கூடிய மனுக்குலத் துரோகிகள் சிலரே என்ற தெளிவு முஸ்லிம் மக்கள் மத்தியில் பிறந்திருக்கிறது. அந்த வகையில் பூரண மனநிறைவு ஏற்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் சாதாரணமாக தமிழ்ச் சகோதரர்கள் முஸ்லிம் பிரதேசங்களில் நட்புடன் புழங்குகிறார்கள். திருமண வீடுகளுக்குக்கூட இரு சமூகத்தினரும் சென்று வருகிறார்கள். மனிதநேயத்தை யாரால் ஐயா தடுத்து நிறுக்க முடியும்? தென்னாபிரிக்காவில் இப்போதும் கலப்பு மணங்கள் நிகழவில்லையா? சில மனுக்குலத் துரோகிகளின் செயலால் சமூகங்கள் பிளவுற்றிருந்தது உண்மைதான். இப்போ மக்கள், (இரு சமூகமும்) இனங்கண்டு விட்டார்கள். இப்போது ஆட்கடத்தல்கள் எதிர்விளைவுகள் எதுவும் இல்லை! அப்பாடா! மனிதன் மனிதனாக வாழும் காலம் விரைவில் வரட்டும். அதுவும் நமது தலைமுறைக்குள் நண்பரே!

செயிலான் வீதி
கல்முனை
● இலங்கை

ஆசிரியர்
சவடுகள்

முன்னர் அனுப்பிய தமிழாக்கங்கள் பல காலமாகப் பிரசுரமாகாத காரணத்தால், அவை பிரசுரமாகா எனக் கருதி அண்மையிற் பாரிஸ்முரசுக்கு அனுப்பி வைத்தேன். அதன்பின் சவடுகள் மே இதழில் அவற்றில் ஒன்றும் அடுத்ததிற் பிற வருமென்ற அறிவித்தலும் கண்டேன். பாரிஸ் முரசு போரின் மைந்தர், சுவர்க்கடிகாரம், தபாற்காரனின் அச்சம் ஆகிய மூன்றையும் பிரசுரித்தது. இவ்வாறு ஏற்பட்டமைக்கு வருந்துகிறேன்.

மணி
● லண்டன்

இந்தக் கடிதம் உரிய காலத்தில் எம்மிடம் கிடையாமையால் தபாற்காரனின் அச்சம் யூன் இதழில் பிரசுரமாகியது. இவ்வாறே, சோலைக்கிளியின் 'மரங்கள் காப்பதைப் போன்ற இரவு' கவிதை சவடுகளிலும், நான்காவது பரிமாணத்திலும் (கனடா) ஒரே இதழில் (மே) வெளியாகியது. இதனால் கவிஞர் சோலைக்கிளி, மொழிபெயர்ப்பாளர் மணி ஆகியோருக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு மனம் வருந்துகிறோம்.

● சவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செல்விக்கு சர்வதேச விருது

கோகுலன்

உலகில் தலைசிறந்த விருதுகளில் ஒன்றாகக் கருதப்படும் விருதொன்று இலங்கையைச் சேர்ந்த செல்விக்கு வழங்கப் பட்டுள்ளது. செல்வநிதி தியாகராசா என்ற இயற்பெயர் கொண்ட செல்விக்கு International PEN (Poets, Essayists and Noveliist) என்ற அமைப்பு தான் வருடாந்தம் வழங்கும் சிறப்புப் பரிசை இம்முறை வழங்கியுள்ளது. தமது நம்பிக்கைக்காகவும், இலட்சியங்களுக்காகவும் எழுத்துத் தளத்திலும், கலைத் தளத்திலும் பணிபுரிந்தவர்களையும் பணி புரிபவர்களையும் கௌரவிக்க இந்த விருது வழங்கப் படுகிறது. உலகில் இவ்விருது மிக மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வாறான உலக விருது ஒன்று ஈழத்தவர் ஒருவருக்கு வழங்கப்படுவது இதுவே முதற்தடவை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இளம் வயதிலேயே முழுநேரமாகப் பங்கெடுத்த செல்வி, பல கவிதைகளையும் எழுதியுள்ளார். இவரது கவிதைகள் ஈழத்தில் வெளியிடப்பட்ட பெண்களின் கவிதைத் தொகுதியான *சொல்லாத சேதிகளிலும்* பத்திரிகைகளிலும் வெளியாகின. கடந்த வருட நடுப்பகுதிவரை யாழ் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பயின்று கொண்டிருந்த செல்வி நாடகங்களைத் தயாரித்துள்ளதுடன் பல தரமான நாடகங்களிலும் நடித்துள்ளார். செல்விக்குக் கிடைத்துள்ள இந்த விருது பற்றி



JACINTO/REPORTERS SANS FRONTIERES

அனைத்துத் தமிழர்களும் பெருமை கொள்ளலாம்; ஆனால் அவ்வாறு பெருமை கொள்ள முடியாத வகையில் அவர் தற்போது தமிழீழச் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார் என நம்பப்படுகிறது. கடந்த வருடம் ஒகஸ்ற் மாதம் புலிகளால் கைது செய்து சிறையில் வைக்கப்பட்டுள்ள செல்வி, விடுதலையானது பற்றியோ எதற்காகக் கைது செய்யப் பட்டார் என்பது பற்றியோ எதுவித தகவல்களும் இதுவரை வெளிவரவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்